1088
1919

சிவமயம்.

ஸ்ரீ சங்கராசாரிய குருப்யோ நமః

குட்டுக் கோலாற் குநிண்டு
துள்ளி யெழுந்த தூத்துக்குடி முத்தைய பிள்ளை
கடாவை யடக்குங் கட்டாரி.

இது

கோவிலூர் மடாலயம்

ஸ்ரீ வீரசேகர ஞாந தேசிக சுவாமிக ளவர்களின்

பாதசேகரரும்

உபய பாஷா வேதாந்தப் பிரவர்த்தகாசாரியரும் ஆகிய

ஸ்ரீ காசிகாநந்த சுவாமிக ளவர்களால்

விடப் பெற்று

சென்னை

கோமளேசுவரன் பேட்டை

சச்சிதாநந்த அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப் பெற்றது.

1919.

185181.

உ

சற்குருப்யோ நம:

சூட்டுக் கோலாற் சூடுண்டு,

துள்ளி யெழுந்த தூத்துக் குடி முத்தைய பிள்ளைக்

கடாவை யடக்குங் கட்டாரி.

ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். 214 (திருக் குறள்)

நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும். 476

திரு வாவடு துறை யாதீனத்திற் சம்பளம் பெற்றுத் தென் சமுத்திரக் கடையி லுள்ள தூத்துக் குடியில், "திரு வாவடு துறை யாதீன சைவப் பிரசாரகர்" என்னும் பெயருடன், வேதாந்தம் சைவ சித்தாந்தம் என்னும் இரண்டினையுங் கைக் கொண்டு வசிக்கும், பொ. முத்தைய பிள்ளை யென்பார் "ஸ்ரீமத் காசிகாநந்த சுவாமியார் கட்டுரையின் மேல் கடா" என்றொரு சிறு ஆபாசச் சுவடியினை யெழுதி, சிவ நிந்தை, சிவாதார நிந்தை, நீத்தார் நிந்தை, வேதாந்த சாஸ்திர நிந்தை முதலிய நிந்தைகளை நிரம்பப் பெற்று, வெளியிட்டிருக்கின்றனர். அவரால் வெளியிடப் பெற்ற அப் புத்தகம் தன் பெயருக் குரிய கடா விஷயங்களைத் தாங்காது, விடைக் குரிய விஷயங்களையும், 4-வது பக்கத்தில், "இனியேனும் இவரும் இவர்சார்பினரும், திருமந்திரம் முதலிய திரு வாக்குகளுக்குச் சைவ சித்தாந்தப் பெரியாரிடம் பொருள் கேட்டு உண்மை யுணர்வார்களா?" என்றும், 5-வது பக்கத்தில் "தருக்க ஞாநத்தில் வல்லவர் போன்று தம்பட்ட மடிக்கும் சாமியார் அறியாமைக்குக் காரணம் யாதோ?" எனறும், "இப்பொருள் கூறுதல் இவர் மதத்தினர்க்குப் பழம் பாடமே, ஜீவன் ஈப்வரன் என்னுஞ் சொற்களுக்கு இவர் கூறிய பொருளே பொருளென, மாயா வாதச் சார்பில்லாத வடமொழி வல்லார் முன் சாதிப்பரா?" என்றும், 7-வது பக்கத்தில் "எத்தடிப்புப் பற்றி" என்றும், "செட்டியா ரவர்க ளெழுதியதும் பொய்யாதலின் அதற்கு இவ்வளவு சிரமப்பட வேண்டாமே. இதனானே, பொய்யை மெய் யென்று வீணுச்சிரமங் கொள்ளும் புண்ணிய முடையார் சுவாமியாரும் இவர் மரபினரு மென்பது விளங்க வில்லையா?" என்றும், 9-வது பக்கத்தில் "சுவாமியாரையும் இவர்மரபினரையும் மாயா வாதிக ளென்று எந்தச் சைவர்கள் கூறினும், நாங்கள் மாயா வாதிக ளல்லர். வேதாந்திக ளென்று மட்டும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்களே யன்றி,

வைதிகர்களாகிய நீங்கள் நாம் மாயா வாதிகள் என்று கூறுதல் பொருந்துமா ?" என்றும், 12-வது பக்கத்தில், "சாஸ்திரங்களைக் கேட்குமுறையிற் றக்கோரிடங் கேட்டுண்மை யுணராது, மனம் போன வாறு சொல்லுதலும் எழுதுதலும் முறையாகுமா ?" என்றும், "இவர் எத்துணிவு கொண்டெழுதினர்" என்றும். 13-வது பக்கத்தில் "சுவாமியார் தர்க்க சாஸ்திரத்தில் வல்லவர் போன்று தம்மைப் பலவிடங்களினும் வியந்து கொள்ளுகின்றனரே" என்றும், "இனியேனுங் கவனித்து அங்கீகரிப்பாரா" என்றும், "இவருக்குத் தாயுமான சுவாமிகள் மீது இத்துணைக் கோபம் வந்தமைக்குக் காரணம் என்னையோ ?" என்றும், 14-வது பக்கத்தில், "தெரியாதாயின், வாசத்திற்கு வரும் போதாயினுந் தெரிந்து கொள்ள வேண்டாமா ?" என்றும், "தன் நாவைக் காத்துக் கொள்ள முடியாமல், படிப்பின் கர்வம் பற்றியா ?" என்றும், "சித்தாந்த நூல்களைச் செவ்வனே தெரிந்து கொள்ளாக் குறை பற்றியா ?" என்றும், 15-வது பக்கத்தில், "ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் முன்னர் பௌத்த மதத்தை வெல்லுதற் பொருட்டு ஏகான்ம வாதஞ் சாதித்து, பின்னர்த் தாமுய்ய வேண்டிச் சைவ சித்தாந்த நெறியைத் தலைக்கூடி நின்று" என்றும், 16-வது பக்கத்தில் "இவரும் இவர் சார்பினரும் ஒரு வார்த்தையாவது குற்ற மறச் சொல்ல விரும்பாது, வெற்றுரையாகப் பலவாய வார்த்தைகளைச் சொல்ல விரும்பி, ஒரு நூலையாவது கசடறக் கல்லாது, பல நூல் வல்லாரென்றறியாதார் புகழ, மேலெழுந்த வாரியய், பல நூல் படித்தவ ராதலின், அது பற்றி இப் புரட்டுக் கதை கூறினாரா ?" என்றும், "அந் நூலையும் அவ்வுரையினையும் முறையாய்ப் பாடங்கேட்டு நன் குணர்ந் தெழுத வேண்டும்" என்றும், "இனியேனும் படித்துச் சிவ ஞான சுவாமிகளை பற்றிக் கூறிய குறைக்கு, மன்னிப்புக் கேட்டுய்வரா ?" என்றும், "கற்றறிந் தடங்காக் குறையினாலேயே யென்பதை மறுக்கமுடியுமா?" என்றும், 17-வது பக்கத்தில் "இவர் மதத்திற்கு முதலாய ஆசிரியராய் விளங்கிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள், தா முய்தற் பொருட்டு ஆண்டா னடிமைத் திறம் பேணி, பௌத்த மதத்தை வெல்லுதற் பொருட்டு ஏகாத்ம வாதஞ் சாதித் திருக்கவும், அவ் வுண்மை யறியாது அவர்க்குப்பின் வந்த இடையாய ஆசிரியரும், கடையாய ஆசிரியரும் ஏகான்ம வாதமே ஆதி சங்கராசாரிய சுவாமிகள் கொள்கை யென்று தம்பட்ட மடித்துத் திரிவது, நுணுகி யாராயும் அறிவின்மை என்பது மறுக்க முடியுமா ?" என்றும் "இனியேனும் அறிந்து கொள்ளுவரா ?" என்றும், 18-வது பக்கத்தில், "இவர் மதத்தைத் தம்மட்டில் வைத்துக் கொள்ளாது, பெரியார் கருத்தும் இதுவே யென்று அவர்கண் மீதும் தமது மதத்தை யேற்றுகின்றனர். அந்தோ ! இத் தீச் செயலுக் கென்ன பய னடைவரோ?" என்றும், "இப் புரட்டு முகவுரையும் வாங்கிச் சேர்த்து வெளியிட்ட சுவாமியாருக்கும் திருக் குற ளாராய்ச்சி யுண்டென்று ஒப்புதல் கூடுமா? தாங் கற்ற நூல்களினும் தமக்கு நுணிகிய வாராய்ச்சி யுண்டோ வில்லையோ என் றையுறுட செய்வதை விட, தம்மளவில் தா மடங்குதல் முறைமை யென்பதை யினியேனும் அறிந் தடங்குவாரா ?"

என்றும், "ஷணப்பன் வீட்டுக் கோழி தானே விலங்கில் மாட்டிக் கொண்
டது போன்று, யோசனை யின்றித் தாமே மாட்டிக் கொண்டார்" என்றும்,
"இனி யேனும் இத்தகைய குற்றங்களில் மாட்டிக் கொள்ளாது" என்றும்,
உள்ள வசை மொழிகளையும் தன் னகத்தே தாங்கி வந்திருத்தலின், அப் புத்
தகத்திற்குக் "கடா" என்னும் பெயர் பொருத்த முடைத் தன்றாம். பின்
னர், எப்பெயர் கொடுக்கின் பொருத்த முடையதாம் எனின், "வேதாந்தம்
சித்தாந்தம்" என்னும் இரண்டுங் கெட்ட, பெயர் மாத்திரையாற் சைவ
சித்தாந்தத்தைக் கைக் கொண்ட, "தூத்துக் குடி, பொ. முத்தைய
பிள்ளையின் தூஷணைச் சுவடி" எனக் கொடுக்கின் நலமாம். அப் புத்தகத்
தில் "வினா" எனப் பெயர் தந்து இருபது போலி வினாக்கள் வினவுகின்ற
னர். அவர் எமக்கு எழுதிய கடிதத்தில், "அறியாமை யுடையேன். உண்
மை யறிய விரும்புகின்றேன்" என்று எழுதி யிருக்கின்றமையின், அறியா
மையின் பாற் பட்ட வினாவாய், பின் கடாவில் அதனைக் கடந்து கடாவு
கின்றமையின், அவற்று ளடங்காது, போலி வினா எனப் புதுப் பெயர்
தாங்கி நின்றமை யுணர்க.

வினாவாவன:—1. வேதாந்த சாஸ்திரங்கள் முத்தித் தசையில் முப்
பொருள் நித்திய மென்று கூறுகின்றன. 2. திரு மந்திரம் வேதாந்தத்
தைக் கூறுமிடத்து, மகா வாக்கியத்திற்கு "முத்தியில் முப் பொருள் நித்
திய மென்று கூறுகின்றது. அதன் தொடர்பு சில. 3. உபமானம் பொ
ருள் பொருந்த வில்லை. 4. திருஷ்டாந்தம் இரு பொருளைக் கூறுகின்றது.
5. 'பொய், அநித்தியம், இல்லை, மாயை' என்பவற்றிற்கு நிலையாமை
யென்பது பொருள். 6. சிவ ஞான சுவாமி யுள்ளிட்டார் வைதீக சைவ சித்
தாந்திகள். 7. மாயா வாதிகள் வேதாந்திகட்கு வேறாய் ஒருவ ருளர். 8
ஞான வாசிட்டத்திற்கு முத்தியில் முப் பொருள் நித்திய மென்று கொள்க.
9. சிவ ஞான வள்ளலார் முப் பொருளை நித்திய மெனக் கொண்ட வேதாந்த
சித்தாந்த சமரச சைவராவர். முத்தாத்துமாக்கட்கு முத்தித் தசையில் இரு
பொரு ளுள. பெத்தாத்துமாக்கட்குப் பெத்த தசையில் முப் பொரு ளுள.
10. வாசிட்டத்தில், பாசம் நித்திய மென்று வேதாந்திகள் கொள்கின்றனர்.
11. கருட பாவனையின் வாக்கியம் பொருத்த மன்று. 12. திரு மந்திரத்
தைத் தேவி கோட்டை ஜெமீந்தார் கைக் கொண்டதற்காகக் கொண்டது.
13. திரு மூல நாயனாரை உண்மையாகக் குரு வென் றங்கீகரிக்கின்றோம்.
14. சைவ சித்தாந்திக ளறிவிலிக ளலர். 15. உமாபதி சிவாசாரியர் சமஸ்
கிருதத்தில் ஒரு நூலுஞ் செய்ய வில்லை. ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்
துவைத சித்தாந்தியே. 16. சிவ ஞான சுவாமிகள் "மோக்ஷத்தில் ஜீவத்வம்
கெட்டுச் சிவ ரூபம் ஜீவன் ஆகின்றான்" என்கின்றனர். 17. ஸ்ரீ சங்கரா
சாரிய சுவாமிகள் அபிப்பிராயம் முப் பொருள் நித்தியமாகிய துவைத வாத
மே. 18. வேதாந்திக ளனைவரும் படித்தவர்களா? 19. பசு பதி பாசத்திற்கு
அந்நியமான நித்தியப் பொருள் யாது? 20 முகவுரையி லுள்ள குறள் திரி
வுடையது" என்பனவாம்.

1. “தர்மிகளுக் கயிக்கியமே யன்றித் தருமங்களுக் கயிக்கிய மின்று” மென்று கூறியதனால், இருபொருள் நித்திய மென்று யா மெழுதி யிருப்பதாகச் சூட்டுக் கோலை, யெம் மிடத்து வந்து, சரணாகதி யடைந்து கேட்கு முறையிற் கேளாக் குறையாலும், முன்னர் வேதாந்தியாயிருந்து பின்னர்ப் பலேச்சையாற் சைவ சித்தாந்தியாகிய காரணத்தாலும், எழுதி யிக் கட்டாரியாற் றூக் குண்டனர். விவகார காலத்தில் உபதேசிக்கும் போதும், வாதம் நடக்கும் போதும், பேதமாக வைத்துத் தான் உபதேசிக்கவும் வாதஞ் செய்யவும் கூடும். இரு தருமிகள் இருக்கின்றன என்று கேட்ட சிஷ்யனுக்கு, இரு தருமிகளை யநுவதித்துச் சாஸ்திரங்களா லுபதேசிக்கப்படுகின்றது. அவ்வாறே, விவகார காலத்தில் வாதம் நடக்கும் போது அநுவதித்துக் கூறியதாம். அதனை யுணராது, இரு பொருள் நித்திய மென் றுணர்ந்து றுமுகின்றார். “சிவனுக் குரிய எண் குணங்கள் சீவனுக்கு வந்து பொருந்து கின்றன” என்பதன் பொருள், மோக்ஷ காலத்திற் சீவத்துவங் கெட்டு, சிவ ரூபமாகுதலால், சிவனுக் குரிய குணங்கள், மறையாது வெளிப்படுகின்றன என்பதாம். அவ்வா றின்றி, ஜீவன் வேறா யிருப்பவன். அவன் மீது, சிவனுக் குரிய குணங்கள் கஞ்சுகம் போன்று வந்து மறைக்கின்றன என்று பொருள் கொள்ளற்க. “சாஸ்திர சித்தாந்த லேச சங்கிரகம்” என்னும் கிரந்தத்தில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரவர்கள் இவ்வாறே யெழுதி யிருக்கின்றார்கள். அக்கிரந்தம் பார்க்க அவர்க் காற்ற லின்மையின் சமஸ்கிருத ஞான முடையார்பாற் சரணாகதி யடைந்து கேட் டுணர்வாராக. உண்மைச் சித்தாந்தத்தைக் கூறுங்கால் ஒரு பொரு ளென்றும், ஏனையர்க் கறிவித்தற்கு இரு பொருள்கள், இரு தருமிகள், சிவனுக் குரிய குணங்கள் ஜீவனுக்கு வந்து பொருந்துகின்றன என்று விவகாரத்தை யநுவதித்துப் பேதமாகவும், எழுதி யிருப்பதனால் முரணின்மை யுணர்க. “ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷித ரவர்கள் கருத்தோடும் மாறுபடின், இவர் மதம் யாவர்க்குத் தான் சம்மதம்” என்று எழுதினர். கருத்தோடும் என்ற வும்மையால், இவர் கருத்தோடும், இவரைச் சார்ந்த சிவ ஞான போத முள்ளிட்ட 14 சாஸ்திரத்தினைக் கைக் கொண்டார் கருத்தோடும், மாறு படுகின்ற தென்று கருதுகின்றனர். 14. சாஸ்திரமும் முத்தியில் முப் பொரு ளுண் டென்று தூலமாகக் கூறுகின்றமையின், அதனோடு மாறுபடுதல் தேற்றமே. ஸ்ரீ அப்பய்ய தீக்ஷித ரவர்க ளியற்றிய ‘பரிமளம், வேதாந்த சாஸ்திர சித்தாந்த லேச சங்கிரகம். உபக்கிரம வுபசம்மாரம்.” என்பன வாதி நூல்களையும், அவர்கள் ஆசாரியராய நரசிம்ம சுவாமிகள் இயற்றிய “பேத திக்காரம்” என்னும் நூலினையும் படித்து, அதன் பின் “அவர்கள் கருத்தோடும் மாறுபா டாகாதா?” என்று வினவினரா? அவ்வா றின்றித் தம் மனம் போன வாறு ஆருடம் பார்க்குத லழ கன்றே. அந் நூல்களைச் செவ்வனே யாராய்ந்து, அவ்வாறே மாறுபடா தறைந்தா மென் றறிக.

2. சூட்டுக் கோலிற் காண்பிக்கப் பட்ட “இரு மந்திரச் செய்யுளும் ஏனைச் செய்யுளும், ‘ஜீவன் பரன் சிவன்’ என்னும் மூன்று பொருளைக்

கூறுகின்றன வென்பது வெளிப்படை ” யென்றும், “ திரு மூல நாயனார் திரு வாக்கிற்கு மாறாக ஒன்றாந் தன்மையினையே தத்துவ மசி யுணர்த்துவ தென்றல் எவ்வாறு பொருந்தும் ?” என்றும் வரைந்தனர். இதனால், முத்தியில் ‘ சீவ சேதநம், பர சேதநம், சிவ சேதநம் ’ என மூன்று சேதநப் பொருள்களும், பாச மாய சடப் பொருளும், நித்தியமாய் இருந்து, ‘ நான்கு பொருள் நித்திய ’ மென்று கூறுகின்றவர் திரு மூல நாயனா ரென்று கருதுகின்றனர் போலும். ஸ்ரீ மூல நாதர், “ வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தம் ” என்னும் ஷடாந்தங்களையும், சமஸ்கிருதத்தி லுள்ள ‘ மந்த்ர மாலிகா ’ என்னும் நூலினும், தமிழி லுள்ள ‘ திரு மந்திரம் ’ என்னும் நூலினுங் கூறினவ ராயிற்றே. அவ்வாறு கூறியவர் வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்களின் பொருளை யுணராது, வேதாந்த சாஸ்திரங்கள் முப் பொருள், அல்லது நாற் பொருள் நித்திய மென்று கூறுகின்றன என்பாரா? “ அம்பத மேலைச்சொருப மாவாக்கியம், செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானே.” என்ற வாக்கியத்தால் ஒரு பொருளே யுள தென்றும், “ திரிமலந் தீர்ந்து அவன் சிவனும். நான் என்றும் தான் என்றும் இரண் டில்லை. மல மூன்றுஞ் செற்றவர் சுத்த சிவமாவர். துரியமும் ஈசனொடு ஒன்றாக்கால் பின்னையும் வந்து பிறந்திடும். அறிவு என் வடி வென்று அறிந் திருந்தேன், ஏகமான தவம் உறு தத் துவ மசி. எல்லாம் அறிந்த அறிவினை நான் என்னில் எல்லாம் அறிந்த இறை யெனலாம். தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள். தனை மாற்றி யாற்றத் தரும் ஞானி. தனையாய்ந் திருப்பது தத்துவம் ” என்பன வாதி வாக்கியங்களால் ஒரு பொருளே யுள தென்றும், கூறியிருப்பவும், அவற்றை யுணராது முப் பொருளைக் கூறுதல் வெளிப்படை யென்றும், திரு மூலர் திரு வாக்கிற்கு மாறாக வுணர்த்துவ தென்றல் எவ்வாறு பொருந்தும் ? என்றும் எழுதி யிடர்ப்பட்டு, அந்நூல் கொண்டும், சூட்டுக் கோல் கூறியது கொண்டும் யாவரு முணர்ந்த பொருளை யுணராமையின் “ அஞ்ஞாநம் ” என்னுந் தோல்வித் தாநத்தை யடைந்தனர்.

இன்னும் 2393. “ சிவமாதல் வேதாந்தம் ”. 2401. ‘ அநாதி ஜீவன் ஐம் மலமு மற்று அப்பாலாய் அநாதி யடக்கித் தனைக் கண்டு அரனாய்த் தன் ஆதி மலம் கெடத் தத்துவாதீதம் வீறாவு நீர் பாலாதல் வேதாந்தத்து உண்மையே. ’ என்பன வாதி பல செய்யுட்களிலும், ஒரு பொருள் உண் டென்பதைக் கூறியிருக்கின்றார். நீர் கெட்டு எங்ஙனம் பாலாகின்றதோ, அங்ஙனமே ஜீவத்துவங் கெட்டு, சிவ ரூபமாகிய பிரஹ்ம மாதல் வேதாந்தத்தின் சித்தாந்தமாம் என்பது கருத்தாம். பாசம் அநித்திய மென்பதற்கும், பசுத்துவம் நீங்கிச் சேதந மொன்றே முத்தியி லுள தென்பதற்கும் பிரமாணமாக எண் ணிறந்த செய்யுட்கள் திரு மந்திரத்தி லுள தென் றுணர்க.

‘ அக் குழையன் இவனே ’ என்பது போன்று பொரு டரும் விட்டு விடாத விலக்கணைக்கு, ‘முன்னர்ப் பாசத்தோடு கூடிப் பசுவாயிருந்தவனே

இப் பொழுது பிரமத்தோடு கூடிப் பிரமமா யிருக்கின்றா னென்பது பொருளா?" என்று வரைந்தார். அஃதோ டமையாது, திரு மந்திரம். 2634-வது செய்யுளும், சிவ ஞான போதம் 11-ம். சூத்திரமும், 'ஜீவன், முத்தியில் வேறாய் உள்பொரு ளென்றே கூறுகின்றன' என்று மிகைபடக் கூறிச் சித்தாந்தப் படுத்தி, 'அஞ்ஞானம். அதிகம்' என்னுந் தோல்வித் தானங்களை யடைந்தனர். சிவ ஞான சுவாமிகள் என்னுந் தம்பிரான் என்பார், 'சோயந் தேவதத்தன்' என்னுந் திருட்டாந்தத்தோடு திரு மந்திரத்திற் கூறிய விட்டு விடாத விலக்கணையை, தமக் குடன்பா டன்றென்று கண்டித்துத் திரு மந்திரத்தை யொரு புடை யொதுக்கி யிருப்ப, அதனை யுணராது, சாதகமாகக் கருதி வினவுகின்றார். திருஷ்டாந்தத்தில் 'அவன் இவன்' 'அக் குழையன் இவன்' என, ஒரு பொருளே யுள்ளது. இவர் கூறும் தாஷ்டாந்தத்தில் 'பதி பசு பாசம்' என மூப் பொருள்க ளுள்ளன. திருஷ்டாந்தத்தி லுள்ள பரோக்ஷத் தன்மை அபரோக்ஷத் தன்மைகளையும், குண்டல மாகிய விசேடணத்தையும், நீக்கி விடின், விவகார காலத்திற் பொருளொன்றே யாம். இவ்வாறு, தாஷ்டாந்தம் இன்மையின் பதிப் பொருளோடு பசுப் பொருளையும் பாசப் பொருளையும், ஒன்று சேர்க்கின் பெத்த தசையினும் முத்தித் தசையில் விசேட மின்றாம். பாசம் நாசமாயவழி. பசுத் தன்மை, பதித் தன்மையாய விசேடம் நீங்கின் சேதந மொன்றே யெஞ்சும். அதனைப் பிறர்க் குணர்த்துவான், சிவம் என்றும் பிரஹ்மம் என்னும் சாஸ்திரங்களில் வழங்கப் பெறு மெனக் கொள்க. இவ்வாறு, கொள்ளாக்கால் திருட்டாந்தத்தில், குழையோடு கூடி யிருந்த புருடன், குழை. யில்லாக்கால், குழை யின்மை யென்னும் அபாவமாய விசேடணத்தோடு கூடி யிருப்பனோ? தேவ தத்தன் பாசமாகிய அக் காலம் என்னும் விசேடணத்தை விட்டு, இக் காலமாய விசேடணத்தோடு கூடி யிருப்பனோ? அவ்வாறு, துஷ்யது துர்ஜந ந்யாயத்தாற் கொள்ளினும், பாசமாய அக் கால, இக் கால, குண்டலங்களும், தேவ தத்தன் புருடனாய பொருள்களுமாய் இரண்டே யுள்ளன. பெத்த தசையிற் பாசத்தோடு கூட்டுற வுற்ற பசு, முத்தி தசையில் பாசத்தை விட்டால் சிவத்தோடு கூட்டுற வுறும். பாசம் நித்திய மாகலின், பாசத்தை விட்டுச் சிவத்தோடு கூட்டுற வுறல் பொருந்தாதாம். இவர், பிறாண்டு பாசம் அநித்திய மெனக் கூறியவாறே பாசம் அநித்திய மெனக் கொள்ளின், பாசம் நீங்கிய வழி, பசு, பசு என்னும் பெயரைப் பெறாதாம். பாசத்தாற் கட்டுறலால் பசுவாய சேதநம் பசு என்னும் பெயரைப் பெற்றதே யன்றி, இயற்கையிற் கட்டுறற்கு முன் பசு என்னும் பெயரைப் பெற்றிலது. ஆகலின், பாசம் நீங்கிய விடத்தும், பசு சுத்த சேதந மாக விருக்கின்றமையின், சுத்த சேதநமாய சிவத்திற்கும், அதற்கும் பேத மின்மையின், அபேத மாகவே யிருக்கு மென் றுணர்க. தத்துவ மசி மகா வாக்கியம் சேதநங்கட்கு ஐக்கியத்தினைக் கூறிச், சடப் பொருட்கு அநித்தியத்தினை யறை கின்றதே யன்றிச், சடமாய பாசத்திற்கும், பசு, பதி, என்னுஞ் சேதநங்களோடு ஐக்கியத்தினைக் கூறுவதின்றாம்.

தத்துவ மசி மகா வாக்கியத் திருட்டாந்தத்தில், முப் பொரு ளின்றாகலின், சட சேதனமாய முப் பொருள் நித்தியத்துவத்தைக் கூறுவதற்கு, அவ்வாக்கியமும், அத் திருட்டாந்தமும் முழு விரோதமாம். முன்னர்ப் பாசத்தோடு கூடிப் பசுவா யிருந்தவன், வேதாந்த சாஸ்திரம், பிரஹ்ம ஞாநாசாரியாது உபதேசங்களால், பாசத்தை நசிப்பித்துத், தனது முன்னிலைமையாய பிரஹ்மமாயினன் என்றும், உண்மையில், அஃதாவது பரமார்த்தத்தில் பசு என்றொரு பொரு ளில்லை யென்று முணர்க. திரு மந்திரம், சிவ ஞாந போதம் கூறியது பேத நிலைக்கண் என்று பித் தின்றிக் கொள்க.

"ஒரு சேதனஞ் சுத்தமா யிருந்து அந்தக்கரண உபாதியைக் கூடிற்றா? அசுத்தமா யிருந்து அந்தக்கரண உபாதியைக் கூடிற்றா? சுத்தமா யிருந்து கூடிற் றெனின் எதற்காகக் கூடிற்று? எப்பொழுது கூடிற்று? உயிர் ஆணவ மலத்தை யநாதியே கூடியவாறு போல எனின், அது சுத்தப் பிரமமாகுமா? அநாதியே கூடிய உபாதியைத் தானே நீக்குதல் எவ்வாறு கூடும்? கூடுமாயின், முன்னரே நீக்கி யிருக்கலாமே? உபாதியைக் கூடுதலும் பிரிதலும் இயல் பெனின், பிரிந்த பின்னருங் கூடு மென்றாகி, பிரிவதற்காகச் செய்யுஞ் செயல்க ளெல்லாம் வீண் செயல்களா யன்றோ முடியும்? சைவ சித்தாந்தத்தில் ஆன்மா அநாதியே மலத்தைச் சார்ந்து பெத்தனாய் நின்று, பின்னர் குரு கிருபையால் மலத்தினின்றும் நீங்கிச் சிவத்தைச் சார்ந்து முத்தனாகு மென்று கூறுதலால், மலத்தைச் சார்ந்து நின்ற வுயிர், அதினின்றும் நீங்கிய வாறு போல, சிவத்தைச் சார்ந்து நின்ற உயிரும் அதனின்றும் நீங்காதா? நீங்குமாயின் சார்தற்காகச் செய்யுஞ் செயல்க ளெல்லாம் வீண் செயல் தானே யென்பீரேல் நன்று வினாயினீர்; மல சத்திக்குக் கேடுண்டு, சிவ சத்திக்குக் கேடின்று. மல சத்தியின் கேட்டினால் மலத்தினின்றும் நீங்கிய வுயிர் சிவத்தைச் சாரும். சிவ சத்திக்குக் கேடின்மையால் சிவத்தைச் சார்ந்த வுயிர் மலத்தில் மீளுத லில்லை. இது எதுபோலு மெனின், ஏரிக் கரைக்குக் கேடுண்டு. கடற் கரைக்குக் கேடின்று. ஏரியின் கரை யுடைந்தால் அங்குள்ள நீர் கடலைச் சாரும். கடற் கரைக்குக் கேடின்மையின் அதனைச் சார்ந்த நீர் ஏரிக்கு மீளுத லில்லாததுபோலும் என்க. ஆதலின், இது கொண்டு நமது செயல் வீண் செயலில்லை யென்று தப்பித்துக் கொள்ள முடியுமா? எல்லாம் பொய்யா யிருக்கப் பொய்யில் இத்துணைத் தர்க்கம் எதற் கெனின், இங்ஙனம் கூறுவது சூனிய வாதமாகிய நிரீச்சுர வாதமாகு மன்றி ஆஸ்திக வாத மாகுமா?" என்றார்.

வேதாந்த சாஸ்திரத்தினைத் தக்க பெரியாரிடத்துச் சரணாகதி யடைந்து, கேட்கு முறையாற் கேட்டுச் சங்கிக்காது, தம் மநம் போனவாறு "சுத்தப் பிரமமா யிருந்து உபாதியைக் கூடிற்றா? அசுத்தப் பிரமமா யிருந்து உபாதியைக் கூடிற்றா?" என்று சங்கிக்கின்றார். இவர் மதத்திற் கூறும் விஞ்ஞாந கலர் முன்னர் சுத்தமாய பதியா யிருந்து, பின்னர் ஆணவ மலத்தை யடைந்தனரா? அன்றா? சந்திரன் சுத்தனா யிருந்து

" இந்துவினை யநாதியடைந் ததை முழுது மறையாம லிந்து தன்னால், அந்திறனை யொளிர்வித்துக் கொள்களங்க மென " என்று களங்கத்தினைப் பொருந்தினனா ? இன்றா ? பொருந்தின ரெனின் மல நீக்கமும், களங்க நீக்கமும், உண்டாய விடத்து, மலமுங் களங்கமும் அத்தியந்தம் நாசமாயினமையால், மீண்டும் அவர்களை வந்தடைதற்கு மலமுங் களங்கமு மின்மையா லின்றாம். அவ்வாறே, அநாதியாகிய அஞ்ஞானத்தாற் பந்தப் பட்ட ஆத்மா, குருபதேசாதிகளால் அஞ்ஞான நாசஞ் செய்துழி, மீண்டும் பந்தப் படுத்தற்கு அஞ்ஞானமாகிய திரவிய மின்மையின், மீண்டும் பந்த முறாது சுத்தமா யிருக்கு மென் றுணர்க.

" எதற்காகக் கூடிற்று ? எப்பொழுது கூடிற்று ?" என்று வினவுதல் சாஸ்திரங் கற் றறியாத் தன்மை யாலாம். கற்பித அநாதியாக அஞ்ஞான முண் டென் றுணர்ந் திருப்பின், அதற்குப் பிரதி யோகியா யுள்ள, 'ஆதி' யென்னும் சொல்லின் பரியாயமாய ' எப்பொழுது ' என்னுஞ் சொல்லைக் கூறார். அநாதியே அஞ்ஞான முண் டென் றெமக்கும் எம்மவருக்கும், அநாதியே மல முண் டென்பது இவர்க்கும் ஒப்ப முடிந்ததாம். ' எதற்காக ' என்பது பயனை யுணர்த்துவதாம். கயிற்றிற் பாம்பையும், கிளிஞ்சலில் வெள்ளியையும், கானலிற் சலத்தையும், காண்பது பிராந்தியால், கடித்தலா லுண்டாம் பய நிவிர்த்தி, திரவியத்தாற் சுகமாய்ச் சீவித்தல், தாக விடாய் நிவிர்த்தித்தல், முதலிய பிரயோஜநத்தைக் கருதி யாம். அவ்வாறே, சேதநம் அநாதியாய அஞ்ஞானத்தைப் பொருந்திய வுடன், துக்க ரூபமான சம்சாரமான பிரயோஜந முண்டாயிற் றென்றும், அத்துக்க ரூப சம்சாரத்தை நிவிர்த்திப்பான் குருவை யடைந்து, காரியத்துட னஞ்ஞானத்தினை யறவே யொழித்து, தனது யதார்த்தப் பிரஹ்ம ரூபமா மென் றறிக. அவ்வா றன்றாயின், முன்னரே சிவ திருவடியி லிருந்த ' விஞ்ஞான கலர், பிரளயா கலர், சகலர் ' என்னும் ஆன்மாக்களும், சுந்தர மூர்த்தி சுவாமிகளும், முறையே ஆணவ மலத்தையும், ஆணவ கார்மிக மலங்களையும், ஆணவ கார்மிக மாயீய மலங்களையும் அடைய வேண்டிய தின்றாம். விஞ்ஞான கலர்க்குக் குரவ னின்றித் தாமே யறியுந் தன்மையும் பொருந்தாதாம்.

" சிவ சத்திக்குக் கேடின்று. உயிர் சிவத்தைச் சாரும். சிவ சத்திக் குக் கேடின்மையால் சிவத்தைச் சார்ந்த வுயிர் மலத்தில் மீளுத லில்லை." என்று கூறுகின்றமையின், சிவத்தைப் பசு அடைகின்ற தென்றும், பதியினிடத்துச் சத்தி யொன் றிருத்தலின், அதற்கு நாச மின்மையின், பதியை யடைந்த பசு மீளா தென்றும், பதியிடத் துள்ள சத்தி நாச மாயின் பசு மீளு மென்றும், பதி யிடத்துப் பசு அடைதற்குப், பசுவிடத் துள்ள மூல மலமாகிய அஞ்ஞானப் பொரு ளெனச் சிவ ஞான சாமியார் கூறும் மல சத்தியின் நாசமே காரண மென்றும், பதி தன்னிடத்து வந்த பசுவை, யமனைக் காலா லுதைத்துத் தள்ளி யாங்குத் தள்ளா திருத்தற்கும், பசு, பசு பதியின் காலை விட்டு நீங்கே னெனக் கெட்டியாய்ப் பிடித் திறுகப் பற்றிக் கொள்ளற்கும், பதியிடத்துள்ள சத்தியே காரண மென்றும், அச்சத்தி

நாச மாகா திருத்தற்குக் காரண மென்னை யெனின், நாச மில்லா அநாதி பசுவை யாசரித்த பாச சத்தி நாச முறுதல் போல், நாச மில்லா அநாதி பதியை ஆசரித்த, பதி சத்தி நாச முறு தென்பதே போதிய காரண மென்றும் விளங்குகின்றது. அநாதி பசுவை யாசரித்த பாச சத்தி, நாச மடைவது போல் அநாதி பதியை யாசரித்த பதி சத்தியும் ஏன் நாச முறாது? திருட்டாந்தங் கூறிய ஏரிக் கரையும், கடற் கரையும், மிகப் பொருத்தமேயாம். ஏரிக் கரையாய மண், நீரால் அழிவுறுங்கால், சமுத்திரத்துள் அடைவது போன்று, குருவால் பசுவிடத் துள்ள பாச மழியுங்கால், சமுத்திர ஸ்தாநமாய சிவனைப் பசுவிடத் துள்ள பாச மடையும். அடையவே “பதி யணுகில் பசு பாசம் நில்லா”, “பதியினைச் சென்றணுகாப் பசு பாசம்” என்னுந் திரு மந்திரச் செய்யுட்கு முரணும். சமுத்திரத்திற்குக் கரை யுண் டென்று, ஆமைப் பால், ஆமை ரோமம், மலடி மகன், முயற் கோடு, கந்தருவப் பட்டணம், முதலியன போல் கல்லாரை யேமாற்ற வல்ல இவர், கைக் கொண்டனர் போலும்

பாராவாரோர்ணவ இதி = பாராவார: கரை யில்லாதது.

பாதாளம் விஶ யாஹி வா ஸுரபுரீமாரோஹ மேரோஶ்ஶிர:
பாராவார பரம்பராம் தர ததாப்யாஶா ந ஶாந்தா தவ ।
ஆதிவ்யாதிஜராபராஹத யதி க்ஷேமம் நிஜம் வாஞ்சஸி
ஶ்ரீ க்ருஷ்ணேதி ரஸாயநம் ரஸய ரே ஶூந்யை: கிமந்யை:
ஶ்ரமை: ॥

பாரஞ்சாவாரஞ்சாஸ்யேதி = பாராவார: = கரை யற்றது.

ஸததரங்கதயா பாராவாராய யஸ்ய ஊர்வோ ஊர்வ
ஜதி ஹாரிவ்யொயெ ஸநூஷ யதேகூ

ஸமுத்ரோப்திரகூபார: பாராவார: ஸரித்பதி: — வ்யுத்
பாரே அஸ்யேதி = அகூபார: = கரை யற்றது. (அமரகோசம்)

ந வித்யதே பார: அஸ்யேதி = அபார: கரை யற்றது.

ஸ்தோத்ராணாம் ஸ்தாமிஸ்ரீணாம் ஸ்தூதா ஜனஸ்ய
வஸ்துநாம் । அபாரவாரஸ்ய நியஸ்து பஞ்சாதவாசூவோ
வக்த்ர ஸேவாஜூவொ ஹவிஷ ॥

எள்ளா திருப்ப விழிஞர்போற் றற்குரியர், விள்ளா வறிஞாதா வேண்டாரோ—தள்ளாக், கரைகாப் புளதுநீர் சட்டுகுள மன்றிக், கரைகாப் புளதோ கடல். (நன்னெறி) என்பன வாதிப் பிரமாணங்களாலும் கடற்குக் கரை யின்றென் றுணர்க.

தமது குல குரு வென்று வேதாந்தத்திற்குஞ் சைவ சித்தாந்தத்திற்கும், சமரசப் படுத்துபவராக இவர் கொண்டாடும் தாயுமான சுவாமிகள் "ஆழாழி கரையின்றி நிற்க விலையோ ?" "உரையிறந்த பெருமைபெற்றுத் திரைக்கை நீட்டி யொலிக்கின்ற கடலேயிவ் வுலகஞ் சூழக், கரையுமின்றி யுன்னை வைத்தா ரியாரே யென்பேன்", என்று கூறிய செய்யுட்களையேனு முணர்ந்து தீட்டக்கல மெடுத்தனரா? சூரவரினுங் கூரிய புத்தியுடையவ ராகலின், சூரவர் கூற்றுக்கு மாறாய்க் கடற்குக் கரை யுண்டென்று கரைந்தார். சூரவருக்கு மாறாய்க் கூறுவதில், பிரயோஜனங் கருதாது கூறுவரோ ? உள்ளக் கிடக்கையாய், சூக்குமப் பிரயோஜன மொன்றுடைத்தா யுளதென வுணர்ந்தே யித் திருட்டாந்தங் கூறின ரென்று, திருட்டாந்தமே விளக்குகின்றது. அஃதென் னெனின், தாயுமான சுவாமிகள் கூறிய கூற்றுப்படி, கடற்குக் கரை யின்மை போல், பதிக்குச் சத்தி யின்மையேயாம். சத்தி யில்லா தொழியவே, பதி சுத்த னென்றாகி, பசு, பாசத்தை யறவே யழித் தொழித்து, சுத்த னென்னும் பெயர் பெற்று, 'பதி பசு' என்னும் இரு சுத்த சேதநமும் தம்மில் வேற்றுமையின்றி, நீர் நீரேயாய், பொன் பொன்னேயாய், பால் பாலேயாய், "மதுராங்கருஞ் சாத்தன் வன்கோயில் முன்னே, சதுரங்கமா வலமாத்தங்கும் குதிரை கரி தேர் ஆள் எனும் பெயரும், செப்பிய பேர் கொள் உருவும் நோது பொய் யென்று நீக்கியே, தேருமிடத்து உற்றிடும் முக்காலத்தும் உள்ள மண்ணே, மற்று எல்லாம் வெற்ற வெறும் பொய்யாய் விடும்," என்பது போல் நாநா வுருவங்களாய மண், மண்ணேயாய் இருக்குமாறு போல, இருக்கு மென் றுணர்க.

இவர் கருத்துப்படி கொள்ளினும், கடல் பொங்கிய காலத்து, ஏரியை வந்து அடையுமாறு போல, பதியைச் சார்ந்த பசுவும், பதி சத்தி கடந்து, மீண்டும் பாசத்தாற் கட் டுண்டு, 'அநாதி பெத்தன்' என்னும் முன்னைப் பெயரையே பெறு மென் றுணர்க. 'ஆதலின் இது கொண்டு' என்னும் சுட்டுக்குப் பொருள் யாது ?

"எல்லாம் பொய்யா யிருக்க பொய்யி லித்துணைத் தர்க்கம் எதற் கெனின்," என்கின்றார். பொய்யின்கண்ணே தர்க்கஞ் செய்வதே யன்றி, உண்மையினிடத்துத் தர்க்கஞ் செய்வ தின்றாம். உண்மைப் பொருளை யுபதேசிக்குங்கால், தெக்ஷணா மூர்த்தி சின் முத்திரையுட னறிவித் தாங்கு, மௌனமா யிருந் தறிவிப்ப தன்றித் தர்க்கங்க ளொன்று மின்றாம். இவர் போன்ற பேதவாதிகளது பேதை மதியைப் பிளத்தற்குத் தர்க்கம் பொய்ப் பொருளில் செய்ய வேண்டுவ தாவசிகமாம்.

"இங்ஙனங் கூறுவது சூனிய வாதமாகிய நிரீச்சுர வாத மாகு மன்றி, ஆஸ்திக வாத மாகுமா? " என்கின்றார். சூனிய மென்பது இல்லை யென்றாம். எதனை இல்லை யென்று சொல்பவர் நிரீச்சுர வாதி யாவர்? ஜகத்தை யில்லை யென்று சொல்பவர்கள் நிரீச்சுர வாதி யாகார். ஈஸ்வரனை யங்கீக

ரிக்காத சாங்கிய மதத்தர் நிரீச்சுர வாதியாய் நாஸ்திக ராகா திருக்குங்கால், ஏனையர் நாஸ்திக ராவ தெவ்வாறும்? ஜகத்தைப் பொய் யென்பவர் சூநிய வாதியும், நிரீச்சுர வாதியும், நாஸ்திகரும் ஆவர் என்பரேல், இவரும் மல சத்திக்குக் கே டுண் டென்று பறை சாற்றுகின்றமையின், சூநிய வாதியும், ருத்திரர் முதலியோர்க்கு மல முண் டென்று கூறி அவரை ஈஸ்வரனுகக் கொள்ளாமையின், நிரீச்சுர வாதியும், வேதத்தை யிவரு மிவரினத்தவரும் பழிக்கின்றமையின், நாஸ்திகரும், ஆகி, முத் தோடங்களை யுடையவராவர்.

"அசுத்தமா யிருந்து கூடிற் றெனின் அப்பொழுதும் நமது பிரமம் சுத்தப் பிரம மாகாதே. 'ஊனுய் உயிரானுய். உணர்வு மவனே யுயிரு மவனே, சிவன்றான் பல பல சீவனுமாகி.' என்பன வாதி திரு வாக்குகளால், சிவனே யுயிரா யிற்று, உலக மாயிற்று என்ன லாகாதோ வெனின், ஆகாது. என்னே? எல்லாப் பொருள்களோடுங் கலந்து நிற்குங் கலப்புத் தன்மையால், அதுவதுவாய் நிற்கும் நிலையும், பொருட்டன்மையால் அவற்றின் வேறாய் நிற்கும் நிலையும் என, இரு நிலைகள் சிவபெருமானுக் குண்டு. அவற்றுள் அதுவதுவாய் நிற்கும் நிலைபற்றி அவ்வா றருளிச் செய்தன ராசிரிய ரென்க." என்றார்.

சேதநம் உபாதியோடு கூடியபின் அசுத்த முற்றிருக்க, அதனல் சீவனென்னும் பெயர்வந்து பொருந்துகின்றது. மீண்டும் முன் கூடிய அஞ்ஞானமாய வுபாதியைப் பிஷ்ட பீஷண நியாயம் போன்று, கூடுவ தெற்றுக்கு? சிவம் சீவனும், ஜெகத்தாயும் ஆனதற்குச் சில செய்யுட்களைக் காட்டினர். அச் சிவன், அசுத்த சிவனு யிருந்து, பின் சீவனுஞ் செகத்துமாகி ஈரசுத்த முற்றன னென்று கருது கின்றனர் போலும் "ஈஸ்வரனுக்குக் கலப்புத்தன்மை யென்றும், பொருட் டன்மை யென்றும், இரு தன்மைக ளுள" என்கின்றார். ஈஸ்வரன் திரவியமா? குணமா? தொழிலா? அல்லது ஈஸ்வரனிடத்து கலப்பாகிய தொழிலும், பொருளும் இருக்கின்றனவா? ஈஸ்வரன் திரவியமாயின், அவனிடத்து வேறு ஒரு திரவியம் இருக்க வேண்டுவ தின்றாம். திரவியமாகிய தாமே தம்மிடத் திருக்கின்ற தெனின், ஆன்மாசிரய தோஷமாம் ஈஸ்வரன் 'இச்சை ஞாகம்' யத்தநம், என்னும் மூன்றையே யுடைய னென்றும், நிஷ்கிரிய னென்றும், கூறுகின்றமையின், 'கலப்பு' என்னும் தொழிலு மின்றாம். ஈஸ்வரன் குணரூபமும், கர்மரூபமும் அன்றாவன் குணமும், கருமமும் சொரூபமாயின், குடத்தை யாசரித்துக் குணமுந் தொழிலு மிருப்பன போன்று, ஈஸ்வரன் பாதந்திரனுய், ஜீவான்மாவை யாசரித்து இருப்ப னென் றுணர்க. ஆயின், அச் செய்யுட்கள் சுத்த சிவனே அஞ்ஞாந வுபாதியால், ஜீவனுகவும், விவர்த்தோபாதாநத்தால் ஜகத்தாகவும் ஆயின னென்று கூறுகின்றன. அதுவதுவாய் நிற்கு நிலைபற்றி யாசிரிய ரருளின ரென்று இவர்க்கு யாவர் கூறினர்? ஆருடத்தா லறிந்தனரா? உபக்கிரம உபசம்மாராதி லிங்க மின்றி யொரு நூலின் கருத்து விளங்குங் கொல்லோ?

"இனியேனும், இவரும் இவர் சார்பினரும் திரு மந்திரம் முதலிய திரு வாக்குக்களுக்குச் சைவ சித்தாந்தப் பெரியாரிடம் பொருள் கேட்டுண்மை யுணர்வார்களா?" என்கின்றார். ஆறந்தங் கூறிய திருமந்திரத்திற்கு, ஒரு மதமு மோராப் புறமதத்தராய இவரும் இவர் சார்பினரும் எங்ஙன மருகராவர்? அதிற் கூறியுள்ள வேதாந்தத்திற்கும், யோகாந்தத்திற்கும் இவர்கள் எக் குரவரை யடைந்து பொரு ளுணர்ந்தனர்? வேதாந்தத்தைக் கூறும் பாகத்தி லுள்ள செய்யுட்கட்குப் பொருளை இவரை, யாமும் எம்மவரும் கேட்ப தெற்றிற்கு? இனியேனும், இவரும் இவர் மதத்தினரும் திரு மந்திரத்தைத் தமது நூ லென்று மறந்துங் கையாடாது, ஷடந்த வேத்தாக்களிடத்துச் சமித் பாணியாகச் சரணாகதி யடைந்து, அதன் பொருளைக்கேட்கு மாற்றாற் கேட்டு, அவர்கள் விளக்கு மாற்றால் விளக்கிய வாறே யுணர்ந்து, அவ்வழி யொழுகுவாராக.

முத்தித் தசையில் ஒரு பொருளே யுண்மைப் பொரு ளென்று, கூறியிருப்பவும், "முத்தி தசையி லிரு பொரு ளுண் டென்று கூறியதனோடு முரணாகாதா?" என்று கூறுகின்றார். இது வேதாந்த சித்தாந்த முணராது கூறியதாம். "மாணாக்கர்கட் கறிவுறுத்தும் பொரு ளுண்மையா?" என்கின்றார். மாணாக்கர்களது சொரூபமாயுள்ள பொருள் உண்மையே யன்றி, அறிவுறுத்தல் உண்மை யன்றாம். இதனை "பிணஞ்சுடு தடியென்ன வென்னைக் கொண்டே பெரும் பற்றை யெல்லா மறச்சாடி, அணைந்த வென்னையு மப்படி யீறில்போ தத்தில்விட் டநுபவத் திருந்தாண்டி" என்னுஞ் செய்யுளானும், தேற்றாங் கொட்டை முதலிய திருட்டாந்தங்களானு முணர்க.

"பொய்யை யுபதேசித்தற்கு ஆசிரியரும் வேண்டுமோ?" என்கின்றார். பொய்யை யுபதேசித்தற்கு ஆசிரியர் வேண்டுவ தின் றென்பது யாவருக்கு முடன்பாடேயாம். மெய்ப் பொருளை யுபதேசித்தற்கு நல்லாசிரியர் வேண்டுமாகலின், மாணாக்காது சொரூப மெய்யே யன்றி, கருடபாவனை, சொப்பந ஸ்திரீயின் சேர்க்கை, தாரு தாம்பிராதிகளில் ஈச்வர பாவனை போன்று, உபதேசம் உண்மை யன்றாம். இவை யெல்லாம் வேதாந்த சாஸ்திரத்தை நல்லாசிரிய ரிடத்துப் பாடங் கேளாது, மே லெழுந்த வாரியாய்ப் படித்த தூல வறிவுடையோ ராசங்கைகளாம்.

முத்தியி லொரு பொருளே யிருக்குங்கால், அநுபவித்த லென்னும் விவகார மின்மையின், கரும கருத்துரு தோஷமும், ஆன்மாசிரய தோஷமு மிலவாம். தான் மாத்திரமா யிருக்குங்கால், பொரு ளின்மை யாகிய சூநியமு மன்றாம். முத்தியில் மூப் பொரு ளுள்ளார்க்கே, அநுபவித்தல் பொருந்துமே யன்றிக் "கைவல்யம்" என்னும் தனிமையாக வொரு பொரு ளிருத்தற்கண் அநுபவ மின்றாம். மண்ணை வாரிப் போட்டுக் கொண்ட கதை, ஒருவனா யிருத்தற்கண், செய்வித்தல் இல தென்பதற்கு மாத்திர முவமமாகக் கூறியதே யன்றி, சுவகத பேதமாகக் கூறிய தன்றாம்.

"நுணுகிய ஆராய்ச்சியின்மையாற் கூறினர்" என்றார், இன்னதற்குத் திருட்டாந்தங் கூறியதென்று, உணருமாறிலா விவர்தாமா, பிறர் மீது நுணுகியவாராய்ச்சியின்றென்று கூறுபவர்? ஆரிய மொழியின் வாசனை யற்பமேனு மில்லார்க்கு, உவமானத்தி னிலக்கண மெங்ஙனம் விள்ளும்?

"சாமியார் அறியாமைக்குக் காரணம் யாதோ?" என்கின்றார். தலை, மநம், கை என்னும் மூன்றுஞ் சடமாயிற்றே. சடப் பொருள் செய்தலையுஞ் செய்வித்தலையு மெங்ஙனஞ் செய்யும்? சடமாய வூசியைச் சடமாய காந்தம் சேட்டிக்குமாறு, சடமாய மநம் சடமாய கையைச் சேட்டிக்கச் செய்ததோ? சேதநப் பொருளாய பசுவும், பதியுஞ் செய்தற்குஞ் செய்வித்தற்கும் வேண்டாவோ? அங்ஙனமாயின், பந்த மோக்ஷங்களைக் கையே யுறுமன்றி, பாசமாய மநமும், சேதநமாய பசுவுமுறுவாம். உறுதொழியவே, பதியும் பசுவும், என்றென்றைக்கும் ஐக்கியமாய் உளதெனக் கூறும் வேதாந்தமே, நிலவுறுமென் றுணர்க. இவ்வாறாய தோடங்கள் வருமென் றுணராது தூல வறிவாற் றிருட்டாந்தத்தை விளக்கப் புகுந்த இவர் சூக்ஷ்ம அறிவுடைய பிறர் மீது அறியாமை கூறி, தமது அறியாமையை வெளிப்படுத்திக் கொண்டனர்.

3. வேதாந்த சாஸ்திரங்களில் ஆநந்தத்திற்கு ஆநந்தத்தை யுவமைகூறியதை யுணராது, ஆநந்தமாய பொருட்குச் சையோக குணமாய கலப்பை யுவமையாக வுரைத்திருக்கின்றதென்று மருண்டெழுதிய படலக்காரர்க்கு, "வேதாந்த சாஸ்திரத்தைத் திரித் துணர்ந்தாங்கே, நுமது நூலிற் கூறிய குலால திருட்டாந்தத்தையுந் திரித் துணர்ந்து கொள்ளுதிர்" என்று விடை யிறுத்ததாம். குலால திருட்டாந்தம், பதி நிமித்த காரண மாவதற்கென்பதனை யாவரு முணர்வர். சூட்டுக் கோலிற் காட்டிய விஷயங்களைப் பார்க்கும் படிப்பிலாதவர்தாமா, "மனம் போனவாறு கூறுதல் முறையாகுமா" என்றெழுதுபவர். "இவ்வாறு கொள்ளுகின்றன ரென்பதையெவ்வாறு தெரிந்தனர்?" என்கின்றார். படலக்காரர், வேதாந்த நூலிற் கூறிய திருட்டாந்தத்தை மாறுகொளக் கூறினமையின், அதுகொண்டு தெரிந்தாமென் றுணர்க. 'குயவன்' திருட்டாந்தத்தில் கூறியன, தமக்கு விரோத மெனக் கருதி, "ஒரே சேதநத்திற்கு உவமை காட்டிய வொரே ஸ்திரீயும், வியாபகமாயும், பேரறிவுடையவளாயும், அசரீரியாயு முள்ளாளென்று கொள்வாரா? அல்லது, இவர் பிரமமாகிய வொரே சேதநம் பரிச்சின்னமாயும், கிஞ்சிக்ஞத்துவமாயும், சரீரியாயும், உள தென்று ஒப்புக்கொள்வாரா?" என்று எதிர் வினவை மாறுகொள வினவியவர், வேதாந்த சாஸ்திரத்தும், சூட்டுக்கோலிடத்தும் உள்ள திருட்டாந்தங்களை, வேண்டுமளவு திருட்டாந்தமாகப் பொருந்தாது, தம் மநம் போனவா றெழுதி அக் கூற்றும் கற்றார் பார்த்துக் காமுறும்படி யன்றி, கல்லாருங் கண்டு பொருண் முரணெனக் கூறும்படி, யிடருறுவ தெற்றுக்கு? "ஊழிற் பெரு

வலி யாவுள யாதொன்று, சூழினுந் தான்முந் துறும்" என்னும் பெரியார்
வாக்கின்படி போகூழ்வலி யிவரைப் பிடர்பிடித் துந்திய தென் றுணர்க.

"இப் பொருள் கூறுதல் இவர் மதத்தினர்க்குப் பழம் பாடமே. ஜீவன்,
ஈஸ்வரன் என்னுஞ் சொற்களுக்கு, இவர் கூறிய பொருளே பொரு ளென
மாயா வாதச் சார் பில்லாத வடமொழி வல்லார் முன் சாதிப்பரா?"என்கின்
றார். பழம் பாடத்தைக் கூறுதல் தவ றென்றும், முற் பாடங்களை மாற்றி,
யெண்ணிலாக் கற்பனைக ணிறைந்த புதுப் பாடங்களைக் கூறுதல் சால்
புடைத் தென்றுங் கருதுகின்றனர் போலும். வேதத்தின்கண் எவ்வா
றெழுத்துக்க ளுள்ளனவோ, அவ்வாறே சிருட்டியின் ஆரம்பத்தில், ஈஸ்
வரன் பழம் பாடமாகவே யொப்பிக்கின்றனனே யன்றி, யிவர் போன்று
புதுப் பாடங்களை யொப்பிவிக்க வில்லை. அப் பழம் பாடங்களை, பிரஹ்மா
முதல் யாவருங் கேட்டு, அவ்வாறே தமது மாணாக்கர்கட்கும் பழம் பாடங்
களையே கூறுகின்றனர் இதனாற் றான் வேதத்திற்கு அநாதி யத்தியயந
பரம்பரையா லறையுந் தன்மை யென்னும் பழம்பாடத் தன்மை வந்து
பொருந்தியது. இவ்வாறே, ஈஸ்வரன் குருவாகவும், ரிஷி முனிகளாகவும்
அவதரித்து, ஜீவர்கள் மோக்ஷத்தை யடையும் பொருட்டுக் கருணையாற்
கழறிய பல சாஸ்திரங்களாய அத்யாத்ம வித்தைகளை, அவர்பாற் கேட்டு,
கேட்டவாறே தம் தம் மாணாக்கர்கட்குப் பழம் பாடமாகக் கூறி வருகின்றா
ர்கள். இதனாற் றான் வேத மொழித் தொழிந்த சாஸ்திரங்கட்கு ஆதி யத்தி
யயந பரம்பரையா லறையுந் தன்மை யென்னும் பழம் பாடத்தன்மை வந்து
பொருந்தியது. இதனால், ஈஸ்வரனும், எம்மவரும், யாமும் வேதம் முதலிய
நூற்களி லுள்ள சொற்களையும், அவற்றின் பொருள்களையும், உள்ளவாறே
மாணாக்கர்கட்கு மேனையர்க்கும் கூறி வருகின்றமையின், பழம் பாடங்
கூறுவோ ராகின்றோம். அவ்வா றின்றி, ஈஸ்வரன் கூறிய நூல்களையும்
அவற்றின் வழி நூல்களையும், உள்ளபடி பிறர்க்கும் மாணாக்கர்கட்கும் இவ
ரும் இவர் மதத்தினருங் கூறாது, பொருள் பொருத்த மின் றென்று,
அவத் தவ விசேடத்தால், தோற்று மிடங்களில் பதி வாக் கென்றும் பெரி
யார் வாக் கென்றும் கருதாது, அஞ்சா நெஞ்சினராய், நூற்களையுஞ் செய்
யுட்களையுஞ் சொற்களையுந் திரித்து, புதுப் பாடமும் புதுப் பொருளுங்
கற்பித்துக் கூறுதலின், இவரும இவர் சார்பினரும் புதுப் பாடங் கூறுப
வரே யன்றி, பழம் பாடங் கூறுபவ ராகார். ஆகார். புதுப் பாடங் கூறு
பவ ராயினமையா னன்றோ, வீர சைவர்களுக் குரிய திரு வாசக திரு மந்
திரத்தையும், வேதாந்திகளாய எம்மவர்க் குரிய தேவாரத்தையும், ஏனையர்க்
குரிய பாரதம், இராமாயணம், பிரபுலிங்க லீலை, திரு விளையாடல், பெரிய
புராணம், திருக் குறள் என்பனவாதி நூல்களி லுள்ள செய்யுட்களையுங்
கோறல் செய்தும், புன் மொழிப் புதுப்பாக்களைப் புகுத்தியும்,முன் மொழி
மாற்றித் தம் மொழி புகுத்தியும், முன் னசை யொழித்துத் தம் மசை
புகுத்தியும், முன் னடை யொழித்துத் தம் மடை புகுத்தியும், முன் னடை
யொழித்துத் தந் நடை புகுத்தியும், இவ்வாறு பல மாறுபாடு செய்தனர்.
இஃது உலகறிந்த வுண்மையே.

வடமொழிக்கு, "மாயா வாதச் சார்பில்லாத" என்று விசேடங் கொடுத்தனரே, இதனால் வடமொழி மாயா வாதச் சார்புடையதொன்றென்றும், மாயா வாதச் சார்பில்லாத வடமொழி யொன்றென்றும், அவ்வாறே, மாயா வாதச் சார்புடைய தென்மொழி யென்றும், மாயா வாதச் சார்பில்லாத தென்மொழி யென்றும், இரு மொழியுண்டென்று விளங்குகின்றது. மொழித் தன்மையான் வரைந்த மொழி யொன்றேயன்றி, மாயா வாத வடமொழி, அஃதின்றிய வடமொழி யென்றும், மாயா வாதத் தென்மொழி, அஃதின்றிய தென்மொழி யென்றும், மொழியின் கண்ணேனும், அதற் குறுப்பாகிய எழுத்தின்கண்ணேனும் பேத கற்பனை யின்றாம். மாயா வாதச் சார்புடைய சாங்கிய மதக்கொள்கை யுடைய வடமொழி வல்லார் முன்னே, யாங்கூறிய பொருளே ஜீவேஸ்வரர்களுக்குப் பொருளெனச் சாதிக்குங்கால், ஏனையரிடத்துச் சாதித்தற் கியாதையமுளது? எமது மத சித்தாந்தப்படி ஜீவேஸ்வரர்களுக் கிதுவே பொருளென, எந்த வடமொழி வல்லா ரீண்டுவரினுஞ் சாதித்தற்குத் தயாராயிருக்கின்றோம் என் றுணர்க. வடமொழி வல்லார் முன் சாதிப்பரா என்றமையானே, தமக்கு 'ஜீவேஸ்வரன்' என்னுஞ் சொற்குப் பொருள் விளங்கவில்லை யென்றும், வேதாந்திக ளுபதேசிக்கினும், கவர்ந்து கொள்ளற் குள்ளத்து வன்மை யின்றென்றும், அநதிகாரியாய தம்மை யொழித்து, அதிகார புருடராய வடமொழி வல்லாரிடத்துச் சாதிப்பிர்க வென்றும், அவ்விஷயத்தைக் கடாவுதற்கு அதிகாரம் பெறாமையின், நாம் அகடா வென்றும் விளக்கினர். இவ்வாறு, உணருமாணிலா விவர் கடாவுதற் கெங்ஙன முரியவராவர்? 'சார்ந்த வண்ணஞ் சார்தல்' என்னும் 'தொழில் ரூபமே, பசுவின் சொரூபம்' என்றும், சேதநம் பசுவின் சொரூப மன்றென்றும், இவரு மிவ ரினத்தவரும் எம்மவர் முன் வந்து ஏனைய சாஸ்திரங்கட்கு மாணுறுது கூறுதற் காற்ற லுடையரா?

4. தூல திருஷ்டாந்தமாக, பிரமசாரி முதலியோர், ஒருவரா யிருப்பதே யானந்த மடைதற்குக் காரண மென்று கூறி யிருக்க, அவ்வளவில் திருஷ்டாந்தத்தைக் கொள்ளாது, தியாதாவும், தியேயனும் உளராதலின், இரு பொருள் சித்திக்கின்றதென்கின்றார். இவ்வாறு சூக்ஷுமமாகப் பேத கற்பனை செய்தவர், தியாதா சரீரமும் இடமு மின்றித் தியானிப்ப தின்றாகலின், தூல சூக்ஷும சரீரங்களும், பூமியாகிய இடமு மிருத்தலின், ஐந்து பொருளுண்டென்றாவது, அல்லது, மூன்றையும் பாசமாகக் கொண்டு முப்பொருளுண்டென்றாவது என் கூறவில்லை? அவ்வாறே படலக்காரர் கூறிய திருட்டாந்தத்தில், ஸ்திரீ, புருஷர், ஈஸ்வரன், தூல சூக்ஷும சரீரங்கள், இடம், கலப்பாகிய தொழில், அதனாலுண்டா மானந்தம், என எட்டுப் பதார்த்தங்கள் உள வென்று என் அவர்மீ திவர் கடாவவில்லை? அவ்வாறே, தாஷ்டாந்தத்தில், ஜீவன், ஈஸ்வரன், திருவடி, அயுதசித்த சம்யோகமாகிய அத்துவித சம்பந்தம், ஜீவனது மூல ஆணவ மலம், மநம், கைலாயமாய விடம், சிவ சத்தி ஆக எட்டுப் பொருளு முள்

பொரு ளென்று படலக்காரர்க்கும், எனைச் சைவ சித்தாந்திகட்கும் விளக்கமா யுபதேசித்து, அவர்கட் குள்ள, முப் பொருள் நித்திய மென்னு மயலைப் போக்காத தேனோ? திருட்டாந்த தாட்டாந்தப்படியே முத்தியில் எண் பொருள் சித்திக்க, இதனைக் கொண்டு ‘பதி பசு’ என்னும் இரண்டே நித்தியம், பாசம் முத்தாத்மாக்கட்கு அநித்திய மென்று, தாங் கொண்டிருக்கு மயலை நீக்கிக் கொள்ளாத தேனோ? இவ்வாறாய தோடங்களியாவும், தம்மீது வரு மென்று கருதியிருப்பாராயின், திருட்டாந்தத்தைக் கூறிய அளவிற் கொண்டிருப்பர். அளவு கடந்து சென்றமையின் ‘அதிகம்’ என்னுந் தோல்வித் தாநத்தை யடைந்தனர். கருத் தறியாது இவர் விகற்பித்துக் கூறினமையின் ‘பிரதிக்ஞா சந்நியாசம்’ என்னுந் தோல்வித்தாநத்தை யா மடையாது, இவர் ‘அஞ்ஞாநம்’ என்னுந் தோல்வித்தாநத்தை யடைந்தனர்.

5. கந்த ரநுபூதி, சிவாநந்த மாலை, திரு வாசகம், தேவாரம், திரு மந்திரம்,பட்டினத்துப் பிள்ளையார் பாடல், சிவ ஞாந வள்ளலார்,திரு விளையாடற் புராணம், முதலியவற்றி லுள்ள, ‘இல்லை, பொய், அநித்தியம், நாசம்,’ என்னுஞ் சொற்களுக்கு ‘நிலையாமை பொருளே யன்றி, இன்மை, பொரு ளன்று’ என்றும், அந் நிலையாமையாய பொருளும் பெத்த தசைக் கண்ணே யொன்றும், ‘இல்லை யெனு மாயை’ என்ற கந்த ரநுபூதிச் செய்யுட்கு, சுவாநுபவ காலத்திற் பாசம் நாசமானமையின், நிலையாமைப் பொருள் முத்தி தசைக்கண்ணே யொன்றும் என, பாசம் நாச மென்பதற்கு இரு நிலையாமைப் பொருள் கூறுகின்றனர். அதனால், பெத்த தசைக்கண்ணும், முத்தி தசைக்கண்ணும், பாசமாய மூலாஞ் ஞாநம் நித்திய மென்று கருதுகின்றனர். பிறாண்டு, ‘சித்தாந்த சைவத்தின்படி முத்தியில் உயி ருண்டு. மல மில்லை. முத்தியில் மல மில்லா தொழியினும் எனைப் பெத்தரிடத் திருத்தலால், மலம் அநாதி நித்தியம் என்றற் கிழுக் கில்லை’ என்று கூறி, ஈண்டுக் கூறிய கூற்றிற்கு மாறு கொளக் கூறுதலின், ‘மாறு கோளக் கூறல்’ என்னுந் தோல்வித் தாநத்தையும், ‘சுவ வசந வியாகாதம்’ என்னும் தோஷத்தினையு மடைந்தனர்.

‘நிலையாமை’ என்னுஞ் சொற் பொருளை யாராய்வாம். நிலை பகுதியும், மை விகுதியும், ஆகார வெதிர் மறை விகுதியும் பெற்று முடிந்த வொரு பகு பதமாம். இடையி லுள்ள ஆகாரம், பகுதியின் விரோதப் பொருளாய நிலைத்தற்கு மறுதலைப் பொருளை யுணர்த்தும். மறுதலைப் பொருள், பிராகபாவம் (முன் னின்மை), பிரத் தொம்சாபாவம் (அழிவு பாட் டின்மை), அந்நியோந்நியாபாவம் (ஒன் றொன் றன்மை), அத்தியந்தா பாவம் (முழுது மின்மை), சாமயிகாபாவம் (கால விசேடத்தாற் றோன்று மின்மை), என ஐவகைத்தாம். நிலைத்தல் உண்மையாம். உண்மையின் மறுதலை, ஐவகைப்படு மென்றாகி அஞ்ஞாநம் பிரவஞ்சம் என்னும் சத்தின் பிராகபாவம், பிரத் தொம்காபாவம், அந்நியோந்நியாபாவம், அத்தியந்தா

பாவம், சாமயிகாபாவ மெனப் பொருடந்து நிற்கும். 'பூதலத்திற் குட
மில்லை' என்னுந் தொடர் மொழி, பூதலத்தில் குடத்தின் பிராகபாவத்
தையும், பிரத் தொம்சாபாவத்தையும், அத்தியந்தாபாவத்தையும், சாமயிகா
பாவத்தையும், "குடம் பட மன்று" என்னும் தொடர் மொழி அந்நியோந்
நியாபாவத்தையும் விளக்குவ போன்று, ஓர் அதிகாணத்தில், அஞ்ஞாநம்
பிரவஞ்ச மென்பவற்றின் பிராகபாவ முதலியவற்றை விளக்க வேண்
டும். சிவம், அல்லது பிரஹ்மம் பூதலம் போன்று, பிரவஞ்ச, அஞ்ஞாநங்கட்
கதிகாணமாம். அவ் வதிகாணத்தில், அஞ்ஞாந, பிரவஞ்சங்களின் பிராக
பாவங் கூறுவோமாயின், அஞ்ஞாந, பிரவஞ்சங்கள் 'உண்டாம்' என
எதிர் காலத் தோற்ற முண்டாக வேண்டும். அவ்வா றின்றி நிகழ் காலத்
தில், அஞ்ஞாந, பாசங்கள் காணப்படுகின்றமையின் சிவ மெனும் பிர
ஹ்மமாய அதிகாணத்தின்கண் அஞ்ஞாந, பாசங்களின் பிராகபாவங்
கூறுத லடாதாம். பிரத் தொம்சாபாவங் கூறுவோமாயின், 'குடம்
அழிந்தது' என்பது போன்று, பிரவஞ்சம் அழிந்தது என்னுந் தோற்ற
முண்டாதல் வேண்டும். அவ்வா றின்றி, நிகழ் காலத்தில், உள் பொருள்
போலத் தோன்றுகின்றமையின், பிரஹ்மத்தின்கண் பிரவஞ்சத்தின்
பிரத் தொம்சாபாவமுங் கூறுத லடாது. சாமயிகாபாவங் கூறுவோ
மாயின், ஒரு காலத்தில் நீங்கிப் பின் னொரு காலத்தில் மீண்டும் வருத
லின் முத்தர்கட்கு நீங்கி மீண்டும் அம் முத்தர்கட்கே, சுந்தர மூர்த்திகட்கு
ஆணவ முனைப்பான் மீண்டும் பிறப் புற்றாங்கு, அஞ்ஞாநம் பிரவஞ்சம்
பிறப்பு என்பன வரும். ஆகலின், அது எம் மதச் சாஸ்திரங்கட்கும் சம்
மத மன்றாகலின், அஃது முடன்பா டன்றாம். பிரஹ்மத்தின்கண் பிர
வஞ்ச வஞ்ஞாநங்களின் அந்யோந்யாபாவ முளதெனக் கூறின், பிரவஞ்
சத்தின்கண் பிரஹ்மமும், பிரஹ்மத்தின்கண் பிரவஞ்சமும் இன்றிக்,
'குடம் பட மன்று' என்பது போன்று, சிவம் பிரவஞ்ச மென்னு
மிரண்டும் பரிச்சின்னமாய், 'சிவன் உலக மாயினான்' என்பன வாதி
சைவ சாஸ்திர முதலியவற்றிற்கு முரண்படு மாகலின், அஃதும் பொரு
த்த முடைத் தன்றாம். ஆகவே, பாரிசேட நியாயத்தால், பிரஹ்மம் சிவம்
என்னும் அதிகாணத்தின்கண், முக்காலத்தினு முடைய நிஷேதமாய
பிரவஞ்சத்தைப் பிரதியோகியாக வுடைய, அத்தியந்தாபாவமே கொள்ளற்
பாற்றாம். எதிர் காலத்து மிறந்த காலத்தும், பிரவஞ்சத்தின் அத்தியந்தா
பாவம் உளதாமாயின், நிகழ் காலத்திற் பிரவஞ்சந் தோற்றுதலின் முக் கால
முடைய நிஷேத மென்னும் விசேடணம், பிரவஞ்சத்திற்குப் பொருந்தா
மையின், நிகழ் கால வத்தியந்தாபாவம் பொருந்தாதாலோ வெனின், நன்று
நவின்றாய். எதிர் காலத்து மிறந்த காலத்து முளதாய பிரவஞ்சத்தி னத்தி
யந்தாபாவம், சாக்ஷா துண்டாம். நிகழ் காலத்தி னத்தியந்தாபாவ மருத்தா
பத்திப் பிரமாணத்தினா லுண்டாம். அஃதெங்ஙன மெனிற் கூறுதும்:—
நிகழ் காலத்தில் பிரவஞ்சமாய காரியந் தோற்றுதற்குப் பிரஹ்மத்தின்கண்
காரணமான அவயவ மின்மையினானும், வேறு அதிகாணத்தின்கண்ணும்

அவயவ மின்மையினானும், கிளிஞ்சலிற் றோற்றும் வெள்ளியினின்மைக்கு, விவகார பாரமார்த்த வெள்ளியின் எதிர்கால விறந்த கால நிஷேத முளதாமாயினும், நிகழ் காலத்திற் றோற்றும் பிராதிபாஸிக வெள்ளியின் றோற்றத்திற்குக் கிளிஞ்சலின்கண், காரணமான அவயவ மின்மையினானும், வேறு அதிகரணத்தின்கண்ணா மவயவ மின்மையினானும், அர்த்தாபத்திப் பிரமாணத்தினால் நிகழ் கால நிஷேதமும், கிளிஞ்சலினிடத்துப் பொருந்துவதுபோல் நிகழ் கால நிஷேதம் பொருந்து மென் றுணர்க. அங்ஙனம், முக் காலத்து மிலதாய பிரவஞ்சம் பிரஹ்மத்தின்கண் றோற்றலாமோ வெனின், மாலைக் காலமாய வுபாதி யிருக்கும் வரை, ரச்சுவிடத்துச் சர்ப்பப் பிராந்தியு மதன் காரியமுந் தோற்றுவ போலவும், ஜல வுபாதி யிருக்கும் வரைப் புருடனுக் கதோ முகந் தோற்றுவது போலவும், பிரஹ்மத்தின்கண் அஞ்ஞான வுபாதி யிருக்கும் வரைப் பிரவஞ்சந் தோற்று மென் றுணர்க. ஞானத்தா லநாதியாய அஞ்ஞான வுபாதி யொழிந்துழிப் பிரவஞ்ச மின் றென் றுணர்க. வேதாந்தத்தின்கண், அஜாத வாதம், ஏகஜீவ வாதம், நானா ஜீவ வாதம், பாரமார்த்திக சத்தா வாதம், பாரமார்த்திக சத்தை பிராதிபாஸிக சத்தை யென்னும் இரண்டு சத்தா வாதம், பாரமார்த்திகம் வியாவகாரிகம் பிராதிபாஸிகம் என்னும் மூன்று சத்தா வாதம், திருஷ்டி சிருஷ்டி வாதம், சிருஷ்டி திருஷ்டி வாதம், ஆபாச வாதம், அவச்சேத வாதம், பாத சாமானாதிகரண்ய வாதம், முக்கிய சாமானாதிகரண்ய வாதம், பிம்பப் பிரதிபிம்ப வாதம் என்பன வாதியாக, ஜடப் பிரவஞ்சத்தின்கண்ணும், சேதநத்தின்கண்ணும் பல வேறு அவாந்தர பேத முற்றுப் பல மதங்க ளுள வென் றுணர்க. எவ்வெம் மதக் கோட்பாடு கொண் டாசங்கிக்கப்படுகின்றதோ, அவ்வம் மதக் கோட்பாடு கொண்டே சமாதானங் கூறப்படு மென் றுணர்க. இவை யாவுஞ் சாஸ்திரார்த்த மாகலின், வேதாந்த சாஸ்திர வல்லுநர்பால் சமித்பாணியாகச் சரணாகதி யடைந்து கேட்கு முறையாற் கேட்டு, அவர்கள் விளக்குமாற்றால் விளக்க வுணர்க. அவ்வா றின்றி மனம் போனவாறு தவறாய்ப் பொருள் கொள்ளற்க.

எவ்வாறு நிலையாமை யென்று பிரவஞ்சத்திற்குப் பெயரோ, அவ்வாறே, தமம், மோகம், அவித்தை, மித்தியா சொரூபி (பொய்ம்மை யுருவி) என்பனவும் நாமங்களாம். அசத்து, ஜடம், துக்கம், அநித்தம், கண்டம், என்பனவும், பிந்நம் அபிந்நம் பிந்நாபிந்நம், சத்து அசத்து சதசத்து, சாவயவம் நிரவயவம் சாவயவ நிரவயவ மென்னும் ஒன்பது விதத்தும் நிர்ணயிக்கக் கூடாத அநிர்வாச்சியமும் லக்ஷணம் எனவுங் கொள்க. விரிப்பிற் பெருகு மாகலின் அமைக. இன்றேல், அத்வைத சித்தி, கௌடப் பிரமாநந்தீயம், தத்வப் பிரகாசிகை, பேத திக்காரம், பாமதி, சாரீரக பாஷ்யம், கண்டந கண்ட காத்தியம் முதலிய சமஸ்கிருத நூல்களைத் தக்காரிடத்துச் சரணாகதி யடைந்து கேட்டுச் சாந்தி பெறுவாராக. அந்நூல்களி லுள்ள விஷயங்களை ஈண்டுத் தென்மொழியி னெழுதின் அவை விளக்க முறாவாகலின், சம்ஸ்கிருதத்தி னெழுதின் தென்மொழி கற்றார்க்

குப் பயன்படாமையானும், ஸ்ரீ யோகாநந்தேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகளவர்களால் ‘ஆதி சைவ நாமக கௌலேய முக பங்க முத்கரம்’ என்னும் நூலின்கண்ணும், ‘தாந்திரிக துண்ட கண்டநம்’ என்னும் நூலின்கண்ணும், ஒரு சிறிது சம்ஸ்கிருதத்தில் காண்பிக்கப்பட் டிருக்கின்றமையினானும், ஈண்டுக் கூறாது விடுத்தா மென் றுணர்க.

‘இட்டனை’ என்னுஞ் சொல் நிலையாமையை நிலை நிறுத்து மென்றார். ‘மாயையி லிட்டனை’ என்பது பொருளே யன்றி, வேறு பொருளின்றாம். அம் மாயை யெவ்வாறாய தெனின், அத்தியந்தாபாவ முடைய தென்னும் பொரு டோன்ற இல்லை யென்னும் பதங் கொடுக்கப்பட் டிருக்கின்றது. அதனை யுணராது கூறினமையின் ‘மதாநுஞ்ஞை’ என்னுந் தோல்வித் தானத்தை யடைந்தனர்.

“திருவள்ளுவ நாயனாரும்’ முதலில் நிலையாமை கூறி, பின் துறவு கூறியதனால், அவர் கருத்தும் பிரவஞ்சஞ் சத்திய மென்பதேயாம்’ என்றும், பொய் யென்னுஞ் சொல்லை “பொய்படு மொன்றோ; பொய்ம்மை முயக்கம்; என்ற குறட்களில் விளக்கி யிருக்கின்றார்” ரென்றும், “அவ் விரண்டிடத்து மின்மை தான் பொருளென்று சாதிக்க முடியுமா” என்றுங் கூறுகின்றார்.

34 வது நிலையாமை யதிகாரத்தின் அவதாரிகையில், “நிலையாமை யாவது தோற்ற முடையன யாவும் நிலையுத லிலவாந் தன்மை” என மாயையின் அத்தியந்தாபாவ விலக்கணமே கூறப்பட்டிருக்கின்றது. மற்றும், கானற் சலம் போற் றோன்றி, கயிற் றரவுபோ லழியு மென்பார்க்கும், க்ஷணிக மென்பார்க்கும், சதசத் தென்பார்க்கும் பொதுவாய், நிலையாமை யென்று கூறப்பட்ட தென்றும், ‘தோற்ற முடையவற்றைக் கேடில வென்று கருதும் புல்லறிவால்’ என்றுள்ள வாக்கியத்தில், தோற்ற முடையவற்றை யென்னுந் தொடரால், நிலையாமைக்கு ‘தோற்ற முடையது’ என்றும், ‘கேடில’ என்னுந் தொடரால், ‘நிலையின’ என்னுஞ் சொற்கு, ‘நாச மின்மை’ என்றும், விளக்குவதனால், உற்பத்தி யுடையவற்றை ‘நாசமில’ என்று கருதும் இழிந்த ஞானமா மென்று கூறப்பட்டிருக்கின்றது.

35-வது துறவதிகாரத்தில், ‘பற்றினை யவற்றது நிலையாமை நோக்கி விடுதல்’ என்றமையான், பற்றை யநித்திய மென் றுணர்ந்துழி விடுதலன்றி வேறு வகைத்தா யின்றாம். நித்தியமான பற்றை விரும்பின் நித்திய துக்கமும், அநித்தியமான பற்றை விரும்பின் அநித்திய துக்கமுமுண்டாம். “பொய் படும்” என்பதற்கு ‘புரை படும்’ என்று பொருடரலின், மாயையின்பாற் பட்டு இலக்கணையா லநித்தியத்தையே யுணர்த்தும். “பொய்ம்மை முயக்கம்” மித்தையான முயக்க மெனப் பொருடந்து அநித்திய மென்னும் பொருள் கொள்ளக் கிடத்தலி னென் றுணர்க.

400-வது "கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு, மாடல்ல மற்றை யவை" என்னுங் குறட்கு, "ஒருவனுக்கு அழி வில்லாத சீரிய செல்வம்" என்று பரிமே லழகர் கூறுதலின், 'நிலையாமை' யென்று பொருள் கொள்ள லேலுமா? ஈண்டு அநித்திய மென்பதே தேற்றமாம். இவ்வாறு குறண் முதலியவற்றி லநேகஞ் சொற்க ளுள. அவை யாவு மீண் டெடுத் தாளின் விரியு மாகலி னமைக.

"பொய்யாகு மென்பதற் கில்லையாகு மென்று பொருள் கொண் டெழுதினரா?" என்கின்றார் இவர் வாக்கியம் பொய்க்கும், அதாவது இவர் வாக்கியம் மித்தையாம். அத்தியந்தாபாவமாம் என்னும் பொருள் கொண்டே யெழுதினு மென் றுணர்க.

திரு மந்திரம், 115, 2213, 2236, 2405, என்பன வாதி செய்யுட்களால், "பதி பசு பாசம் மூன்றும் அநாதி நித்தியம் என நன்கு விளங்கவும்" என்றார். அச் செய்யுட்கள் "பதி பசு பாசம்" என்னும் மூன்றையும் அநாதி யென்று கூறுகின்றனவே யன்றி நித்திய மென்று கூற வில்லை. அநாதி யென்று கூறுமிடங்களில், ஹநுமத் புச்சம் போன்று நித்தியம் என்னுஞ் சொல், சுவ கபோல கற்பனையாக வந்து நுழைவ தென்ன வறியாமை? யாண்டுப் புகை யுண்டோ ஆண்டுத் தீ யுண் டென்பது போன்று, யாண்டு அநாதி யுண்டு ஆண்டு நித்திய முண் டென்னு நியம வியாப்தி யின்றே. ஏது சாமாநாதிகரண்ய அத்தியந்தாபாவ அப்பிரதியோகி சாத்தியாசாமாநாதிகரண்யம் என்பது முடிவான வியாப்தியாம். மூல மலமாய அஞ்ஞாந திரவியத்தின் சத்தியாய, ஆணவ காமிய மாயீக மென்னும் மும் மலங்கட்கும் நிவர்த்தியினை சிவ ஞாந சுவாமி கூறுதலின், அநாதித் தன்மை யிருந்தும் ஆண்டு நித்தியத் தன்மை யின்றாம். பிராக பாவத்தின்கண்ணும் வட திசைக்கண்ணும் அநாதித் தன்மை யிருந்தும் நித்தியத் தன்மை யின்றாம். ஆதலின், அநாதித் தன்மைக்கும் நித்தியத் தன்மைக்கும் நியம வியாப்தி யின்றாகலின், அநாதி யென்னுஞ் சொல் வருமிடந்தோறும் நித்திய மென்னுஞ் சொல்லைப் புகுத்து மறியாமையை யறவே யொழித்து, யா மறைந்த அறையின்படியே யடங்கி வாழ்தலே சாலச் சிறந்ததா மென் றுணர்க. அவ்வாறு கொள்ளா தொழிவரேல், இவர் நூல்களிற் 'பசு' என்று வருமிடங்க டோறும், சொற் சாதிரிஸ மயக்கத்தால், வால் கோடு முதலியன வுடையது ஜீவாத்மா என்று, ஜீவனையும், சதுஷ்பாத் மிருகத்தோடு சமாநமாக்கி, மிருகமாகிய ஜீவாத்மாவுக்கு ஞாந சாஸ்திர மின் றென்று, இவரைச் சார்ந்தார் யாவருக்கும் நல் லுபதேசஞ் செய்வாராக.

பசுத் தன்மை, பதித் தன்மை, பாசத் தன்மைகள், அநாதியாயினும், பாசம் நீங்கிய வழி, பசுவிற்குப் பசுத்தன்மை யின்றாகலின், பசு வில்லா விடத்து, பதிக்குப் 'பசு பதி' யென்னும் பதித் தன்மையு மின்றாம். ஆகவே, சுத்த சேதந மிரண்டு மொன்றா மென்று திரு மந்திர முதலியவற்றிற்குப் பொருள் கொள்க. பாசம் அறுதல் அறுதல் என்று பல

விடத்துப் பன்முறை திரு மந்திர முதலியவற்றிற் கூறுதலின், அதற்கு அத்யந்தபாவப் பொரு ளொன்றே பொருந்து மன்றி, யேனைப் பொருள் பொருந்தா தாம்.

"இனி, பொய் யென்பதற்கு இல்லாமை யென்ற பொருளை யாவது இவர் உண்மையிற் கொண்டிருக்கின்றாரா? கொண்டிருப்பின், செட்டியாரவர்க ளெழுதியதும் பொய்யாதலின், அதற்கிவ்வளவு சிரமப்பட வேண்டாமே. இதனானே, பொய்யை மெய் யென்று வீணாச் சிரமங் கொள்ளும் புண்ணிய முடையார் சுவாமியாரும் இவர் மரபினரும் என்பது விளங்க வில்லையா?" என்கின்றார். உண்மையில், பொய் யென்பதற் கில்லை யென்னும் பொருளைக் கொண்டமையா னன்றோ, விவகாரத்துப் பொய் கூறிய படலக்காரச் செட்டியாரைக் கண்டித்தற்குச் சூட்டுக் கோற் போட்ட தாம். பொய்யை மெய் யென்று ஸ்தாபிக்கும் முசலாக்கிர புத்தி யுடையார் இவரும் இவர் மதத்தினரும் என்பதை யுணராது, பிறரை நிந்தித்தனர். 'வீணாச்சிரமங் கொள்ளும் புண்ணிய முடையார் சுவாமியார்' என் றெழுதி யிருக்கின்றமையின், நான்காவதாய துறவாச்சிரமத்திற் றுவேஷ முடையரென்று விளங்குகின்றது. இதனால், தம் மதத்தி லுள்ள தம்பிரான்களையும், தம் மதத் தேனைத் தேசத் துறவிகளையும், வீண் ஆச்சிரமம் பூண்டவரென்று நிந்தித்தவ ராகின்றார்.

"நிறந்தருந் தெய்வப் புலமைவள் ளுவனார் நீத்தவர் பெருமைநூன் முகப்பாற், சிறந்திட வமைத்தாங் கதுகொடில் வாழ்க்கைச் சிறுமைதூற் றினாது தெரியார்க், கறந்தவா றியற்றி னவனினுங் கோடி யதிகமா மெனமன மறாது, துறந்தவோ ரையும்பட் டணத்தடிக டொகுத்த கட் டுரைநிகழ்த் திடுமே".

"ஞானியே யெவரும் வணங்குதற் குரியோ னவிலுமா சௌசமில் பெரியோன், மாநிலத் தவன்றா னுடல்விடிற் குகைப்பால் வைக்கவென் மறைப்படி புரித, றானும்வே தாந்தப் பொருடுணிந் திடினுஞ் சாற்றினில் வாழுமந் தணர்க்கின், றானதாற் றுறவு பெற்றநற் றவரே யமலவீ டடையு ஞானிகளே".

"அறந்தா னியற்று மவனினுங் கோடி யதிகமில்லந், துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன், மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற், றிறந்தான் பெருமையை யென்சொல்லு வேன்கச்சி யேகம் பனே."

என்று துறவாச்சிரமத்தினைப் புகழ்ந்து கூறியிருப்பவும், தாம் கொண்டாடும், பட்டணத்துச் சுவாமிகள் வாக்கையும் பொருட்படுத்தாது, சந்நியாசிகளை வீணாச்சிரமங் கொண்டவர்க ளென்று தூஷிக்கின்றமையின், "கூற்றத்தைக் கையால் விளித்தற்றா லாற்றுவார்க், காற்றா தாரின்னா செயல். எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார், பெரியார்ப் பிழைத்தொழுகு வார். பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாரால், பேரா விடும்பை தரும்." என்னும் பெரியார் வாக்கிற்கு இலக்காகாது தப்புதல் யாங்ஙன மேலும்?

6. "திரு மந்திரம்:—68, 84, 1477, 1512, 2394, 2397 என்னும் ஆறு செய்யுட்களையு மறிவித்து, சிவாகமம் சிவனு லருளிச் செய்யப்பட்டதென்றும், வேதாந்தத்தைத் தழுவியது சித்தாந்த மென்றும், வேதாந்தம் சித்தாந்த மென்னும் இரண்டும் அபேதமான கருத்துடையன வென்றும் விளங்க வில்லையா? என்றும்" கூறுகின்றார். வாமாகமம், கௌலேயாகமம் முதல் சர்வாகமமும், சிவனு லியற்றப்பட் டிருக்குங்கால், சிவாகமும் சிவனு லியற்றப்பட்டதேயாம். அதிகாரிகளின் பேதத்தாற் பலநூல்களைக் கருணையா லீஸ்வரன் செய்திருக்க, அவை யாவும் சோபான முறையா லொரு கருத்துடையனவாமே யன்றி, சாக்ஷாத்தாக வொரு கருத்துடையன வாகா. சிவன் செய்தமையால், ஆகமம் வைதிக மாமேல், ஆகமங்கள் யாவும் வைதிக மாதல் வேண்டும். அங்ஙனமே, சிவ சிருஷ்டியாகலின் பிரபஞ்சம் யாவும் சேதனமாதல் வேண்டும் அவ்வா றின்மையின், கருத்தரதீத வைதிகத் தன்மை யவற்றிற்குப் பொருந்தாதாம். மூலமாய வேதத்திற்கு விரோத மின்றிய ஆகமங்கள் வைதிகங்களாம். மூலமாய வேதத்திற்கு விருத்தமாகக் கூறும் ஆகமங்க ளவைதிகங்களாம். வேதாந்தங்கள் ஒரே பிரஹ்மப் பொருளைக் கூறுகின்றன. அவற்றிற்குச் சாதனமாகச் சைவ முதற் பல சாஸ்திரங்களும் மனத் தொழிலாய வுபாசனையைக் கூறுகின்றன என் றுணர்க இதனை யுணராது பிறர் மீது 'விளங்கவில்லையா' என்ற அறியாமையைக் கூறித் தா மறியாமை யுடையவராயினர்.

"இனி, வேதாந்த மென்பது நூற் பெயரா? சமயப் பெயரா? சமயப் பெயராயின், சைவம் சிவ சம்பந்தம், வைஷ்ணவம் விஷ்ணு சம்பந்தம், என்பன போல வேதாந்தம் இன்ன தெய்வத்தின் சம்பந்த மென, அச்சொல்லில் வைத்துக் காட்டக் கூடுமா? நூற் பெயராயின், அந்நூலுக்குரிய சமயம் யாது?" என்கின்றார். இவரே முன் 5-வது சங்கை முதலியவற்றில் வேதாந்தம் 'ஒரு மதம்' என்றும், அதன் முடிவும், ஆகமத்தின் முடிவு மொன் றென்றும் தம்பட்ட மடித்து, மேலு மிவ்வாறே புகன்று, வேதாந்தம் ஒரு பொருளா என்றும், அம் மதத்திற் கொரு தெய்வமுண்டா என்றும் பலவாறு, துவைத மலத் தடிப்பால் பறை யறைகின்றார் வேதத்தின் அந்தம் வேதாந்தமாம். அஃதாவது வேதத்தின் முடிவாம். ஆண்டுப் பிரதிபாதிக்கப்படும் பிரஹ்மப் பொருளும் வேதாந்த மென்னும் பெயரைத் தத்திதப் பிரயோக மின்றிச் சினையாகு பெயரென்னு மிலக்ஷணையாற் பெறு மென் றுணர்க. சில விடத்துத் தத்திதப் பிரயோகம் பெற்றுப் பரார்த்தத்திலும் ஸ்வார்த்தத்திலும், சில விடத்துத் தத்திதப் பிரயோகம் பெறாது சுவார்த்தத்திலும் பரார்த்தத்திலும் வரு மென் றுணர்க. ஆகலின், வேதாந்த மென்பது பிரஹ்மப் பொருட்கும் அதனைப் பிரதிபாதிக்கும் உபநிஷத்கட்கும், அவற்றினை விசாரிக்கு மூன்றா மீமாம்ஸா சூத்திரங்கட்கும், அவற்றின் வழி நூலாய, அத்வைத சித்தி, தத்துவப் பிரகாசிகை, கண்டந கண்ட காத்தியம், பேத திக்காரம், பஞ்ச தசி, வாசிஷ்டம், பகவற் கீதை, கைவல்ய நவநீதம், வேதாந்த சூடாமணி, இலக்ஷணைவிருத்தி

யென்பனவாதி நூல்களுக்கும், சத்தியினாலும், லக்ஷணையினாலும் பெயரா மென் றுணர்க.

7. "திரு மந்திரம் 2179-வது ஆகின்ற என்னும் செய்யுளால் சைவத்தினும் வேதாந்தத்தினும் வேறாக மாயா வாத மொன் றுண் டென்று பெறப் படுகின்ற தன்றோ" என்கின்றார். இதனை யிவ ருண்மைக் கருத்தோ டெழுதி யிருப்பின், 'வேதாந்திகளை மாயா வாதிக ளெனக் கூறாதீர்க' ளென இவ ரினத்தவரைத் தடிகொண்டு தடுத்திருப்பா ரன்றோ? வேதாந்தமுஞ் சைவமு மொன்றா யிருக்குமாயின், வேதாந்தத்தினுஞ் சைவத்தினு மென் றும்மை கொடுத்து வேறு பிரிப்பானேன்? இருபத் தெட்டும், முப்பத் தாறும் எனத் தத்துவங்களைத் திரு மூல நாயனார் விதந் தோதுவானேன்? இவர், பிறாண்டு மாயா வாதச் சார்பில்லா எனக் குறிப்பால் வேதாந்திகளை மாயா வாதிக ளென்று கூறுவானேன்? இதனா லிவர் உண்மைக் கருத்துடன் பறை யறைய வில்லை யென்று பகர லாயிற்று.

"சிவ ஞான போதம், சிவாகமத்தைப் பரமப் பிரமாணமாகக் கொண் டொழுகும், சைவ பரம்பரையிலேயே, உபதேசிக்கப் பெற்று வருகின்ற தென்பதும், யாவரும் அறிந்தனவாகும் ஆகவே, ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகள் சைவ சித்தாந்தி யென்பது வெளிப்படை" என்கின்றார். சிவ ஞான போதம் ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகட் குபதேசிக்கப்பட்டது திருப் பெருந் துறையிலாம். அக் கோயில் வீர சைவர்களாய அம்பலத்தாடி ஸ்வாமிகளைச் சார்ந்ததாம். ஸ்ரீ மாணிக்க வாசக ஸ்வாமிகளும் 'ஐக்கிய வாத சைவர்' 'சிவாத்துவித சைவர்' என்று சிவ ஞான சுவாமியாற் கூறப்படும் வீர சைவ மதத்தைச் சார்ந்தவர்களே. அவர்க ளியற்றி, பரமேஸ்வரன் திருக் கரத்தா லெழுதப்பட்ட திரு வாசகமும், அம்பலத்தாடி ஸ்வாமிக ளிடத்தே யிருக்கின்றது. அதனா லன்றோ, அவர்கட்கு நடராஜா போன்று கருதிப் பாத பூஜை முதலியன நடத்தி வருகின்றார்கள். அவர்களும், பாதத்தைப் பூமியில் வையாது வேறோ ராதனத்தின்மீ திவர்ந்து செல்லுகின்றனர். அச் சமஸ்கிருத சிவ ஞான போதத்திற்கு அநேக வீர சைவர்கள் அநேக வியாக்கியானங்க ளியற்றி யிருக்கின்றார்கள். அத் திருப் பெருந்துறை யாதீனம் சின்னாண் முன்னர் திரு வாவடுதுறையிலுள்ள சில தம்பிரான்களாற் கவர்ந்து கொள்ளப்பட்டது. இன்றும், திருப் பெருந்துறை யாதீனத் தர்ம கர்த்தா வீர சைவ அம்பலத்தாடி ஸ்வாமிக ளென்றே கைச்சாத்திடுதலே சான்றாம். திரு வாசகத்தைப் பேழையுள் வைத்துச் சிதம்பரம் சிவ கங்கையில் விடுஞான்று, அம்பலத்தாடி ஸ்வாமிகளைச் சார்ந்ததுஞ் சான்றாம். மாணிக்க வாசக ஸ்வாமிகள் வீர சைவர்க ளென்பதற்குப் பெரிய புராணத்தில் அவர்கள் சரித்திரத்தினைக் கூட்டாதது மொரு சான்றாம். சமஸ்கிருதத்திலுள்ள மாணிக்க வாசக ஸ்வாமிகள் சரித்திரமும், ஏனைய வீர சைவ வடமொழி, தென்மொழி சாஸ்திரங்களும் வீர சைவர்க ளென்றே கூறுகின்றன. இவ்வாறிருக்க, யாவரும் அறிந்தனவாகு மென்றும், வெளிப்படை யென்றும்,

கூறிய தெத்துணைப் பொருத்தமாம். திருவாவடுதுறை யாதீநத்து மடாலய
இடமும் ஸ்ரீ மூல நாதர் சமாதியும், வீர சைவ மடாலயாதிபதிகளிடத்திரு
ந்து கிடைக்கப் பெற்றிருக்குமாயின், வேறு மிகைபடக் கூறுவ தெற்
றிற்கு? ஆகலின், சிவ ஞான போதம் சிவ ஞான சுவாமியை யுள்ளிட்டார்க்
கே யுரிய தென்னுங் கூற்று கூற்றிற்கே யிரையாம். சிவ ஞான போதத்
திற்கு வேதாந்த பரமாக நான்கு வேதங்களின் பாஷ்ய கருத்தாவாகிய ஸ்ரீ
வித்தியாரண்ய முனீந்திர ரவர்கள் பெரிய வொரு பாஷ்யமும், தமிழில் ஸ்ரீ
குப்புஸ்வாமி ராஜு அவர்கள் தத்துவப் பிரகாசிகை யென்னும் உரையும்,
ஸ்ரீ சிவாநந்த ஸ்வாமிக ளவர்கள் சிவாநந்த பாஷ்யமும், ஸ்ரீவடிவேலு செட்
டியா ரவர்கள் சிவ ஞான போதச் சிற்றுரையும், இன்னும் பல தமிழ் சமஸ்
கிருத வுரைகளும் உளவாகலின், சைவ பரம்பரையிலேயே யுபதேசிக்கப்
பட்டு வருகின்றது' என்னுங் கோள் கோளாய வாறு காண்க.

"சைவர்களை மாயா வாதி யென்று வாளா கூறியதற்குப் பிரமாணம்
யாது?" என்கின்றார். மாயையைச் சகத்திற் குபாதாந காரணமாகவும்,
ஈஸ்வரனை நிமித்த காரணனாகவுங் கொண்டு, உபாதாந காரண அம்சத்தில்
ஈஸ்வரனுக்குப் பாதந்திரத் தன்மை கூறிப் பரிசின்னனாகச் செய்து,
மாயைக்குச் சுதந்திரத்தன்மை கூறி அபரிச்சின்னத் தன்மை கொள்கின்ற
மையின், இவரும் இவரினத்தவரும் இக்காரணத்தானே மாயாவாதியாவர்.

"மாயா வாத மொன்றுண் டென்று கூறுஞ் சைவர்கள், வேதாந்த
மில்லை யென்று கூறுவ தில்லை. திரு மந்திரக் கருத்தின்படி வேதாந்தி
களு முண்டென்றே சைவர்கள் கொள்ளுகின்றனர்" என்கின்றார். 'மாயா
வாத மொன்றுண் டென்று கொள்ளுகின்றன'ரென்றமையால், மாயா வாத
மில்லை யென்போர் வேதாந்த மில்லை யென்பா ராயிற்று. 'புகை யிருப்பின்
நெருப் பிருப்பது போல், மாயா வாத மிருப்பின் வேதாந்த மிருக்குமாம். வே
தாந்த மின்றாயின் மாயா வாத மின்றாம்.' என்னும் வியாப்தி கூறுகின்றார்.
நெருப்பினுள் காரியமாய புகை யடங்கி யிருப்பது போன்று, காரணமாய
வேதாந்தத்தினுள் காரியமாய மாயா வாத மடங்கி யிருக்கு மென்று கருது
கின்றார். ஆகலின், சிறப்பு வகையால் இரண்டும் வே றென்றும், பொது
வகையா லிரண்டு மொன் றென்றும், பொருள் கொள்ளக்கிடக்கின்றது.
இவ்வாறாயின், மாயா வாதமும், வேதாந்தமு மொன் றென்று கூறும்,
"திரு மந்திரம் ஐந்தாந் தந்திரம். 2-வது அசுத்த சைவம். 1423:—'இணை
யார் திருவடி யேத்துஞ்சி ரங்கத், திணையா ரிணைக்குழை யீரணை முத்
திரை, குணமா ரிணைக்கண்ட மாலையுங் குன்றா, தணைவாஞ் சரியை கிரி
யையி னார்க்கே.' 1424:—'காதுபொ னார்ந்த கடுக்க னிரண்டுஞ்சேர்த்,
தோதுந் திருமேனி யுட்கட் டிரண்டுடன், சோதனை செய்து வுபதேச மார்க்
கா, யோதி யிருப்பா னொருசைவ ராகுமே.' என்ற சைவர்களினும்,
இவர் வேறாவரா? இருவரு மொருவரா யிருக்க 'மாயா வாதமும் வேதாந்
தமும் வேறு' என்று கூறுஞ் சைவர் தா மென்றும், ஏனையர் இரண்டும்

ஒன்றென்று கூறுஞ் சைவ ரென்றும் எவ்வாறு வேறு பிரித்தனர். பொருள் வகையாலுஞ் சொல் வகையாலு மிருவரு மொருவரா யிருக்க, வேறு பிரித்தது ஒரு வகையாலு மொவ்வாததேயாம்.

" சுவாமியாரையும் இவர் மரபினரையும், மாயா வாதிக ளென்று எந்தச் சைவர்கள் கூறினும், நாங்கள் மாயா வாதிக ரல்லர், வேதாந்திக ளென்று மட்டுஞ் சொல்லிக் கொள்ளக் கடமைப்படுகின்றார்களே யன்றி, சைவர்களாகிய நீங்கள் தாம் மாயா வாதிக ளென்று கூறுதல் பொருந்துமா ?" என்கின்றார். சைவரா யிருக்கு மிவர் தம் மதத்த ரிருக்கு மிடங்க டோறுஞ் சென்று, அவர்க ளிடத்து 'வேதாந்திகளே மாயா வாதிக ளென்று இனிக் கூறாதீர்கள். கூறுவீர்களாயின் அவர்கள் நம்மை மாயா வாதி யென்றும், நாஸ்திக ரென்றும், சூனிய' வாதி யென்றும், ஆஸ்திக நாஸ்திக ரென்றும், நாற் சொற் புணர்த்து நவில்கின்றனர். அஃதெமக்கு மிக்க தோர் மானக் கேடாக விருக்கின்றது.' என்று இரந்து சாம பேத தான தண்ட மென்னும் நால் வகை யுபாயத்து ளோ ருபாயத்தா லவர்களை யடக்காது, எமக்குச் 'சைவர்களை மாயா வாதிக ளென்று சொல்லத் தகாதென்றும், தாங்கள் வேதாந்திக ளென்று கூறிக் கொள்ளலே தகுதியா' மென்றும் ஆஞ்ஞை செய்ய எவ் வதிகாரம் பெற்றிருக்கின்றார்? திரு வாவடுதுறை யாதீனத்திற் சம்பளம் பெறுதலாகிய அதிகாரம் பெற்றிருக்கின்றமையின், அவ் வதிகாரத்தாற் கூறினே மென்பரேல், திரு வாவடுதுறை யாதீனம், நாலாம் வருணத்தாராய சூத்திரர்க்குக் குருத் தானமே யன்றி, யேனை வருணத்தாருக்கும், ஏனை மதத்தினராய நான்கு வருணத்தினர்க்கும் குருத் தான மாகாமையின், அவ் வதிகாரத்தை அம் மதத்திற்கும் அவ் வாதீனத்திற்கும் கீழ்ப்படியும், சூத்திரத் தம்பிரான்களிடத்தும், அவ்வாறுள்ள கிரகத்தரிடத்தும் பிரயோகிப்பாராக.

" எந்தச் சைவர்கள் கூறினும் " என்றமையால், சிவ ஞான சுவாமி சிவ ஞான பாஷ்யத்தில் ' வேதாந்த மென்பது யோகப் பெயரான் வேதத்தின் முடிவாகிய வுபநிடதங்களைக் கூறும். உருடைப் பெயரால் அவற்றை யெடுத்துச் செய்த ஏகான்ம வாத நூலைக் கூறும்.' என்றும், பிறுண்டு, ' ஏகான்ம வாதமாவது மாயா வாதம். இந்த மாயைக்கு வேறாகிய பிரம்ம ரூபமே யா னென வேதாந்த ஞானத்தால் அறிவதே முத்தி யென்பதாம். " என்றும், ' ஏகான்ம வாத நூல் செய்தவன் வியாத முனிவன் ' என்றும், ' இதனுட் கூறும் அத்தியாச வாதம் மாயா வாதத்திற்கு உபகாரமாம்' என்றும், இன்னும் பலவாறும் வேதாந்திகளை மாயா வாதிக ளென் றெழுதி யிருக்கின்றமையின், அவர் ஈண் டின்றிக் கைலாயத் திருப்பவ ராகலின் ஆண்டுச் சென்று "தாங்கள் வேதாந்திகளை மாயா வாதிக ளென்று திரு மந்திரத்தோடு மூர ணுறுமாறு வரைந்தமையின், அவர்கள் நம்மை நியாய வாயிலாக மாயா வாதிக ளென்று ஸ்தாபிக்கின்றனர். தாங்கள் மொழி பெயர்த்த தருக்க சங்கிரக மூலம் உரை முதலியவற்றை

யாராய்ந்து, அவற் றுள்ள மயக் குற்ற மொழி பெயர்ப்புக் குழூஉக்களை
யெடுத்துக்காட்டித் தங்கள் வெள் ளறிவை வெளியாக்கிவிடுவார்கள் போலு
மிருக்கின்றது. ஆகலின், வேதாந்திகளை மாயா வாதிக ளெனத் தூஷித்
தது தவறு மென ஒரு மன்னிப்புப் பத்திரம் அச்சிட்டு வெளியிடுவீர்க
ளாக" வென்று அவரிடத் திரந்து மன்னிப்புப் பத்திரத்தைப் பெற்று
ஈண்டு யாவருக்கும் விளக்கமாம்படி வெளியிடுவாராக. இவ்வாறு, செய்
திருப்பரேல் 'எந்தச் சைவர்' என்னுஞ் சொல் வீணர் சொல்லாய் முடியு
மென் றுணர்வாராக.

"இனி, இவரும் இவர் சார்பினரும் வேதாந்திகளாயின் இருபத் தெட்
டுத் தத்துவங் கொள்கின்றனரா ?" என்கின்றார். இதனால், யாங்கள்
வேதாந்திக ளல்ல ரென்று கருதுகின்றார். இக் கருத்துடை யிவர் 'வேதாந்
திக ளென்று மட்டுஞ் சொல்லிக் கொள்ளக் கடமைப் படுகின்றார்கள்'
என்று எவ்வாறு கூறினர்? முன் பின் முரா ணுறக் கூறலால், அறிவிலி
யென்பது விளக்க மாயிற்றே. தக்கார்வாய்ச் சரணாகதி யடைந்து கேட்கு
முறையாற் கேளாக் குறையாற் கூறினரா ? மயக்க வுணர்வாற் கூறினரா?
துவேஷத்தாற் கூறினரா ? தமோகுணத் தடிப்பாற் கூறினரா ? சத்துவ
குண மின்மையாற் சாற்றினரா ? ஏகாக்கிரத் தன்மை யடையுந் துறவா
சிரமமாய விறை யாசிரம மின்றியதா லிசைத்தனரா ? எக் காரணத்தாற்
கூறின ரென்ப தறிஞ ரறிவாராக.

"இருபத் தெட்டுத் தத்துவங் கொள்கின்றனரா ? கொள்கின்றே
மென்பரேல் அத் தத்துவங்க ளிவை யென்றும், அவற்றைப் பற்றிக் கூறும்
நூல் இது வென்றுங் காட்டக் கூடுமோ ?" என்கின்றார். வேதாந்திக
ளாகிய யாங்கள் இருபத் தெட்டுத் தத்துவங் கொள்ள வில்லை யென்று
எவ்வா றுணர்ந்தனர்? தம்மைச் சர்வஞ்ஞ ராகவும், சர்வ வேதாந்த சாஸ்தி
ரங்களை யுந் தென்மொழி வடமொழி யிருமொழியினு முணர்ந்தவராகவும்,
மதித்து, "கொள்கின்றனரா ? நூல் இது வென்று காட்டக் கூடுமோ ?"
என்கின்றார். வேதாந்த சூடாமணியில் "ஈங்குமக மிருபத்து நான்காவ
தாகு மிருபத்தைந் தாவதுதான் மூலவகங் காரம், ஆங்கதனை யடைத
லுறும் சிதாபாச சீவன் அறையுமிரு பத்தாறு மவன்மாயை மருவும், ஓங்
கொளியா மீசனிரு பத்தேழா மவனவ் வுயிர்முதலாந் தூரியனிருபத்தெட்
டா மவன்" என்றும், ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிக ளியற்றிய தத்துவ
போதம் என்னும் நூலில், தூல சரீர தத்துவம்-6; ஞானேந்திரியம் 5;
கருமேந்திரியம்-5; பிராணாதி வாயு-5; மநம் 1; புத்தி 1; ஆக சூக்ஷும
சரீர தத்துவங்கள்-17; காரண சரீர தத்துவம்-மாயை-1; அவித்தை-1;
ஜீவன், ஈச்வரன், கூடஸ்தன்-3; ஆகத் தத்துவங்க ளிருபத் தெட்டு
என்றும் கூறியிருத்தலை யுணராது, வினவுகின்றார். இதனால், அந் நூல்
களை யிவர் படித் தறியாக் குறையால் இக் கடாத் தோற்றிற் றென் றுண
ர்க. அறியாமை வயப்பட்ட விவர் பிரூஉ கடாக் கடந்து கடாவுகின்ற
மையின், இவர் கடா கடாவாகாது ஊரோ றன்ன மதர்ப்புற்ற கடாவாம்.

8. ஞான வாசிட்டம் திதிப் பிரகரணத்தில் உள்ள தாசூரன் கதையில் ‘தண்டுலத் தோலும்’ என்னும் முதலை யுடைய 107 - வது செய்யுளில் இரண் டடியைப் பெற்று “இதனால் ஞான வாசிட்ட ஆசிரியரும் சைவர்களோடு சேர்ந்தவ ரென்றாகி, இவரும் இவரினத்தவரும் ஞான வாசிட்டக் கருத்துக்கு மாறுபட்டவ ரென்பதை மறுக்க முடியுமா? இதனாலும், வேதாந்த மென்பது ஏகான்ம வாதமாகிய மாயா வாதத்தின் வே றென்பது விளங்க வில்லையா? ஞான வாசிட்டத்தில் ஏகான்ம வாதஞ் சாதிக்குஞ் செய்யுட்கள் பல வுள என்று காட்டுவாராயின், மேலே காட்டிய செய்யுளோடு முரணாத வண்ணம் அச் செய்யுளுக்குப் பொருள் கொள்ளுதலே முறையாகு மன்றி மாறுபடக் கொள்ளுதல் முறையாகுமா?” என்கின்றார்.

“ தண்டுலத் தோலுஞ் செம்பினிற் களிம்புஞ் சகசமாய்த் தொழில் விசே டத்தால், விண்டுபோ மதுபோற் புருடனு மலத்தை மேவியே போக்குத லியல்பாங், கொண்டசந் தேகமொழித்துநீ முயல்வாய் குருவின்வல்லபவிளக் கத்தாற், கண்டன மெனல்வீ ணுனுநீ தானுங் கண்டன பரம் பொருட் பொலிவே.” என் றுள்ள செய்யுளைக் கூறினமையின், ஞான வாசிட்ட மொழிப்பெயர்ப் பாசிரியராகிய ஆளவந்தான் முனிவர் சைவராயின ரென்கின்றார். அச் செய்யுளில் பதி பசு பாச மென்னு மூன்றும் நித்திய மென்று கூறப்பட்டிருக்கின்றனவா? இன்றே. “அரிசியில் உமியும், செம்பிற் களிம்பும் அநாதியா யிருந்து, குற்றல், புளியாற் றேய்த்தல் முதலிய தொழில்களால் நீங்குவன போல், ஜீவனும் அஞ்ஞானத்தை யநாதியே பொருந்தி, குருவின் அநுக்கிரகத்தால் நீக்கிக் கொள்ளுவன். நீ சந்தேகத்தை நிவர்த்தித்து முயற்சிப்பாயாக. குருவின் சாமர்த்திய விளக்கத்தா லறிந்தே னெனல் வியர்த்தமாம். நானும் நீயும் கண்டன அதாவது பார்க்கப்படும் பொருள் யாவும், சித்து ரூபமாய ஆத்ம தத்துவமேயாம்.” என்பது அச் செய்யுளுக்குப் பொருளாம். இவ்வாறே, காஸ்மீர தேசத்து தர்க்க வாகீஸ்வர சாஹித்யாசாரிய கௌட மண்டல வலங்காரராய் விளங்கிய ஸ்ரீமந்-அபிநந்தன பண்டித ரவர்கள் முப்பத் தீராயிர வாசிட்ட சுலோகங்களை ஆறாயிரமாகச் சுருக்கிய லகு யோக வாசிட்ட மென்னும் கிரந்தத்துள் நான்காவது-திதிப் பிரகரணத்தில் தாசூரன் கதையைக் கூறும் 17 - வது சர்க்கத்தில்-52, 53, 54-வது சுலோகங்களில் கூறப்பட்டிருக்கின்றமையின், அவற்றின் பொருளை சமஸ்கிருத வல்லார்வாய்க் கேட்டுச் சாந்தி பெறுவாராக.

‘புருடன் மலம்’ என்னுஞ் சொல்லைக் கண்டு, தமது சைவ நூலென மயங்கினரோ? சொல் ஒருவருக்குஞ் செ்ாந்த மன்றாம். சைவ சாஸ்திரம் பதினாலிலும், பிரஹ்மம், ஈஸ்வரன், ஜீவன், சகத்து, அஞ்ஞானம், ஞானம், வேதாந்தம், உபநிடதம், என்பன வாதி சொற்கள் மிகுதியாக வழங்கப்படுதலின், அது கொண்டு அப் பதினான்கு சாஸ்திரமும் வேதாந்த நூலென

ஒருவரு மயங்குவா ரிலர். இலர். வாசிட்டம் ஒரே பிரஹ்மத்தினை யறையாது, ரூப் பொருளை மூறை யிடுகின்றதென்று கருதுகின்றதோ டமையாது, ஏகான்ம வாதமும், மாயா வாதமும் ஒரு நூ லென்றும், அதனின் வேறு வேதாந்த மென்றும், பறை யறைகின்றார். பின், அந் நூலில், ஏகான்ம வாதங் கூறப்படுகின்ற தென்றுங் கூறுகின்றார். நிந்திக்கப் புகுந்தவர் ஒரு வழி நில்லாது, ரஜோ குண மூளைப்பாகிய ஆணவ மூளைப் பின் வயப்பட்டு மாறு கொளக் கூறி, " மாறு கோளக் கூறல் " என்னுந் தோல்வித் தானத்தை யடைந்தனர்.

ஸ்ரீஜகதீஸ்வர அவதாரமாய் மானுஷ அநுக்கிரக லீலா விக்கிரகமாகிய ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளும், அவர்கள் மாணாக்கர் பரம்பரையில் வந்த யாவரும் இருபத் தெட்டுத் தத்துவங்களைக் கைக் கொண் டநுட்டித்து வருகின்றமையின், யாங்களே வேதாந்திக ளாவோம். ஏனையோர் எவ்வாற்றானும் வேதாந்தி யாகார். ஆகார். வாசிட்ட ஆரம்பத்தில் " உயர் மநத்திலுக்குத் திறப்படக் காணப் பட்ட தில்லெனச் சித்தி னூலே, உறப்பெறு மெப்போ தப்போ துயர்பா சுகம தாமே." (10) "வழிபடு மிதனை விட்டு மற்றுள நூல்க ளென்னும், குழிகளிற் புரண்டஞ் ஞானக் குணத்தினற் பிறப்போர்க் கெல்லாம், ஒழிவற வொருவர் செய்தற் குரித்தன்றாய்த் தானே யுண்டாங், கழிதலிற் பிரம வின்பங் கற்பங்க ளாலுங் கூடா". என்னுஞ் செய்யுட்களில், பிரஹ்ம ஞாந நூலாகிய வாசிட்ட மொழிந்த ஏனை நூற்களை, அஞ்ஞானமாகிய சேற்றுக் குழி யென்றும், அக் குழியில் வீழ்ந்து அஞ்ஞானத்தாற் பிறக்கின்றார்க ளென்றும், கூறி யிருக்கின்றவற்றை யுணர்ந்திருப்பாராயின் ஶைவ நூ லென்று கூறார். தாசூரன் கதையினாரம்பத்தில் "ஒளியாத துயர்மாயை யெனும்பத்தை யொழிக்கமந நாசமோ ருபாய மாகும், இழியாத மெய்ஞ்ஞாநப் பொருளை யெல்லா மியம்பக்கேட் டயாாம விதயங் கொள்வாய், பழியான போகத்தி னிச்சை தானே பந்தமா மதுவிடலே பாம மாகும், வழியான பன்னூலாற் பயன் கொ லென்ன வருந்தாம லிவ்வழியே வருதல் வேண்டும்." (1) " இன்பமிதா மின்பமிதா மென்ற வெல்லா மெரியெனநஞ் செனகினைக வேற்றத் தாழ்வாய்த், துன்புறுபோ கம்பலவாற் றேய்ந்து நெஞ்சிற் றேயும லெளிதருந்திற் சுகமே யாகும், வன்புபயின் மநத்தோற்ற நாச மாகு மநத்தினது நாசமே மகத்தாந் தோற்ற, நன்பரம ஞானிகணெஞ் சிறந்து போகுநடைவிலங்கா மறிவிலர்க்கு நவைகூர் நெஞ்சம்." (2) " ஆநந்த நிராநந்த மிரண்டு மில்லை யசைவுமசை வின்மையுமா மவையு மில்லை, ஈனந்தீர் சத்த சத்தன் றிவற்றுக் கெல்லா மிடையல்லா ஞாநிமந மென்ற லோடுந், தானந்த மிலாவறிவா யுலகின் மேலாந் தத்துவத்தி லுலகிருக்குந் தன்மை தன்னை, ஞானந்தான் வளர்பொருட்டா யுரைப்பா யென்று நாதனியம்பிடவசிட்ட னவில்வ தானன்." (3) என்று, மந நாச வுபாயத்தைக் கூறி, "எழுந்தசங் கற்ப பாவனை விட்டா லிறந்துபோ மிதனையீங் கிதனுை, லழுந்தற மாய்த்து மநத்தினன் மநத்தை யறுத்துநின் னறிவினி னிற்பாய்,

உழுந்துருள் பொழுதின் முடியுமீ தரிதோ வுலகமும் வானமு மொக்கு,
முழுந்திய பொய்யாய்ப் போம்விகற் பத்தான் முளைத்தவை யன்றிமுன்
னிலதால்." (106) என்று, பின் அதனையே யுபசம்மாரத்தில் முடித்தலால்
மனோநாசத்தி னுபாயத்தைக் கூறுதற்குத் தாசூரன் கதையாய
இக் கதையும் இவை போன்ற பற்பல கதைகளும் கூறப்பட்டிருக்கின்
றனவே யன்றி, இவர் மத சித்தாந்தமாய முப் பொரு ணித்தியத்தைக்
கூறுதற் கின்றும். இராமபிரான் அடைந்த பிரஹ்ம ஞானத்தைக் கூறும்
வாயிலாகப் பல விதிகாசங்கள் வாசிட்டத்திற் கூறப்பட்டிருக்கின்றன.
இதனா லன்றே, வாசிட்டமும் இன்னோ ரன்ன பகவற் கீதை, கை
வல்ய நவநீதம், விசார சாகரம், விருத்திப் பிரபாகரம், பஞ்ச தசி, வேதா
ந்த சூடாமணி, விவேக சூடாமணி, முதலிய பல நூல்களையும், வேதாந்தக்
கொள்கை யுடையார் பல்லோ ராலுங் கொள்ளப்பட்டுக் கோவிலூர் மடா
லயம் முதலிய வேதாந்த பரம்பரையி லுபதேசிக்கப்பட்டு வருகின்றன.
இதனையு முணராது சூரியனை யுள்ளங் கையின் மறைக்க நினைத்தது
போன்று, வாசிட்டத்திற்குச் சைவ சாஸ்திர சம்பிரதாயப்படி முப் பொ
ருள் நித்திய மென்று கொள்ளுமாறு கட்டளையிடுகின்றார். இவர்கட்டு
அளையா மன்றிக் கட்டளை யாகாதாம். இவர் திருட்டாந்த தாட்
டாந்தங்களைச் சமன் செய்பவ ராகலின், திருட்டாந்தத்தில், தண்டுலத்திற்
றோலையுந் தாம்பிரத்திற் களிம்பையும் தொழிலா னீக்குவது போன்று, புரு
டனும் மலத்தைக் கருமத்தா னீக்குவ னென்று, சமன் செய்து கொள்ளு
வர். கொள்ளின், கருமத்தான் மோக்ஷ மென்றாகி, 'ஞானத்தால் மிருத்தியு
வைக் கடக்கின்றான். மோக்ஷத்திற்கு வேறு வழி யில்லை' என்னும் ருக்
வேத சுருதிக்கு விரோதமாம். ஆகலின், சாஸ்திரங்கட்குப் பொருளையுந்,
திருட்டாந்தங்களையும், ஆணவ வயப்பட்டு மநம் போனவாறு துவேஷத்
தாற் கொள்ளாது, சாஸ்திர முறையாற் கொள்க.

9. "சைவ சித்தாந்திகள் முத்தியிலும் பாச முண் டென்று கொள்ளு
கின்றார்க ளென இவர் கருதுகின்றார். அம் மட்டோ, சிவ ஞான வள்ள
லார் தமது மதத்தின ரென்றுங் கருதுகின்றார்? என்றும், "வள்ளலார்
சாஸ்திரம்-சிவ ஞானப் பிரகாச வெண்பா - 72, 73, 74, 75, 76, என்னும்
ஐந்து செய்யுட்களை யறிவித்துச் சிவ ஞான வள்ளலார் சைவ சித்தாந்தி"
யென்றும், 93, 94, 95 - வது - செய்யுட்களை யறிவித்து, அத்வைதம்
சைவத்திற்கே யுரிய தென்றும், ஷெ நூல்-கர்ணாமிர்தம்-63-வது செய்யுளை
யறிவித்து, "வேதாந்தத்தைத் தழுவியது சைவ சித்தாந்த மென்றும், சித்
தாந்த சைவத்தின்படி, முத்தியி லுயி ருண்டு மல மில்லை. முத்தியில் மல
மில்லா தொழியினும் வினைப் பெத்தர்க ளிடத்தி லிருத்தலால்,மலம் அநாதி
நித்தியம் என்றற் கிழுக் கில்லை. பதி, பசுவுட னென்றும் பிரி வின்றி
நிற்குமாறு போலப் பாசம் நில்லாமை பற்றியே, பாச மநித்திய மெனப்
படும். இவ்வாறே, சிவ ஞான போத முதலிய சித்தாந்த சாஸ்திரங்கள்
போதிக்கின்றன என்றும்" கூறுகின்றார்.

முத்தியில் முப் பொருளுண் டென்றும், இரு பொருளுண் டென்றுங் கூறுகின்றவர்களேயே சிவ ஞான வள்ளலார் பேய்ச் சைவ ரென்றும், பித்த முறுஞ் சைவ ரென்றுங் கூறியிருக்கின்றார். இவர் சிவ ஞான பாஷ்யத்தை யொரு புடை யொப்பியும் ஒரு புடை யொப்பாதும் கூறுகின்றவ ராதலின் இவ ரன்ன படலக்காரர் முதலியோரையும் இலக்கியப்படுத்தாது, தென்மொழிச் சிவஞான பாஷ்யத்தையும் ஏனைப் பதினன்கு சாஸ்திரங்களையுங் கைக் கொள்ளுஞ் சைவரை நோக்கிக் கூறுவாம். சிவ ஞான பாஷ்யத்தின் 6-ம் சூத்திரம் இரண்டாம் அதிகரணத்தில் "அவரெல்லாருங் அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பொருள் ஒன் றென்பதேயா மெனக் கொண்டு, தத்தம் மதங்களோடு முரணுமைப் பொருட்டு, கேவல மென்றும், விசிட்ட மென்றும், மறுதலே யென்றும், அடை கூட்டி விடர்ப்பட்டுப் பொருள் கொள்வர். அவருள் மாயா வாதி கூறுங் கேவலமும், பேத வாதிகள் கூறும் மறுதலையும், சுருதிகளோடு முரணுதலின் ஈண்டைக் கேலாவாம் ஏனையோர் கூறும் விசிட்ட மென்பது பொருந்துமாயினும், அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பொருளொன் றெனக் கோடல் பொருந்தாது. என்னை? ஒன் றென்பது பொருளாயின் ஒன் றெனவே விளங்கக் கூற வமையும். அவ்வா றின்றி அத்துவித மென வுய்த்துணர வைத்து ஓதவேண்டாமையானும், ஒன் றெனப் பொருள் கொள்ளின் மஹா வாக்கியப் பொருள் பயப்ப தோர் விசேட மின்மையின், அத்துவித மென்பதுபற்றி ஆண் டொரு பயன்படாமையானு மென்க. மற் றென்னேயோ அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பொருளெனில், தத்துவமசி (அது நீ ஆகின்றாய்), அகம் பிரஹ்மாஸ்மி (அது நானகின்றேன்) அயம் ஆத்மா பிரஹ்மம் (அது இது ஆகின்றது) என மூவிடம் பற்றி நிகழும் தத்துவ மசி முதலிய மகா வாக்கியங்களைக் கேட்ட வழி, அது என்பது ஒரு பொருள், நீ யென்பது ஒரு பொருள், ஆகலின் ஒரு பொருள் மற்றொரு பொருளா மாறு, யாங்ஙனம் என்னும் ஐயம் நீக்குதற் கெழுந்ததாகலின், அது இது ஆதற் கேதுவாய், அவ் விரண்டற்கு முளதாய சம்பந்த விசேட முணர்த்துதலே, அத்துவித மென்னுஞ் சொற்குப் பொருளென் றுணர்ந்து கொள்க." என்றும், "இரு பொருளே அது அதுவாயொற்றுமைப்பட்டு, ஒன்றாய் நிற்றற் கேதுவாகிய தாதான்மியம் அத்துவித மென்றும் வழங்கப் படும்." என்றும், சிவ ஞான சுவாமி கூறுகின்றமையின், சைவர்கள் முத்தியில் 'பதி பசு' என்னு மிரு பொருளும், இரண்டுள்ளு மடங்காத அத்துவித சம்பந்த மென்னும் பாசப் பொருளுமாய், முப் பொருள் நித்தியங் கூறுகின்றனர். கடாவிய நம் பிள்ளையாரோ, முத்தியில் உயி ருண்டு மல மில்லை யென்கின்றமையின், மலத்தின்பாற் பட்ட அத்துவித சம்பந்தமாய மலத்தினை நீக்கி முத்தியில், பதியும், பசுவும் என இரு பொரு ளுண் டென்று கூறுகின்றனர். இவ் விருவரையுமே சிவ ஞான வள்ளலார் பேய்ச் சைவ ரென்று கூறியதாம். சைவ சாஸ்திரங்கள் முத்தியிற் பசு, பதி, பாசம் என்னும் முப் பொருளும் நித்தியமாகக் கூறு

கின்றன வென்று யாண்டும் பிரசித்தமாயிருக்க, அதனை மறைத்து முத்தாத்மாக்களுக்கு மூல மலமாகிய அஞ்ஞானமும், அவற்றின் சத்திகளாகிய ஆணவ கார்மிக மாயிகமும் நாசமாகின்றன வென்றும், சைவ சாஸ்திரங்கள் முப் பொருள் கூறியதற் கபிப்பிராயம், பெத்த தசையின்கண் பெத்தாத்மாக்களுக்கு முப் பொருளுண் டென்றும், அதனல் சைவ சாஸ்திரங்கள் முப் பொருள் நித்தியங் கூறுகின்றதற்குத் தோஷ மில்லை யென்றும், ஒரு வித சமாதானங் கூறுகின்றார். இச் சமாதானத்தைச் சிவ ஞான வள்ளலாரைச் சந்தித்து அக்கால் கூறியிருப்பாராயின், 'பேச விரண்டுண்டோ பேய்ச் சைவா' என்று கூறுதிருப்பர். சித்தாந்த சாஸ்திரங்கள் முத்தியில் முப் பொருளுண் டெனக் கூறுகின்றதென்று கூறுமிவர், சிவ ஞான வள்ளலார் செய்யுளைக் கண்டவுடன், முத்தியில் முப் பொருளுமிரு பொருளுங் கூறுவோ ரலர், ஒரு பொருளே கூறுகின்றோம், என்கின்றார். அவ்வாறு தென் மொழிச் சைவ சாஸ்திரக்கார ருடன்பாடாயின், முன்ன ரறிவித்த சிவ ஞான பாஷ்ய வாக்கியத்தில் முத்தியி லொரு பொருளைக் கொள்ளும் வேதாந்திகளைக் கண்டித்து முப் பொருளைச் சிவ ஞான சுவாமி நிலை நாட்டுவரா? சிவ ஞான வள்ளலார் வேதாந்தத்தினைச் சாத்திய மாகவும், சைவ சித்தாந்தத்தினைச் சாதன மாகவுங் கொண்டு விளங்கினர். விளங்கின ராயினும், வேதாந்த சாஸ்திரங்கள் பந்த காலமாய விவகார காலத்தில், ஜீவன், ஈஸ்வரன், அஞ்ஞானம் என மூன்று பொருளிருப்பது போன்றே, சைவ சாஸ்திரத்திலும், பெத்த தசையில், பதி பசு பாசம் என மூன்று பொருளைக் கூறுகின்றதென்றும், முத்தித் தசைக்கண், தனது சொரூபம் பிரஹ்ம ரூப மென்று கூறுவது போல், பசு, பதி ரூபமே யென்றும், பாசம் இன் றென்றும், கூறுகின்றதென்றும், கைக் கொண்டு வாழ்ந்தா ரென் றுணர்க. இவற்றினை யுணராது, 'அத்வைத மென்பது சைவத்திற்கே யுரியது' என்று வீணுரை வரைந்தார். அத்வைதம் என்பது சைவத்திற்கே யுரியதா மாயின், சக்தி விசிட்டாத்வைதம், விசிட்டாத்வைதம், அத்வைதம், என்னும் சொற்களைக் கொள்ளு மதத்தர்கட்கு, அத்வைத மென்பது யாது? அத்வைதம் என்னுஞ் சொற்குப் பொருள் யாமிவ்வாறு கூறுகின்றோ மென்று கூறாது, சைவத்திற்கே யுரியது என்று கூறியது வழுவாம். "மும் முதலும் சோராமல் நிற்குமோ சொல்" என்று இவ ரறிவித்த செய்யுள் கூறுவதனையு முணர்வாராக. "சைவ சித்தாந்த சாஸ்திரங்களே சிவ ஞான வள்ளலார் பயின்ற நூல்" என்கின்றார்.

சிவ ஞான வள்ளலார் (சத்திய ஞான போதம்).

கொடிவிழி யன்ன கொள்கைய ளுகி, யாசா பாசத் தார்ப்புண் டன்றே, தன்னைமுன் னீட்டித் தான்பின் ளுகி, மறந்து நினைந்து மதிகத ளுகி, யாகம் பேணி யறிவை மறந்தாங், கிச்சைப் புவிவா யிடர்ப்படு முயிரே.

செயற்கை யியற்கை தெரிக்குங் காலை, செயற்கை யுயிர்க்குத் திரிமல மென்னில், வெண்மடிக் கழுக்கு விரவுந் தன்மை, போல நீங்கிப் புகுவன வதுவே.

சடத்திர ணீப்பத் தனித்திடு மான்மாச், சோகம் பாவனை தொக்கிய பின்றைக், கருடனை நினைப்பான் கடுக்கழன் றன்ன, வுபாதி நீங்கி யுணர் வா யினவே.

சிவனீ யானா யென்னுந் திகழ்வுஞ், சிவனா னானே னென்னுந் திற முஞ், சிவனே யாவினு முளனெனுந் திருவுஞ், சிவனே காட்டித் தெளித் தன னெனக்கே.

அறிவா கானா னெனவறிந் துணர்தல், செறிபரப் பிரமம் யானே னந்தேறல், அறைசிவ னருளி லடங்கா தடங்க, லுருவ தெரிசனஞ் சுத் தியு முயிர்க்கே.

கன்னன் கௌந்தி புத்திர கதைபோற், சீவன் சிவத்தாற் சீவ நீங்கி, மாசறு திங்கண் மண்டிலம் போன்றாங், கவாவிறந் தொளிரு மதிசயம் பெறுமே.

ஆலம் பன்னிவ னவனிரா லம்பன், சுதந்தர மிலியிவ னவன்சுதந் தா னே, சரீரி யிவனச ரீரி யவனெனு, மலநீக் கத்தி லிவ்வழக் கின்றே.

பூரண போதப் பொருடா னாகலி, னான மாகம மவர்க்கேன் செய லே.

சூனிய பாச மாண்டொழிச் சோதி, நானது வென்னு ஞாநமு மின்றே.

ஐவகை ஞாநத் தந்தர வான்மா, வாங்கவை யிறப்பி னதுபர மான்மா.

உன்னலு முரைத்தலு முறுதொழி லுஞற்றலு, மாவிக் கிலைபொறி யறிவொடு மாய்தலி, னங்கை மாட்டென் றறைந்தனர் புலவர்.

சிதம்பர மாதலிற் சேர்விட மில்லை, யவனிவ னாதலி னணுகலு மில்லை, யறிவுரு வாதலி னக்கையு மின்றே.

ஒன்றே யாதலி னுணர்பவ னின்று, நானது வாதலின் ஞாநமு மின்றே.

கோறல் வெகுளல் குறைகோள் குணந்தன், றிருவரு ளில்லோன் செகமுக னையன், வழிபா டில்லோன் மந்த னிவர்க்கில், லிந்நூ லறையி னேழைக் குருவே.

மனுநிக ளொதுக்கி மறைமுடி வுணர்ந்து, வழிபடன் மந்திர கலை யென மதியே.

அதிதிதன் மைந்த ரலமரு காலைப், பிரம கீதையைப் பேசின னெவ னே, சிதாகா யத்திற் றிருவுருத் தாங்கி, மறலியை முனிந்த வாத னெவ னே, வான்முறை யுலகம் வயின்வயி னுதிக்க, நான்முகத் திருந்து நான் மறை யுரைத்தன், றுபநிட தத்தி லொளித்தவ னெவனே, அவனே பிரம மென்றறி மன்னே.

மூலமென் றழைத்த முனைக்கொம் பியானை, வருத்தந் தீர்ப்பான் வந்தவ னெவனோ, தூணிலு மிருப்பன் றுரும்பிலு மிருப்ப, னெனுமழ சொல்லுக் கெதிர்ந்தவ னெவனோ, துகிலுரி காலைத் துருவதன் மகட்கு, மாளாத் துகிலை வருத்தின னெவனோ, வருச்சுநற் காக வமரிடை யிருந் தாங், குணர்மெய்ஞ் ஞான முரைத்தவ னெவனோ, வவனே பிரம மென்றறி மன்னே.

கல்லா லின்கீழ்க் கடவு ளாகிப், பொல்லா ஞானம் புரிந்தவ னெவனோ, மால்வரை வில்லாய் வலியவர் புரங்க, ணீறெழ வொருக்கி நின்ற மூவ ரைச், சேவடி நீழலிற் சேர்த்தவ னெவனோ, காலனை மாட்டிக் கவின்சிறு பாலன், மரணந் தவிர்ப்பான் வந்தவ னெவனோ, அவனே பிரம மென்றறி மன்னே.

ஒருமல வழக்கு மிருவினைத் தொடரு, மும்மலச் செருக்கு நால்வகை வாக்கு, மைவகைப் பொறியு மறுவகைக் குற்றமு, மற்றா லன்றி யறிவா காயே.

பசு பதி பாச விளக்கம்.

பாச மைந்தையுந் தனித்தனிப் பரிந்திட நீக்கி, நேச மாகிய வறிவுரு நீயெனக் காட்டிப், பேசு மேழ்வகைப் பிறப்புனக் கிலையெனப் பேசித், தூசு நீக்கிய சுயம்பிர காசனைத் தொழுவாம்.

துக்க சாகரத் துக்கொரு தோணியாய்ப், பக்கு வச்சுக னைப்பெறு பாக்கிய, தக்க வான்ம தயாபர னாகிய, மிக்க வேத வியாதனைப் போற்று வாம்.

பாவ மகலப் பரிகார விதத்தைப் பகருஞ் சிலநூல்க, ளாவ லோடு மறம்வளர வறங்கள் பகருஞ் சிலநூல்க, ளேவ மில்லா முத்தியினு மீரண் டே யென்னுஞ் சிலநூல்கள், சீவ பிரம வயிக்கியத்தைச் செய்யு மிந் நூற் சித்தாந்தம்.

புன்னூலாம் பரசமயப் பொய்ந்நூலின் மயங்குவரோ, செந்நூலா மருமறையின் சிரந்தோளிரு முபநிடத, நன்னூலி னெறிநின்ற நயமுண ர்ந்த நாதாக்க, ளெந்நூலுங் கைவிட்டே யிந்நூலைப் பற்றுவார்.

மண்ணோடு மண்ணார் போனார் வளியொடு வளியார் போனார், தண் ணோடு தண்ணார் போனார் தழலொடு தழலார் போனார், விண்ணோடு விண் ணார் போனார் விளங்கரி வுருவாய் நின்ற, நண்ணிய னாவே யெங்கு நுழைந்திடா திருக்கின் றேனே.

செம்புயி ராகு மந்தச் செம்பினிற் களிம்பு பாசஞ், செம்பினிற் களி ம்பு போனாற் செம்பொனா மாறு போல, நம்பனார் ஞானத் தாலே நானெ னும் மலம்போம் போனா, னம்பனா ராவ னென்று நான்மறை சொல்லு மன்றே.

மன்னையு மறந்து மிக்க வகசர வடிவ மாகித், தன்னையு மறந்தி ருந்த தனயனைப் போன்று நீயு, மென்னையு மறந்தைம் போத வெயினர்தம் வடிவ மாகி, யுன்னையு மறந்தாய் நீயேன் னுநவென வுணர்ந்து கொள்ளே.

மாசறப் படித்தா னேனு மயலறத் தெளிந்தா னேனு, மாசறத் துறந் தா னேனு மஞ்செழுத் துணர்ந்தா னேனு, மீசன்வே றியான்வே றென்னு மிருமையுங் கழலா னுகிற், பாசமுங் கழல்வ தின்றும் பதிந்துவந் தானு மின்றே.

பாசத்தாற் பசுவெனப் பகரப் பட்டன, பாசந்தா னிரிதாப் பதியே னப்படுங், காசத்தாற் குருடெனக் கழறப் பட்டன, காசந்தா னிரிதாக் கண்ணெ னப்படும்.

சீவனு மிந்த வான்மா வியற்கையைத் தெரிக்குங் காலைக், கேவலன் சுத்தன் சாந்தன் சூக்குமன் கிளர்ச நாதன், பாவமில் சர்வா நந்தன் பகருஞ் சர்வ சாக்கி, மேவுசிந் மாத்தி ரந்தன் மிகுசுக சொருப னுமால்.

யாதா மொருவ னிவ்வண்ண மிலகு மாத்ம சொருபத்தைப், பேத மாக வறியுமவன் பேசி னுந்ம வபகாரி, யோது சோர னுலெந்தப் பாவ முனுற்றப் படவில்லை, வேத மெல்லா முறையிடினுந் தெளியா ரைய மே லிட்டோர்.

புண்ணிய பூமியிற் பிறந்தும் பூசுரப், பண்ணவ னுகியு மூங்கை பாறி யுங், கண்ணிய குடும்பமாங் கடலை நீந்திடான், றிண்ணிய பிரமப காரி தேறிடே.

ஆகையா னுனு முயற்சியி னுலு மவிழ்ந்தபே ராதர வாலுங், கோகன கத்தா டருகுர வன்பாற் குறைவறு பத்தியி னுலும், மோகமே விளைக்கும் பிரகிரு தியின்றன் பாவனை முழுதையுந் தணந்திட், டேகமாஞ் சிவனே நானெனச் சிந்தித் திடவொழிந் திருந்திடத் தகுமால்.

யாவ னொருவன் றன்னிடத்தி லிருக்குஞ் சிவனை விட்டயலே, மேவி யிருக்குஞ் சிவனைநனி பூசிப் பவன்றன் வியன்கையிற், பாவி யிருக்கும் பாயசத்தை விட்டுக் கூன்கை பரந்தோடித், தூவுந் துளியை நாறனியாற் றுய்க்கு மவனே சொல்லுங்கால்.

வானவர் தமக்கு நீங்கா மயறரு பேத வேதா, வானவஞ் ஞான ஞான வலியினுற் சிதைந்த பின்னர், தீனமார் சீவ னென்றுஞ் சிவனென்று மில் பே தத்தை, யீனமார் புந்தி யாலே யெவன்பண்ணப் படுவான் கொல்லோ.

ஆன்மா சுத்தன் சதாநித்த னழியா வின்பச் சுகசொருப, னுன்மா செஞ்சொற் பிரகாச னஞ்ஞா னத்தா லசுத்தனைப்போ, லான்மா தோன்றப் படுகின்று னருவ மாகி நிரவயமா, மான்மா ஞானந் தாற்சுத்த னுகி விளங் கப் படுகின்றுன்.

ஆன்மா நித்தன் சருவபரி புரண னரிய கூடத்த, னுன்மா தோட மிலியோக னுகி யிருந்தும் பிராந்தியினு, லான்மா பிந்நம் போற்றோன்றப்

படுவ னரிய ஞானத்தா, லான்மா பிறநம் போற்றேன்றப் படானேன் றறைந்தா னழலாடி.

எப்போ துதன்சொ ரூபமெ தார்த்தமா, யொப்ப நோக்கி யுலகங்க ளியாவையுங், கப்பு மாயா மயமெனக் காண்பனே, லப்போ தேயச் சுக வடி வாயினுன்.

எப்போ துந்தன் னிடந்திற் சருவமுந், தப்ப லின்றியே தான்சரு வத்தினு, நுட்ப ஞானநோக் கானேக் குவானெனி, லப்போ தேயப் பிரம மடைவனுல்.

எப்போ தியாதாமொ ருவனுக் கிப்பவ, வெய்ப்பு லாம்பிணிக் கேக மூ லிக்கையாம், பெட்பின் மேலாம் பிரமஞா நம்பெறி, லப்பொழு திவ னே சிவ னுயினுன்.

வேத மெய்ம்மொழி கண்டு விமலரா, யாதி யாந்ம நிலையறி ஞாதி யை, நோத கச்சொலித் தூடிக்கு நோய்யவ, ரேத மாகர குக்கினை யாவரே.

நெல்லினுக் குமியுஞ் செம்பி னிடுகா ளிதமும் போலத், தொல்லை தொட் டின்று காறு முயிரிடைத் தொக்கி நிற்கும், வல்லியோர் பங்க ஞசான் வடிவெடுத் தருளுங் காலம், புல்லுறு பனிபோற் போன்றும் போதவா தவனெ முங்கால்.

இம்மல மூன்று லாவி யிருளடைந் தறிவு மாழ்கி, மும்மைகொள் புவ னந்தோறு முறைமுறை போகி மீளுஞ், செம்மலங் கருணை வள்ளற் றிரு வருட் டிரோதை மாறி, மம்மர்கொள் பாம்பு மிழ்ந்த மதியென விளங்கு மன்றே.

ஆக்கைக்குஞ் சாக்கி னுமே யனைந்திற்குஞ் சாக்கி னுமே, போக்கொடு வரவு மில்லை புண்ணிய பாவ மில்லை, வாக்கொடு மநமு மில்லை மந்திரந் தியாந மில்லை, சாக்கிமாத் திரமே யென்று தெளிந்தவன் சந்நியாசி.

நிறைந்த மாகடற் போலுயர் நெடுமறை முடியிற், சிறந்த போதமா வாக்கியச் சிரவணந் தாலே, யிறந்த சிந்தையி னுற்றனை யீச்சுர னுக, வறிந்த வன்சொலு மதிவர்ணாச் சிரமியா வானுல்.

வருணமாச் சிரம மாகி மலிகதே கத்தின் கண்ணே, கருமலி மாயை தன்னுற் கற்பிக்கப் பட்ட வெல்லாம், பொருவரு போத னுமெற் கெப் போது மில்லை யென்றே, யருமறை யாலு ணர்ந்தோ னதிவர்ணாச் சிரமி யாவான்.

சொன்னத்திற் கடக மாதி சூழணி தோன்று மாபோ, லென்னிடத் தகில மெல்லாங் கற்பிக்கப் பட்ட தென்றே, பன்னுமா மறையந் தத் தாற் பகுத்தறிந் ததுப வித்திங், கந்நிய மிலாமை கண்டோ னதிவர்ணாச் சிரமி யாவான்.

ஆதித்தன் சக்தி தாகத் தகிலஞ்சேட் டிக்கு மாபோற், போதந்தேன் சந்நிதா நந்திற் புவநஞ்சேட் டிக்கு மென்றே, வேதத்தி னந்தத் தாலே

மெய்ப்பட வறிந்து ணர்ந்தோ, னாதித்த னிவனே யென்ன வதிவர்ணாச் சிரமி யாவான்.

இப்பியிற் பிராந்தி யாலே யிரசிதந் தோன்று மாபோல், மெய்ப்படு மென்னி லிந்த வியன்சக முதித்த தென்றே, யிப்படி யாவ னேனு மெ ழின்மறை முடிவி னாலே, யற்புத வறிவு ணர்ந்தோ னதிவர்ணாச் சிரமி யாவான்.

இந்தஞா னத்தி னாற்றன் னஞ்ஞான மிறக்கு மத்தாற், றொந்தமாந் துவித வத்து தொலைந்திடுந் தொலைந்த வத்தாற், புந்திதா னசிக்கு மத்தாற் புகழிகழ் நசிக்கு மத்தா, னந்திடுங் குடும்ப மத்தா னானெனுஞ் சொரூபந் தோன்றும்.

பாம்பிதென் றுணர்ந்த போது பழுதையே யில்லை வெய்ய, பாம்பிதன் றெனவு ணர்ந்தாற் பழுதையே யானாற் போலச், சோம்புறு குடும்பி யென்னிற் றுகளுறு சீவ னாகுஞ், சோம்புறாக் குடும்பி யென்னிற் றுகளறு பிரம மாவான்.

கன்னனன் புளினா னென்றே கவலையுற் றழுங்குங் காலைக், கன்னநீ ராத னன்று கௌந்திபுத் திரனென் றாற்போ, லங்கிய வுடனா னென்றே யயர்ந்துள மழியேன் மைந்த, வங்கிய மென்று கண்ட வறிவுநீ யுணர்ந்து கொள்ளே.

கல்லெலா மெறிந்த மீதிக் கையினை யெறிவா ருண்டோ, சொல்லிய கருவி யெல்லாந் தொலைத்தவன் மீதி யன்றோ, வல்லநீ ரவனே சோதி யாகிய பிரம மாவா, னெல்லையின் மறைக ளெல்லா மிவ்வண முரைக்கு மன்றே.

ஒருவனொரு தேயத்திற் பிரமசரி யாயுற்றான், மருவிமற்றோர் நாட்டகத்தின் மகிழ்கிரகி யாயினான், பாவிபின்னோர் மண்டலத்திற் பகர்துறவி யாய் நடித்தான், விரவியகோ லம்போக்கின் வேறில்லை யவனிவனே.

பொன்னை யன்றிப் பூணில்லை பூணை யன்றிப் பொன்னில்லை, யென்னை யன்றிச் சிவனில்லை சிவனை யன்றி யானில்லை, யின்ன வண்ண மறிந்தோனே யீசன் றனையு மறிந்தோனா, மின்ன வண்ண மறியாதா னீசன் றனையு மறியானே.

நிறையற்றி வாயி ருந்து நின்மலன் றன்னைத் தேடி, மறைமுத னூலா ராய்ந்தும் பின்னரு மயங்குந் தன்மை, யிறைவனே யெனக்கு நாக்குண் டில்லையோ வென்று கேட்க, வறைவது நாக்கே யென்ன வகந்தெளி யானைப் போலும்.

என்று மிருந்த படியிருந்து மியல்பே யென்னு மொருவேத, மொன்றே யொழிய விரண்டாம்வந் தில்லை யென்னு மொருவேதம், வென்றிப் பாழ நீயும்வே றில்லை யென்னு மொருவேதந், துன்று மதுவே நீயானா யென்றே சொல்லு மொருவேதம்.

கேவலச் சகலன் மூன்னாட் கேள்பகை யிரண்டு மின்றி, மேவிய சுத்த மென்னு மெல்லணை மீதி ருந்து, சாவுயர் பிறப்பு மில்லாத் தத்துவச் செங்கோ லோச்சிப், பாவனை யிலாத கானம் படர்ந்துந மாறி னனே.

அறுவகைச் சமயத் தோர்க்கு மதீதமா யகள மாகி, மறுவறு பொரு ளா யொன்றாய் மன்பதை தொறுநி றைந்து, குறைவறு பிரம நாமே யென்றுகோ சங்க னீங்கி, யறிவுரு வாகி நிற்ற லழகிய யோக மாமே.

உடலொரு முயிரு மாகி யுயிர்தொறு முணர்வு மாகிச், சடமச டங்க டோறுஞ் சாக்ஷியு மாகி நின்ற, வடல்புனை சிவனார் நம்மை யன்றிவே றில்லை யென்றே, யுடைகுட விசும்பு போலொன் றுதலே யோக மாமே.

இந்திய மாந்மா வென்ப ரிறைவனின் றிருநோக் கில்லார், முந்திய பிராணன் றன்னை யுயிரென மொழியா நிற்பர், சிந்தையை மநவ கத்தைப் புந்தியைச் சீவ னென்பர், சந்தறு மிவைகட் கெல்லாஞ் சாக்கிநா னென்று கண்டேன்.

பிண்டமா முடனா னல்லேன் பிராணவா யுவுநா னல்லேன், கண்ட வைம் பொறியு மல்லேன் கரணமோர் நான்கு மல்லேன், பண்டைய வறிவு னானென் றுன்னருள் கொண்டு பார்க்கி, லெண்டிசை கீழ்மே லெங்கு மேகனா யிருக்கின் றேனே.

காயனை யகாய னாக்கிக் கண்டனை யகண்ட னாக்கிப், பேயனைப் பிரம மாக்கிப் பிறப்பிறப் பிலாமை யாக்கித், தாயினு மினிய னாகி வந்தெனைத் தகைந்தாட் கொண்ட, தூயசற் குரவ நின்னைத் தொழுந்தொறுங் களிது ளங்கும்.

பாசத்தாற் பாசி யாகிப் பலபல பிறப்பிற் சென்று, பாசத்தாற் பிறந்தி றந்து பலபல போகந் துய்த்த, பாசத்தைத் தாளாற் போக்கிப் பதித்துவம் பதித்த நாதன், பாசத்தை நினையுந் தோறும் பசுத்துவங் கழலு மன்றே.

எல்லாருங் களிதுளங்க விரும்பையிரும் பொன்னாக்கி, நல்லார்க டொழுந்தேவாய் நாட்டுகின்ற ஞாயம்போற், கல்லாத புலையேனைக் கருணை யினாற் கடைக்கணித்துப், பொல்லாத பரப்பிரம மாக்கினையென் போல் வந்தே.

சித்தாந்த தரிசநம்.

திருமூலர் மாலையெனுந் தெப்பத்தைப் பற்றிக், கருவேலை யைக்கடப் போங் காண்.

திருநோக்கான் மூலமலந் தீயும் பரிசத்தா, லிருண்மாயைக் கூட்ட மிரியும்.

திருமொழியாம் கன்மமலஞ் சிந்துந்தி யாநத்தாற், பெருமாயை போ யொழியும் பின்.

சைதந் நியவுருநா னென்று நமநீங்கல், சைதந் நியனுருவந் தான்,

எனைவிட வேறில்லை யியானே பரப்பிரம, மெனவுணர்த றற்றெரிசனம்.

அந்தச் சிவநம்மை யன்றியிலை யென்றோர்த, லுந்துஞ் சிவயோகமோர்.

ஆமயத்தை நீக்கி நிராமயத்தை யாதரிக்கி, னுமயம்போ நீயேய வன்.

புத்திக்குச் சாக்கியாம் போதமய வான்மா, புத்திசட மாதலினற் பொய்.

சிவனத்தாற் சீவனெனல் சீவமிறந் தாலிந்தச், சீவனே யந்தச்சி வம்.

ஊனை யொதுக்கி யுணர்வாக்கி விட்டபினர், நானே பிரம மென நாடு.

சொப்பநமுஞ் சாக்கிரமுநீ தொலையொத்த காலத்துச், சுப்பிரம மென்றுநீ சொல்.

உபதேச மாலை.

சிவபர மிரண்டுந் தேருமிடத் தேகமென்று, மேவியசின் முத்திரை கொள் மெங்காத்தா-லோவில், வழக்கறுத்தான் பல்சமய வாதிகளே காண்மின், மழுக்காத்தி லேந்தியவெம் மான்.

பாசத்தை விட்டாற் பசுவோ பதியோசா, னுசற் றவர்வணங்கு மையனே - யோசித்துச், சொல்வா யருட்குருவே சுத்தபரி பூரணனே, யெல்லாமாய் நின்றவனே யின்று.

பாசத்தி னலுனக்குப் பாசியெனும் பேர்வந்த, தாசற்ற மாணவனை யக்கே - ணேசித், தருமறையி னலு மநுபவத்தி னலும், பிரமமென்று மீசனென்றும் பேர்.

தீக்கையினு லுன்னைச் சிவமாக்கி னேமதன்றி, யாக்கைசீ சிவவடிவ மாக்கினே - னோக்கியே, நானேநீ யென்று நவின்றுமுப தேசித்தோ, மேனே மயக்கமெ ழும்.

என்று பிறந்தேனு னென்று வளர்ந்தேனு, னென்று துயருற் றிறந்தேனு - னென்று, மழியாத சிந்துநநா னென்பே மகிழ்தல், நழுவாத நின்றரிச னம்.

நானே சிவன்சிவனே நானென்று நாடிவெறுந், தானுகி நின்றநிலை தானன்றோ -- வானுப், பவசலதி நீந்திவரும் பண்புடைய மாணு, சிவபோக மென்றே தெளி.

உன்னை யொருவ னுயர்சாமி யென்றுரைத்தா, லென்ன மகிழ்ச்சியங்கே யெய்தினுய் - பின்னொருவன், பாவி பசுவென்றாற் பதைபதைப்பா யாகையினுற், சீவனல்ல நீயே சிவம்.

விழலாம் விலாமிச்சி வேட்வெனுக் கீடோ, மழலா மயப்பா மாலி - தொழிலா, லவமா முவகி லவதரித்த மாணு, சிவமாநந் தையமென்ன செப்பு.

ஈசனுனக் கெஞ்ஞான்று மிதசத் தருவென்னும், வாசகத்தைச் சொல் லக்கேண் மாணவக - வீசன்றன், தத்துவத்தி லாக்கித் தவத்தில் வளர்த் துன்னைத், மூந்தியினிற் சங்கரிப்பான் முன்.

சிவமல்ல நாமென்றுஞ் சிவனு மென்றும், விவ்காரம் வந்தவிட மெல் லாங் - துவமகலச், சாம மறைபுகலுஞ் சத்தியமா வாக்கியத்தைத், தோமற வுட் கொண்டு துணி.

ஆதிமறை யாகமங்க ளெல்லா மளவிட்டே, யோதி யுணர்ந்தெல்லா முணாத்தாலும் - வேதை, யெழுநான்கு கோடி யிழிபிறாய மெல்லாம், விழுவர் சிவனுகா விடின்.

மாதாபி தாகாத்தி மற்றொருக்க லூகாத்தி, யாதார வைப்பு மாண்மனையுந் - தீதான, நாத்தியிவை மெய்யென்று நம்பாதே யென்றறைந்த, மாத்திரத் தே வீடுற்றான் மன்.

தாயரையுந் தந்தையையுந் தற்சார்ந்த கேளிரையு, மாயு மயல்காட்டு மனைவியையுஞ் - சீயென்று, சோறீபநம் போறீ கண்டெட்டாத் தூரப் போ யோகநிலை, நிற்பவனை ஞானியென நேர்.

எண்ணுஞ் சிவயோக மான்மியத்தை யென்சொல்கேன், மண்ணுல கும் விண்ணுலகும் வந்திறைஞ்சி - யண்ணுவென், றோலமிடு நீசிவமா யோரிமைப்பு நிற்பையெனிற், காலனுங்கை கூப்பிநிற்பன் காண்.

ஒவா பவக்கடலுக் கோரம்பி யாகலான், மாவாக்கி யம்புகல்வேன் மைந்தாகேள் - மூவாத, தற்பதநான் றொம்பதசீ சாற்றசியா னுயென்னு, முப்பொருளுங் கண்டு முடி.

அறிவுநா மென்றறிய மாட்டாதா ரன்றோ, வெறிகாற் புனலருந்தி யென்றுந் - தறிபோலு, நிட்டையுடன் மட்டாய் நெடுங்கால நின்றார்க, ணட்டமலா லுண்டோ நயம்.

சுகன்வாம தேவன் றுருவாசன் காதி, மகன்விதுரன் வெண்காடன் மாறன் — சகமாண்ட, பத்ரகிரி வான்மீகி பற்றற்றே முத்தியினை, யுற்றாரு ரார்க்கிவரோர்ப் பார்.

அண்ண லுவரைக் கரச னலகிறந்த, வண்ணமுலைப் போக மகிழ்ந் துண்டு - மெண்ணின், முநிக்குழுவின் முன்னே முழுப்பிரமங் காட்டி, மாக்கலை தீரவகுத் தான்.

பாசங் கடந்து பதியான பண்ணவர்க, ளாசங் கடத்தி லலைந்தாலு - மீசன், றலையோட்டி லேயிரந்துந் தன்மைக்குறைந் தானோ, மலைகோட்டி முப்புரமட் டான்.

சிவ ஞானப் பிரகாச வெண்பா.

பாலொடு சேர்ந்தநீர் பாலாகு மாங்கதுபோல், வாலறிவ னைச்சேர்ந்த மன்னுயிர்கள் - வாலறிவன், றானுகி நிற்பதல்லாற் றண்டாத வைம்பாச, வூனுகி நில்லாரு வந்து.

ஆயிழையைக் காமுற்றே யாலிங்க னஞ்செய்தே, னாயிழையே தானென வாதரம்போன் - மாயையைவிட், டையனொடு சேர்ந்தபினு மாங்கிரண்டுண் டேயென்று, லுய்யுநெறி யில்லையுவந் து.

அரசன் மகனரச னாகின்றாற் போலப், பரமசிவ னிற்றோன்றும் பல்லுயிரும் - பரம, சிவனாகி நிற்பதலாற் சீவனாய் நில்லா, சிவனாணை யுள்ளே தெளி.

ஆசானே நீனானேன் றங்கைத் தலைவைத்தான், பாசா திகளைந்தும் பாறித்தே - யாசானை, யுள்ளபடி நோக்கி யுறுபூசை செய்வதல்லாற், கள்ள னிடத் துண்டோகைம் மாறு.

நீயேநா னென்று நிலையளித்த தேசிகனைத், தூய மலரெடுத்துத் தூவாதார் - போய்வாழுங், காட்டிற் கனிதுய்க்குங் கருங்குரங்காய்ச் சென்னாயாய், வேட்டுவனாய்ச் சென்மிப்பார் மேல்.

ஆக்கையு நீயல்ல வைம்பொறியு நீயல்ல, தாக்கு கரணங்க டான்ல்ல - ருக்க, வுடலல்ல சீனல்ல வுண்மைநீ யென்றார்க், குடலுருகி நிற்பேனு வந்து.

கறுத்த விரும்பைக் கனகமய மாக்குதல்போற், சிறுத்தநமைப் பேருருவாய்ச் செய்தாரை-வறுத்த, விதைபோல் வரும்பிறப்பை வோறுத்த வேதியரைப், புந்தமகத்து ளெப்போதும் போல்.

அறிந்தவிடத் தில்லை யறியாமை யத்தைப், பிறிந்தபினும் பேசல் பிழையன்றோ - செறிந்த, சுடர்கொண் டிருட்டேடித் துயருறுவா ருண்டோ, மடமகமன்ற மாணாக்க னே.

பாவனா தீதப் பதியேறிப் பின்னுநாஞ், சீவனென்றுஞ் சிந்திப்பா ருண்டோசொல்—சிவ,மகன்றபுழுப் பின்புழுநா னென்றறைத லுண்டோ, சுகமறிந்த துண்டோ சுகம்.

ஊனுறங்கி யானாத வுள்ள முறங்கியொரு, நானுறங்கி ஞால முறங்கி யுமே—தானுறங்காச், சிவனை யறிந்தவனைச் சீவனென லாமோ, சிவகுரு மா தாவிதனைச் செப்பு.

ஞான விளக்கம்.

ஆகாயந் தேடி யலைவோருக் காகாய, மாகாயத் துட்காட்டன் மானுமே-யேகபரி, பூரணத்தைத் தேடிப் புலம்புவோ னுக்காசான், பூரணனீ யென்று புகறல்.

ஆறாறு தத்துவத்துக் கப்பா லதீதத்தே, வேறாகத் தம்மை விசாரித் துங்-கூறாக, வாநந்தந் தாமென் றறியா வறிவிலிக, ளாகந்தந் தேடியலையும்.

தத்துவத்துக் கப்பாலே தன்னைத் தரிசித்து, நித்தபரி பூரணத்தி னில்லாமல்-சுத்த, பனிமாயை யாற்செய் பதுமையினைத் தேடு, னனிமா னிடமிருக நாடு.

ஊழா லுடம்புண் டுடம்பால் வினையுண்டு, தாழும் வினையாற் சக முண்டு-காழ்கொண்ட, வித்துமுளை யும்போல வீயா தொருநாலு, முத்தி யிலே வீயுமு ளை.

நினைப்பு மறப்புமிந்த நீடுலகு மித்தை, யனைத்தும்போ லீச னாவே ன்-உனற்கரிய, கன்னனுக்கு வேடு கழித்தகதை போலுனக்கு, மந்நியமே வேடென் றறி.

நல்லகுலத் திற்பிறந்து நல்லாரைச் சேர்ந்தொழுகி, நல்லறிவு பெற்று டைய நன்மாணா-நல்ல, சிவம்வேறே யென்றெண்ணிச் சிந்தை கலங்காதே, சிவமென்ற நீயேசி வம்.

நானே பரமசிவ னானே பரப்பிரமம், நானே யுலகுயிர்த்த நாதன்-நானேயோ, கண்டதுவுங் காணாது மென்றிவனைக் கண்ணாரக்கண்டவனே சீவன்முத்தன் காண்.

மலமில்லை மாசில்லை மானாபி மானங், குலமில்லை யென்றறிவின் கூற்றிற்-கலக, மலமுண்டு மாசுண்டு மானாபி மானங், குலமுண்டு திரிசியக் கூற்றில்.

அத்துவிதக் கலி வெண்பா.

அறுவகையாற் போக்கினே மானமையா னீயே, பிறிவில் பிரமமெ னப் பேணி-மறுபிறப்பை.

ஈசன்வே றியான்வேறென் றெண்ணுகின்ற பாதகரை, நீசரெனக் கண்டு நினையென்றா-னாசையொடும்.

வேத முடிவறிந்த வேதியரைக் கூடென்றான், பேதநிலை யெல்லாம் பிரியென்றான்.

அதி ரகசியம்.

வானே முதலாம் பூதங்க ளல்லை கரண வகுப்பல்லை, யாறு பொறியு மைம்புலனு மல்லை யறியு மறிவல்லை, யூனா ருடம்பின் வயத்திலே யுள்ளந் தளரே லொன்றாய, நானே நீயென் றருள்செய்த ஞான குருவை வணங்கு வாம்.

ஆல யந்தொழு வறந்தலை நிரப்புநல் லருச்சனை புரியென்ற, யோல மிட்டுநான் மறையெலா முரைப்பது வுலகரைக் குறித்தன்றே, மூல காரண பரம்பரஞ் சூக்கமாய் முழுதையுங் காணென்னாச், சீல முறிய வறி ஞரைக் குறித்துரை செய்ததம் மறையன்றே.

தந்தைதா யிவரோ வென்றான் றாரகம் பிரம மென்றான், வந்தொடி யாசை யாலே பாகதி யிழந்தே னென்றான், புந்தியார் போந்த பாக்குப் பொறுக்கிலே னென்றா னந்தோ, வெந்துயர்க் கடலில் வீழ்ந்தே னென வுளம் வெருவி னானல்.

ஈதுமெய் யீதுபொய்ம்மை யெனும்வத்து விவேக மெய்திப், பூதலத் தாசை மேலைப் புவனத்திலாசை போக்கிச், சாதுநற் சமமே யாதி சட்குண தானுய் மீள், மோதுவெங் கலியை மாய்ப்பான் முத்தியில் விருப்ப முற் ருன்.

கண்டான் குருவைக் கண்ணுறக் கதறி வீழ்ந்தான் கமல மிசை,யண்டா வானே செம்மாலே யயனே யென்று னகமகிழ்ந்தான், ருண்டா லியலும் பணிசெய்யத் துணிந்தான் பணிந்தான் மும்முறையே, பண்டா னிறைந்த பாவாலுங் கவா யென்னப் பாடினுன்.

பஞ்ச பூத நீயல்லே பஞ்ச கோச நீயல்லே, விஞ்சு கரண நீயல்லே விகுதி புருதிநீயல்லே, துஞ்சு சீவ னீயல்லே தோன்று பரமு நீயல்லே,நெஞ் சிற் சிறிது மையுறே னீயே யந்தப் பரமசிவம்.

ஆக வேடி வாகிய சேடனே, யேகனீயென் றியம்பலு மெம்பிரான், மோக வாரியின் மூழ்கிய பாவியே, னேக னுருவ தெவ்வண மென்றையே.

என்றியம்பிய வேழையை நோக்கியே, நன்றெ னநகைத் தானெங்க ளையகன், றென்று தொட்டுறும் வாதனைச் சோம்பினு, லன்று நீயப் பரம்பொருளாநவாய்.

நாலு வேதமு மோது நலத்தினை, யேல வோதியு மேழைகட் கென் செயப், பாலு மெய்யும் பறையனுக் கென்செயத், தோலு மென்புந் துரிசு மொழியதே.

சமயமேபர மென்னுஞ் சமர்த்தராய்ச், சமய சாத்திரங் காட்டுஞ் சழக்கர்கள், சமய மென்னுஞ் சத்தார்த்த முணர்கிலீர், சமய மென்பது தன்னை யறிநிலே.

கற்புடை மகளி ரெல்லாங் கணவனே தெய்வ மென்பர், சிற்பொலி சமய வேதச் சிலையதையே தெய்வ மேன்பர், தற்கொவி மாந்த ரெல்லாந் தாருவே தெய்வ மென்ப, ரற்புறு பெரியோ ரெல்லா மறிவையே தெய்வ மேன்பர்.

நித்தன் றுரைத்த வாக்கியப் படியே நிகழ்த்துவன் பிராந்தியைத் தினையுஞ், சுத்திய மிந்த வுலகெனல் கருவி தணந்திடா துடலைநா னென் னல், கத்தபாத் தாவு நானென ருனுங் கடவுளும் வேறெனக் கருதல், சித்துரு வா யிருந்துநா னுகேன் சிவனெனல் சிதடர்பா லறியே.

காசி ரஞ்சியங் காளத்தி கழுக்குன்றங் காஞ்சி, மாசி லாருறைப் பருப்பதங் கேன்ன மறைக்காடு டேசி லாதுறை மூர்த்திதந் தெரிசன மெல் லார், நேர் கன்றிநச் சேவையை நிகர்க்குமோ செப்பில்.

ஆவயா னனே யெல்லாப் பொருள்கட்கு மறிவாய் நின்றே, தேகமா திகளுக் கப்பாற் சிதம்பர வடிவ மாகி, யேகனு யநாதி முந்த னுயெனில் வேறெரன்றின்றிப், போகயோ கங்க ளின்றிப் பூரண வறிவா னேனே.

அறிவென்னு முதல்வேத மகமென்னு மிரண்டாமோத், தறிவதுநீ யானாயென் றறையுமுன் றாம்வேதஞ், செறியிந்த வாத்மாவே சிவமென்னு மதர்வணஞ், செறியுநால் வாக்கியத்தின் சித்தாந்த மறிந்தேனே.

தானேநீ நீநானே யானமையான் ஞானகுரு, வானவனே கைம்மாறும் வழிபாடுந் தோத்திரமு, மீனமிலாப் பூசனையு மியற்றுவான் றனைக்காணே, னூனுமிலை யுயிருமிலை யுனையன்றி யொன்றுமிலை.

எல்லாநா னென்றுணராக் காலத்தி லிடர்ப்பட்டே, னெல்லாநா னென்றுணர்ந்த காலத்தி லின்புற்றே, னெல்லாநா னேயன்றிங் கெனையெடுத்து விழுங்கினை, யெல்லாநீ யென்றுணரு மெண்ணமும்போய் மாண்டதே.

ஒன்றென்று சொல்வதற்கு முனையில்லை நாவில்லை, யன்றிதா மென்பதற்கு மறிவில்லை செயலில்லை, சென்றொடுங்கு மாறில்லை சோரநிற் பதுமில்லை, நன்றுமிலை தீதுமிலை நானுமிலை நீயுமிலை.

திரண்டொழுகும் பேராற்றிற் சிறுவூற்றுக் குழிதேடிப், புரண்டுபுரண் டழுவார்க்குப் புத்தியெவர் போதிப்பா, ரிரண்டிறந்த வானந்த மெழுந்தபின ரறுசமய, முரண்டதுசிற் றாற்றுண்டோ முழுஞான மூர்த்தியே.

சிவாகமக் கச்சி மாலை.

அறிவா யிருந்தறி யாமையை நோக்கி னஃதொழியுஞ், செறியும் பரிபூ ரணவுருத் தானொளிற் றேகமறு, மறிகரு மங்கட்குச் சாக்கி யுயிரெனின் மாளுமது, பிறியா நிலையிது வென்றான் பெருங்கச்சி யேகம்பனே.

விருப்பு வெறுப்பற் றுன்வேத மொழிப்படி மெய்யுணர்ந்து, மரிப்பைச் சனிப்பையு மற்றொளி யாகிய மாதவர்பாற், கருப்புச் சிலையனுங் காலனும் வந்தென் செயக்கடவர், நெருப்பைப் புழுப்பற்றுங் கொல்லோ நெடுங்கச்சி யேகம்பனே.

அஞ்ஞான நீக்கத்தி லாருயி ரேசிவ மானமையான், மெய்ஞ்ஞான மென்ப தெவர்க்குஞ் சரியொக்கும் வேறென் றுன்னிப், பொய்ஞ்ஞானம் பேசும் புருடர்க்குன் பாதப் புணைகிடையா, வெஞ்ஞான் றவர்க்கருள் செய்குவை யோகச்சி யேகம்பனே.

வேறென்று பேசுவ தெல்லாம் விவேகமி லாமையன்றே, கூறொன் றிலாமறை கூறுஞ் சிவனுஞ் சீவனொன் றுந், தேறு முமையுருந் தேக மென் றும்மிதைத் தேறுவரோ, வீறின் மலவயப் பட்டோ ரெழிற்கச்சி யேகம்பனே.

சிருட்டிக்கு முன்னுயி ரெல்லாஞ் சிவமெனச் செப்புமறை, சிருட்டிக் குப் பின்னுயிர் வேறுபட் டான்சிறு சீவனென்றே, சிருட்டியை நீக்கிச் சிவோகமென் பாவனை சேர்தலுஞ், சிருட்டிக்கு முன்சிவ மானான் றிகழ் கச்சி யேகம்பனே.

கர்நாமிர்தம்.

பாவமு மறமு மொத்துப் பக்குவம் பருவ முற்றிங், காவியைம் புலனைப் பற்று தகமுக மாகி யென்று, மோவியம் போன்றிட் டங்க ணுணருணா ராமைபோக்கிற், சீவனுஞ் சிவனும் வேறே திருப்புலி வனத்து ளானே.

ஆகமா மல்ல விந்த வைம்பொறி நாமே யல்ல, வேதமே நாமென் றுன்னு மிருடிக ளிதயத் துள்ளாய்ப், பாகமா முமைம ணாள பசுபதி பிறவி வேண்டேன், சேகறு மநத்தோர் போற்றுந் திருப்புலி வநத்து ளானே.

அறிவினி லகமுண் டாகி யகத்தினின் மநமுண் டாகிப், பிறிவரு மநத்தின் மாயை மாயையிற் பிண்டாண் டங்கள், மறியுல கத்தி னுக்கை வந்தவிம் மாய மெல்லாஞ், செறிதரா தருளிச் செய்வாய் திருப்புலி வநத்து ளானே

சுருதி சார விளக்கம்.

செத்துச் செத்துப் பிறக்குஞ் செருக்கற, மெய்த்த ஞான விவேகங் கண் மேவிடச், சுத்த வாந்ம சொருபமே நீயெனுஞ், சத்தி வேற்கைச் சரவணற் போற்றுவாம்.

மூப்பாழும் பாழென்ற மூலனு ரடிபோற்றி, யப்பாலும் பாழென்ற சடகோப ரடிபோற்றி, யொப்பாரு மிலையென்ற சிவாக்க ருரைபோற்றி, பொய்ப்பாரை யறத்துறந்த வெண்காடர் புகழ்போற்றி.

கண்ணாலுங் கருத்தாலுங் கையாலு மெய்யாலு, நண்ணாத பராஞ்சுடரை நாதாந்த நாயகனை, யுண்ணாடு பவர்க்கெளிய வுத்தமனை யுபநிடதக், கண்ணாக் கண்டவரைக் கருத்தாரப் போற்றுவாம்.

பெற்றதபோ தனர்பாதப் பெய்தூளி புனைந்திடவுங், குற்றமு மெனதுள்ளங் குவிந்தறிவைக் குறுகிடவும், பற்றறத்தி ரதத்துயங்க சுகமுநி பங்கயத்தாளை, யற்றயறத் துறந்தவன்போ லறிவாகி வணங்குவாம்.

ஆக்கையல விந்தியநீ யல்லவகக் கரணமல, தேக்குபிரா ணனுமல்ல சீவனல சாக்கியல, போக்குவர வில்லாத பூரணநீ யென்றருளு, மாக்குரவன் றிருத்தாளை மறவாமல் வணங்குவாம்.

ஆலவிடஞ் சிவன்மிடற்றி லடங்கியத்தா லகிலமெலா, மாலவிட மென்றிகழா ரஞ்சலிசெய் வார்போல, மூலமகா வாக்கியமா மணிச்சீரை முடிந்திடுமிம், மூலமறிந் தோர்கழா ரதுவேயென் மொழியம்மா.

நாரதாதி யர்சுகர்க்கு நவின்றநால் வாக்கியமுந், தீராய் முத்திபெறச் சித்தமொருப் பட்டவர்க்குத், தாரமா யணித்தாய சுயம்பிரகா சப்பெயரோ, னாரியன்சே வடிபோற்றி யறைவனருந் தமிழாலே.

உலகமே பரப்பிரம முரைக்கு மந்நப் பிரமநா, மலகில்கலை யுணர்ந்தாலு மருத்தமிதே யறிகண்டாய்ப், பலமயலைத் துறந்தரிய பரமபதந் தனைத்தாவி, யுலவுசுக முநிவரனே யென்றுரைத்தா னுயர்முநிவன்.

ஆகிலிந்தப் பரப்பிரம மகிலமயமா யிற்றென்றாற், சோகமொடு பிறந்திறக்குந் தொழிலுளவோ வென்பாயே, லீகைபல பணியாயு மிறந்தனவோ வதுபோல, வேகபர மகிலமுமா யிருக்கும்வியா பகத்தாலே.

தந்தைவயி னுண்டாய சந்ததியு மவனென்றே, முந்துமறை யுரைதருமான் முழுவதுந்தா னன்றியொரு, சிந்தமிலை யெனவீசன் சேயிழைக்கோ தியபரிசாற், பந்தமறுஞ் சுகமுநிவ பார்பிரமஞ் சேகமென்றே.

எல்லாவண் டமுமியானே யாவருமென் சொருபமே, நல்லார்பொல் லார்நானே நன்மையொடு தீமையுநா, னல்லாச பரமுத்தி யொன்றொழிய விரண்டில்லை, கல்லார்க்கிப் பொருடெரியா கண்ணிலர்க்குக் கதிருண் டோ.

ஒலியாகிப் பரிசமா யுருவாகி யிரதமாய்ச், சலியாத கந்தமாய்த் தாரணி யாய்ப் புனலனலாய், மலிவாயு வானமாய் மதியிரவி யியமானா, யலியாகி யானாகிப் பெண்ணாகி யமர்கின்றேன்.

சாவதுவும் பிறப்பதுவுந் தனுவன்றோ வஃதறிதி, சாவதுவும் பிறப் பதுவுந் தாமென்றே யுரைதருவார், போவதுவும் வருவதுவும் புரியட்ட சரீரமே, போவதில்லை வருவதில்லை போதமயப் பொருனாமே.

தன்னை யறிந்தோர் தபோதனரே தன்னை யறியார் தபோதனரோ, முன்னை வினையின் முடிபறியார் முதன்மைப் பிரமந் தானென்றே, சொ ன்ன மறையின் பொருளறியார் துறந்துந் துறவார் சுபமுத்தி, பிந்நமென் றே பிதற்றுவா ரென்னே யுலகின் பேதமே.

வான்முத லுலகமெல்லா மனத்திடை யாக்க வல்ல, நான்முகப் பிர மன் றன்னை நவில்சுக முனிவ னோக்கி, மோகவத் துவிதச் சொற்கு மொழிபொரு விரண்டோ வொன்றோ, ஞானசற் குரவ சொல்வா யென் றுள நைந்து கேட்டான்.

ஏகமேவாத் துவிதம்பிர மோகமென் றிசைப்பத், தாகமொழிஞ் சுக முனிவன் சந்தேகத் தடைநீங்கி, யாகமெனுஞ் சிறையுலவா தானந்தச் சிறை யாகி, யேகமே யத்துவிதம் பிரமநா மெனத்தெளிந்தான்.

அத்துவிதந் துவிதமில்லா தெனவ்ரிய மறை யேக, மத்துவித மிதற் கைய மிலையென்றே யறைந்தாலும், பொய்த்துவித மயக்கொழியார் பூருவவா தனையாலே, யத்துவித மொழிபொருடா னந்நியமாய்த் தெளி வாரால்.

ஒன்றாகிப் பரவெளியா யுருவருவ மிலதாகிக், குன்றாத பரப்பிரமங் குகையிருந்து மதைவிளக்கி, னன்றாரு மிதயகுகை நாமதுவே யையமிலை, கன்றாத நின்மொழியான் மெய்ஞ்ஞானங் கடைப்பிடித்தேன்.

ஊனாடி யுயிர்நாடி யுண்ணாடிப் புறநாடி, வானாடி வளிநாடி மண்ணாடி நீர்நாடித், தீநாடி நாதவிந்து செங்கதிரோன் றனைநாடி,நானாடிப் பார்ப்பளவி னானேயப் பரப்பிரமம்.

பல்கலையா லாகமத்தாற் பகர்கீதை பதினெட்டா, னல்வினையாற் கருமத்தா னான்மறையான் ஞானத்தாற், சொல்லுகத் தான் மறையாத் துணிவாலிற் றுறந்தோரா, னல்லோரா னான்பார்க்கி னானேயப் பரப் பிரமம்.

ஒருகாலந் தோன்றினே னொருகாலம் வளர்கின்றே, னொருகாலஞ் சாம்பினே னென்றுரைக்கு முணர்விலிக,ளொருகாலம் பிறந்ததிலை யொரு காலம் வளர்ந்ததிலை, யொருகால மிறந்ததிலை நானேயவ் வுயர்பிரமம்.

நான்மனித னன்றுநா னவிலுறுதே வனுமன்று, நானிராக் கதனன்று
நலியசுர ருனன்று, நான்முனிவ னன்றுரக ருன்முகனு நானன்று, நான்
றிருமா லன்றானு மன்றரிய பிரமநான்.

முன்னவரு நானல்ல முடிமன்னர் நானல்ல, துன்னுவசி யருமல்ல
சூத்திரு நானல்ல, வன்னியரு நானல்ல வன்னியரு நானல்ல, பிறமொடு
பிறப்பிறப்பு மில்லாத பிரமநான்.

நான்பிரம மெனுஞான ஞானிகள்பா லுளவாகு, மூன்பிரமை யொழியா
தார்க் கொருக்காலுந் தோன்றுவா, மான்வயிற்றி னரிதார மருவுமன்றி
வாரகவயிற், றான்பிறக்கக் கண்டாரு முண்டோபொய்க் கலியுகத்தும்.

ஆதலா லகம்பிரம மெனுஞ்சுருதி யகந்தெளிந்து, போதினுன் முகப்
பிரமன் புண்டரிகத் தாள்வணங்கி, யோதொணு மகிழ்ச்சியொடு முலாவினு
னுலகமெலாஞ், சோதியிவன் றனென்னத் துறந்தசுக முகியம்மா.

பக்குவர்க்காய்க் கல்லாலின் பாங்கெழுந்த தெய்வமே, தக்கவிராட்
டிருவுருவாய்த் தமியேன்றன் விண்ணப்ப, முக்குறும்புங் கடந்தவிட முழுத்
துரிய நிலையென்று, லக்குறும்பைக் கடப்பவன்யா ரவனேயப் பரப்பிர
மம்.

காரணகா ரியங்கடந்த கரிப்பிரம நாமென்றே, யாரணநூற் புகன்ற
படி யநுபவிப்பா யருந்தவனே, காரியமேழ் காரணமேழ் கழறினுபா திக
வாகுக், காரியமுன் பாலுடைத்துக் காரணமக் கடவுடன்பால்.

தேகமொடு பொறிகரணஞ் செறியுயிரோ டேழென்பா, ராகிலுயி
ருபாதியிதா லகிலேச னுபாதிசொலிற், சோகமிலாச் சருவசிட்டி முதற்சரு
வாந் திரியாமி, பாகமுறுஞ் சுகமுனிவ கடையேழும் பரிந்தறியே.

இன்னணமா யுயிரானைக் கடந்தேறி யிறையானைப், பன்னுமறை
யின்படியே கடந்திடிற்பைங் கிளிப்பெயரோய், சொன்னபரப் பிரமமய நீ
யாயே தோன்றுமா, லந்நியமா யொருபொருளுந் தோன்றுவே யநுப
வத்தே.

தேகமலேன் பொறியல்லேன் செறிகரண நானல்லேன், மூகபிரா
ணனுமல்லேன் முழுப்பிரம நானென்னச்,சோகமெனப்பாவிக்கிற் சுகமுனிவ
வுயிர்த்தடைபோம், மாகமுறு மதிபோல விளங்குமுன் றன் மதிதானே.

பாவனையெ லாமிறந்தாற் பாழன்றே பரமேட்டி, பாவனையெ லாமிரு
ந்தாற் படுசகமன் றேவிரண்டு, மோவியதே நின்னிலைய முபாதியறு சூனி
யமா, யோவியம்போ னிருவிகற்ப வுணர்வாய்நில் சுகமுனிவ.

அறிகின்றே னறிவில்லே னெனுநிலையங் கடந்தநிலம், பிறிவரிய
சுவாநுபவா தீதம்பா மோகமென, மறுவின்மறை கூறுமா வாக்கியத்தைக்
கடைப்பிடிக்கி, னறிகின்ற வநுபவமு மநுபவமன் றுமன்றே.

உன்றந்தை யுரைத்ததுவு முயர்முனிவ னுரைத்ததுவு, மன்றல்கமழ்
கமலனுரை வாக்கியமு மகதேவ, ரன்றுரைத்த வாக்கியமும் யானுரைத்த
வரும்பொருளு, மொன்றேயா மையமிலை யுனையன்றி வேறில்லை.

பெறுபவன்யார் பேறியாது பேசென்றான் சுகமுனிவ, னறிபவன்போ யாநந்தத் தநுகூல மானபினர்ச், செறிபிரம மோன்றேழிய விரண்டில் லாத் திறத்ததேல், பெறுபவன்யார் பேறியாது பேசென்றான் பெருஞ்ஜந கன்.

காண்பவன்யார் காண்பனயார் கழறென்றான் சுகமுநிவன்,சேண்பயிலு மொளிக்கொளியாய்ச் சித்தாகிப் பரவான்மா, தான்பிரகா சித்தபினர்த் தானேதா னைமையாற், காண்பவ்னயார் கான்பனயார் கழறென்றான் கன ஜநகன்.

பூசனையார் பூசகன்யார் புகலென்றான் சுகமுநிவ, னுசையெலா நிரா சையா யாநந்த முங்கடந்த, வீசனு னீச னிரண்டற்ற வெல்லையிலே, பூசனையார் பூசகன்யார் புகலென்றான் புகழ்ச்சநகன்.

தோத்திரியார் தோத்திரம்யார் சொல்லென்றான் சுகமுநிவ, னார்த்த மொடு மநவாக்குக் கதீதத்தே யளவிறந்த, சேத்திரத்திற் சிவமாகித் திறம் பாத நிலையத்திற், றோத்திரியார் தோத்திரம்யார் சொல்லென்றான் றுரைச் சநகன்.

முத்தியுண்டோ பெத்தமுண்டோ மொழியென்றான் சுகமுநிவன், சித்தமல மிறந்தரிய சிற்பரையைக் கடந்துபோ, யெத்திசையு மெப்பொரு ளும் யாமாகி நின்றிடத்தின், முத்தியுண்டோ பெத்தமுண்டோ மொழி யென்றான் முதிர்ச்சநகன்.

முன்பண்ணிய விருவாதனை முதிர்தேசிகன் விழியாலுகும், பின்பண் ணிய விருவாதனைப் பிரமாற்பணத் தாலேகெடு, மன்பொன்றிய நாமச் சுத னென்கின்றபே ராநந்தமேற், றன்பங்களா ரின்பங்களார் சுகயோ கியே சுகயோகியே.

ஐயமெனும் புறங்காட்டை யட்டேனின் னருண்மொழியால், வைய கத்தி னின்போன்ற மாதவரா ரெனவாழ்த்த, வுய்யுநெறி யுணர்ந்தேனே யுன்வாவெற் கிடைக்குமோ, செய்தவத்தா லுன்பாதத் தெரிசனையான் பெற்றேனே.

வாழ்த்திடவும் வாயில்லை வணங்கிடவுஞ் சிரமில்லை, சூழ்த்திடவு மல ரில்லை தொழுதிடவுங் கையில்லை,யேத்திடவும் பாவில்லை யெதிர்ந்திடவோ ரிறையில்லைப், பார்த்தவிடந் தொறுமியானே யெனையானே பணிகின் றேன்.

பண்டைமறை மொழிப்படியே பரமபத மினிதுணர்ந்து, தண்டுதவில் வியாதமுனி மகங்குவியத் தானினைப்பக், கண்டையொத்த மநங்குவித்துக் கனகவரை மீதடைந்தங், கண்டரொலா மறியாத மத்துவித வீடுற்றான்.

மாறாத வாசையெலா மரமாரத் துறந்துபோ, யேறாத முத்திமலை யினிதேறி யிச்சகத்தை, நீறாக்கி நினையாம னித்தியா நந்தமுற்றான்,றேறா வென் போலியெலாந் திருமலையுந் தெரிஷவயர்க்கே.

காற்றிலா விளக்கொளியோ கண்ணாடி மண்டிலமோ, நீற்றொளியோ சார்க்கால நிறைமதியோ நிறைவானோ, தேற்றுறுபூங் கங்கையோ திரை யற்ற பாற்கடலோ, வாற்றரிய தவனேற்ற சுகமுநிவ னகமம்மா.

ஆங்கவனை நினைதொறுமென் னகங்கார மடக்கழியும், பூங்கமலத் திரு த்தாளை யுள்குதொறும் புகலுளவாந், தீங்கறுமன் னவன்காதை செவிபுக வென் றீமையுகும், பாங்குடையோன் றறவெணக்கும் பதியுமோ பாரிடத் தே.

சிந்தனை வெண்பா.

தேறினர் சித்தத் திருந்தார் சிவனென்றால், வேறு படுத்துவதேன் வீணர் - மாறுபட்டுப், பேசாதே யெல்லாம் பிரமமென்னும் வேதாந்த, மாசையற்ற வீயே யது.

சிவன் வேறு சீவன்வே றென்றிரண்டாய்ச் செப்பு, மவன்சிவனை யேன்றுமறி யாதான் - றவமில்லா, வுள்ளத்தார்க் கெய்துமோ வூர்க்குருவி யாகாச, மெள்ளப் பறந்தறியு மே.

அதுவேநீ யாமென் றருமறைகள் சொல்லும், எதிர்சிவனே நீயானு யென்னு - முதிர்சைவம், வேறோவே றன்றோசொல் வேதியனே விண் விசும்பும், வேறோவே றன்றோ விளம்பு.

தானே பரமானற் றத்துவசா ஸ்த்திலே, யேனோ பிறந்திறந்தே னித் தனைநாள் - மாணுகேள், நீபிறந்த தில்லையுண்மை நெஞ்சுபுல னும்பொறியு, நீபிறந்தாற் போனிச்ச யம்.

தானே சிவமல்லாற் றனிச்சிவம்வே றில்லையென்ற, மோன மொழி யொன்றின் முடிபறியா - யோகிதொறுஞ், சென்றுபிறந் தெய்த்தேன் சிவாயசிவ வென்செய்கே, னென்றுகடைத் தேறுவே னியான்.

நிராமய வந்தாதி.

மெய்யைப் பொய்யென்றான் வெளியைநல்ல வீடென்றான், சைவத் துரைகாழிச் சம்பந்தன் - ஐயமற, நின்போதம் போமிடத்தே நீயே சிவ மென்றா, னென்போதத் துள்ளே யிருந்து.

இருந்த படியிருந்தா லிறையுருவந் தோன்றும், பொருந்துமல மிம் மையிலே போன்று - மிருந்தபடி, யேதென்றங் குன்னி யிரண்டாட்டு வார்க்குண்டோ, போதமுண்ட பிள்ளை புகல்.

உற்றுணரி லீயே யுயர்பிரம மென்பதுவு, மற்ற சிவன் றனுயி வகுப் பதுவு - முற்று, மிறந்தவிடத் திரண்டு மேகமே யென்றான், சிறந்த சீ காழிவரு தே.

அறு பத்து நாலு சங்கை சமாதானங்கள்.

'பாச பத்ததே ஜீவ:, பாசமுத்ததே சதாசிவ:' 'ஆத்மாவுக்குள்ளே சிவ முஞ், சிவத்திற்குள்ளே ஆத்மாவுஞ், சமவாய சம்பந்தமாயிருக்கு மென்று ஆகமங்கள் சொல்ல' 'அறிவுஞ் சிவமு மொன்று, அல்ல வென்கின்றவன்

வாயில் மண்ணு' என்கின்ற உலக வசனமே சாக்ஷி. 'அறிவென் றறியாத வாணவமே ஞானச், செறிவாய வென்னைநீ தீண்டற்க—வறிவாய, வென் னைச் சிவமாக்கி." 'ஒளியை யிருள் மறைக்குமோ' 'சந்திராதித்தர்களை, இராகு கேது மறைக்கிறது போலும், நெருப்பை ஈரம் மறைக்கிறது போலும், ஆகாசத்தை மலை மறைக்கிறது போலும்' ஆனல், இந்த மறைப் புத் தான் வருவானேன், நீ பண்ணின கன்மத்தால். நான் அவயவம் இன்றி நிரவயவமா யிருக்கக் கன்மத்தை எப்படிச் செய்தேன்? நிரவயவன் னா னென்பதை மறந்து, அவயவம் நா னென்னுங் கருத்தாற் கன்மம் வந் தது. அந்தக் கன்மத்தால் மாயை யுண்டாயிற்று. இந்த மாயையால் சர்வ பதார்த்தமும் உண்டாயின. இது போமாறு, சிற் றறிவாகிய நீ, பேரறிவாய் நின்றாற் பசு பாசம் இல்லை.

அறிவுரு வாய வென்னை யாணவ மனாதி கூடிப், பிறிவறி யாதநின் னைப் பிறித்துத்தான் முழுது மாகி, நெறியினை மறைத்துப் பொல்லா நீச ருக் கடிமை யாக்கிச், செறியிரு ணின்ற தென்னே திருப்புலி வ ன த் து ளானே.

ஆத்மாவொன் றென்று வேதாந்தஞ் சொல்ல-விஞ்ஞானகலர்,பிரளயாகலர் சகல ரென்று அநேகமாக ஆகமஞ் சொல்வானேன்? வேத வழி சென்ற வன் ஆகம வழியிற் செல்லான், வடக்கே போகின்றவனுக்குக் காவேரி தெரியுமோ? அ ப் ப டி ப் போல், 'முத்தி பலவும் பகர்ந்தோம் பக்கு வத்துக் கீடாய்.' 'வேதம் வேதாந்தம் வேத்தியம் வேத மகாவாக்கியம் வேதாந்த மகாவாக்கிய விசாரம், வேத்தியப் பிரஹ்மம். இப்படி வேத பண்டி தர்கள் வெகுமுகமாகச் சொல்ல, ஆகம வாக்கியமே பிரதான ம ெ ன் று முற்சொல்லிய வேதத்தை சிந்திப்பானேன்? தத்துவமசி, சிவத்துவமசிக்கும் அது நீயானய்-சிவம் நீயானய்-என்று அர்த்தம், ஏகமே, ஆத்துமாவே சிவ மென்பது சித்தாந்த மானல் சிவ மென்றும், பிரஹ்ம மென்றும், அரிகாப் பிரமாதி யென்றும் பலவாய் வருவானேன்? உபாசியர்கள் உபாசனையால் வேறு வேறாயின.'

'காவேரி யொன்று கால்வாய் நூற்றெட்டு, மண்ணொன்று பா ண் டம் வரும்பல வாகி, விண்ணொன்று ஆகாயம் வேறு வேறாகு, மாவியு மிவ் வண மாய்ந்துகொள் வீரே' என்று வசன மிருக்கிற படியினலே சங்கை யில்லை, இந்த ஆத்மாமை விடச் சிவ மில்லையோ? விலாங்கு சம்பந்தம் போல உண்டு. அஃதெப்படி (ஆமடி கெட்டேனே-பாம்படி-யல்லடி கெட்டே னே) என்பது போல, வெகு முகத்திற் சீவனும், அகமுகத்திற் சிவனு யுந் தோற்றும். இந்த வித்தை நா னெங்குங் கண்டதில்லை யென்னில்,வேத வீதியிலே போனற் காணலாம்.ஆத்மா சுதந்தர போதனு அசுதந்தர போதனு வென்னில், ஆகமம் முத்தியில் சுதந்தா போத னென்று சொல்லும்; வேதம் பெத்தம் முத்தி யிரண்டிலுஞ் சுதந்தா போத னென்று சொல்லும். ஆனல் சுபாவ சித்தாந்தமே தென்னில், அநுபவத்திற் காண்க. ஆணவ மலத்துக்கு அநேக சத்தியும் சிவனுக்கு இரண்டு சத்தியுமாயின் ஆணவ முயர்ந்து சிவந்

தாழுமே யென்னில் சிவன் தானா யறிகின்ற சத்தி யொன்று, சருவாத்மாக்க ளுக்கும் அறிவிக்கின்ற குண சத்தி யொன்று. இந்த ஆணவமாதிய பஞ்ச பாசங்களும், நித்திய மென்று சிவாகமஞ் சொல்லு மெனில் கூடாது. எப்படி? ஒரு வேதம் பஞ்ச பாசங்களும் அநித்திய மென்று சொல்லிற்று. பின்னொரு வேதம் கானற் சலம் போலத் தோற்றாவு மாத்திரமே யென்று சொல்லிற்று. பின்னொரு வேதம், ககனாரவிந்தம் - வந்தியா புத்ரன் சச விஷாணம் போல அநுபவத்தில் பஞ்ச பாசம் இல்லை யென்று சொல்லிற்று. நாலாம் வேதம் மாயையே யில்லை; இருக்கின்ற தெல்லாம் பிரஹ்மமே யென்று சொல்லிற்று. அட்டாவக்கிரர் தன்றாய்வயிற்றிலிருந்து கொண்டு தகப்பனை நோக்கி எல்லாம் மாயை யென்கின்றவாய், எல்லாம் பிரஹ்ம மென்று சொல்லாதோ வென்று திருவுளம் பற்றினபடியாலும், பஞ்ச பாசங்களு மில்லை யென்பதே சித்தாந்தம். மலம் அறிவை மறைக்குமோ? மனத்தை மறைக்குமோ? மனதைத்தான் மறைக்கும் அறிவை மறைக்கு மென்று வசன மிருப்பானேன். மனமும் அறிவின் சம்பந்தமானபடியினால் அங்ஙனஞ் சொல்வாரு முளர். கண் ஜடம், நான் சித்து, கண்ணைக் கொண் டறிகிறது மனம். மனதிற்குச் சாக்ஷி நான். கண்ணும், விடயமும், மனமும், மாயை; நான் அறிவு; என் பெயர் ஆத்மா. செவி ஜடம், நான் சித்து; செவியைக் கொண்டறிகின்றது மனம்; மனதுக்குச் சாக்ஷி நான்; செவியும் விடயமும் மனமும் தூலம்; நான் சூக்குமம்; என் பெயர் ஆத்மா. தொக்கு நா னல்ல-ஜடம்; நான் சித்து; தொக்கால் பரிசத்தைத் யறிகின்றது மனம்; மனதுக்குச்சாக்ஷிநான்; இவை யெல்லா மிறந்தாலும் நா னிறவாதபடியினாலே நான் சின்மாத்திரன். கிராணம் நா னல்ல, ஜடம்; நான் சித்து; கிராணத்தைக் கொண்டு கந்தத்தை யறிகின்றது மனது, மனதுக்குச் சாக்ஷி நான், சிவம் வேறு நான் வே றல்ல. கிராணமும் கந்தமும் மனதும் அழிய நா னழியாமல் பாசத்தைப் பின்னிட்ட படியால் நான் சிதாநந்த ரூபன். நாக்கு நானல்ல; நான் சித்து; நாக்கு ஜடம், நாக்கைக் கொண்டு ருசியை யறிகின்றது மனம்; மனதுக்குச் சாக்ஷி நான். சிங்குவையும் ருசியும், மனமும் அழிய நான் அழியாதபடியால் நான் நித்தியாநந்தன். பிராணவாயுவும் நானல்ல; பிராணன் ஜடம்; நான் சித்து; பிராணனைக்கொண் டறிகின்றது ஆத்மா; அந்த ஆத்மாவே நான். ஆணவம் இருள், மாயை விளக்கு, கன்மம் கருக்கனோ வெள்ளியோ வென்னு மயக்க அறிவு, கண்-ஆத்மா, சூரியன்சிவம், பகல் சகலம், இரா கேவலம்; இப்படி அநாதி தொட்டு இன்றளவும் வரும். சற்குரு ஞானத் தீக்கையால் சகல கேவலம் அறும்; அறவே ஞான சூரியன் உதயமாம். ஆகவே ஆணவ விருள் - நாசத்தை யடையும் அடையவே, மாயை விளக் கவியும்; அவியவே - ஐயந் திரிபு அறும்; அதனால் ஆத்மா சுவாநுபவத்தைப் பெறும். சிவத்தைவிட ஆத்மா வென்று நாமம் வருவானேன், சிருட்டியால். ஆனால் சிருட்டிக்கு முன் சீவ ராசி யில்லையோ? இல்லை யென்றே வேதஞ் சொல்லும். ஆகமம் உண் டென்று சொல்லுகின்றதே, அது பூருவ காண்டத்திற் சொல்லும்; உத்தர காண்டத்தில் வேதஞ் சொன்னபடியே சொல்லும். சீவ பேத மெல்லாஞ் சிவ மென்று திவ்வியாகமஞ் சொல்லும். அதற்கு முன்னே

வேதஞ் சொல்லும்;சந்திரனிடத்திலே யிருக்கின்ற களங்க[illegible]றும் மா னென்றும் ஆல விருக்ஷ மென்றும் பூமிச் சாயை யென்[illegible] வாய்ச் சொல்லுவ தன்றிப் பிரத்தியக்ஷமே பிடிபடாமல் மயங்கு மென்னில் அஞாநியிலே விளைந்த விருத்தாந்தம், நீ சிவமாய் நின்றாற் றெரியு மன்றிச் சீவனாய் நின்று பார்க்கு மளவுந் தோன்றா தென்பதே சித்தாந்தம். ஒரு குளவியாற் கீடத்துக்குக் கீடத்துவம் போய்க் குளவி சிந்தனை முற்ற முற்றக் குளவியான தன்மையும், ஒரு பாடாணஞ் சிற்பனால் வேதாங்கப்படி செய்யத் தெய்வமான தன்மையும், ஒரு விழல் ஆறு அமாவாசி பறித்துப் பறித்து நட விலாமிச்சியான தன்மையும் போல சீவன் தீக்கையாலுஞ், சிவ ஞானத்தாலும் சிவ மாவன். சீவன் முத்தர்கள் உலகத்தோடு கூடியுங் கூடாமல் எப்படி யிருப்பார்? தாமரை யிலையுந் தண்ணீருஞ், சேறும் பிள்ளைப் பூச்சியும், புளியம் பழம் ஓடும் போலும் நிற்பர். சிவ ஞானியைப் பிராரத்தம் வாதிக்குமோ வாதி யாதோ? வெகு முகத்தில் வாதிக்கும்; அக முகத்தில் வாதியாது. அக முகமானால் வெகு முகம் வருமோ? அது தான் பிராரத்த வாசனை. இந்த வாசனை கிருஷ்ணர், சீராமர், சுகர், வாமதேவர், நந்தி, பிருங்கி, வதிட்டர், வாங்மீகி, இவர்க ளிடத்திலுங் காண்க

சிவ யோகிகள் சிவாலய தரிசனங், குரு தரிசனஞ்,சங்கம தரிசனஞ் செய்வாரோ? ஜீவனே ஆலயமாகவும், சிவமே குருவாகவும், அறிவே சிஷ்யனாகவும் தரிசிப்பர். தான் சிவாகாரமாவதே சங்கமமாகவுந் தரிசிப்பர் ; சிவாலயமாகவுந் தரிசிப்பர். கடைசாரஞ் சீவாத்மாவே பரமாத்மா, பரமாத்மாவே சிவமானாற் சைவ சித்தாந்தம் ஒப்புக் கொள்ளுமோ? பூருவ காண்டத்திற்குத் தள்ளுபடி, உத்தர கண்டத்திற்குச் சம்மதம்.

தச வழக்குச் சிந்தனை.

ஆனால் மித்தை யென்றால் ஆகம சித்தாந்தம் என்னமாய் முடியும்? மல சத்தி யிறந்தும், மலம் அப்பிரகாசமா யிருக்கு மென்றதுஞ் சரியோ? என் தகப்பன் செத்துத்தெய்வமா யிருக்கின்றானென்றும், வீம னெறிந்த யானை ஆகாயத்திலே தோற்றி ஒன்றொன்றாய் விழு மின்றைக்கு மென்றும், இந்த மரத்திலே பே யிருந்தது, இப்போது சிறிது காலமா யிறந்திருக்கின்றதென்றும், கலியுக அந்தத்திலே கற்கோழி கூவு மென்றும், பொய் வழக்குப் பல விதம்; இது போலாமென் றறிவாய். இருள் போன பிறகு இருட் டுண்டென்னில் சொல்லள வன்றிப் பொரு ளில்லை. உண்டோ வென்னில் உனக்குண் டெனக் கில்லை என்பதே சித்தாந்தம். 'அறிந்த விடத்தில்லை யறியாமை தன்னைப், பிறிந்தபினும் பேசல் பிழை யன்றோ.' நா மார் என்னும் ஞானமே சமயாதீத ஞானம். இந்த ஞானத்தால் சுகர் வாமதேவர் வதிட்டாதி கபில ரீறாய விருடிகளும், சம்பந்தர் முதல் மாணிக்க வாசக ரீறாய மகத்துக்க[illegible]கள். தெய்வ மென்பது பொது. தெய்வத்[illegible] யா[illegible] கைலாயம்[illegible]னையில் வட்டஞ் ஸ்ரீரங்கந் திரு[illegible]ற் கடல் செகந்நாதம் இவை ஒரு

காலந் தோன்று மொரு கால மழியும்; ஒரு தெய்வம் ஒரு தெய்வமாகியும் போயும் வரும். ஆனாற் றெய்வ நிச்சய மில்லையோ வென்னில், தெய்வ நிச்சயம் தெய்வம் அறியாதவனுக்கு. நாமே சித்து, சிதாநந்தன், திவ்விய சொரூப னென்று கண்டவன் எந்தத் தெய்வத்தை வணங்குவான்? எந்தத் தெய்வத்தையும் வணங்கான்? ஆகையாற் சிறு பிள்ளைகள் தெய்வங்களைக் கொண்டாடுதல் போல, அறி வில்லாப் பெரிய பிள்ளைகளுந் தெய்வத்தை யாராதனை பண்ணுவார்க ளென்ற றறி 'தானே சிவ மல்லாற் றனிச்சிவம் வேறில்லை' யென்னுந் திரு வாக்கே எறு கடைசி ஆகம சித்தாந்தம்.

குரு மரபு சிந்தனை.

அநாதியே ஆணவ சம்பந்தம், இயற்கைச் சம்பந்தம் அன்று; செயற்கைச் சம்பந்தமே.சிவ னுண்டான போதே சீவத்வ முண்டாயிற்று. ஊருண்டான போதே புலைச் சேரி யுண்டானாற் போலும். சமுத்திர முண்டான போதே நீ ருண்டானாற் போலும். செம் புண்டான போதே களிம் புண்டானாற் போலும். மேக முண்டான போதே மழை யுண்டானாற் போலும். இப்படி ஆயிர முவமை யுண்டு. சீவனுஞ் சிவனுமவன் சாக்ஷி. 'குளிகையாருஞ் செம்பிரதக் குளிகையிற்பொன் னதுபோற் சீவனுமெய்ஞ் ஞானத்தாற் சிவத்துவத்தைப் பெறுமே'. சீவனுக்கு மல மாயை கன்ம மூன்றும் அநாதி யியற்கை யன்று, அநாதி செயற்கை யென்றே சித்தாந்தம். செம்புக்குக் காளிதமும். நெல்லுக் குமியும் அநாதி செயற்கை யெனக் கொள்க. "திஷ்டே பூர்வ மாத்மா யேகமேவ" ஜீவன் முத்தன் புசித்ததெல்லாஞ் சிவன் புசித்த தென்று வேதாகமங்கள் பிரத்தியக்ஷமாய்ச் சொல்லுகின்றதே யென்னிற், பத்தி காண்டத்திற் சொல்லும்.

அநுபவ சந்திரிகை.

𑌸𑌤𑍍𑌸𑌂𑌗𑌤𑍍𑌵𑍇 𑌨𑌿𑌸𑍍𑌸𑌂𑌗𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌸𑍍𑌸𑌂𑌗𑌤𑍍𑌵𑍇 𑌨𑌿𑌰𑍍𑌮𑍋𑌹𑌤𑍍𑌵𑌂 ।
𑌨𑌿𑌰𑍍𑌮𑍋𑌹𑌤𑍍𑌵𑍇 𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌤𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌤𑌤𑍍𑌵𑍇 𑌜𑍀𑌵𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌃 ॥

என்னு மொழுங்கு வந்த காலத்தில் கன்ம மொழியும். ஒழியவே, மகா வாக்கியத்தில் விசுவாசம் வரும். சந்தானத்திலே விருப்ப மில்லாதவனுக்குத் தாரத்தின் மேலே விருப்ப மில்லாதது போலும்,வேத விருப்பற்றவனுக்கு வேத வாக்கிய விருப் பெங்ஙனம் வரும்?

𑌗𑍁𑌰𑍁𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌗𑍁𑌰𑍁𑌰𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌗𑍁𑌰𑍁𑌰𑍍𑌦𑍇𑌵𑍋 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵
𑌰𑌃। 𑌗𑍁𑌰𑍁𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌶𑍍𑌰𑍀 𑌗𑍁𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃 ॥

மகா வாக்கிய மறிந்தவனே ஞானி, மற்றைய மந்திரங்க ளறிந்தவன் ஞானி யன்றோ வென்னில், "சத்த கோடி மகா மந்திரஞ் சித்த விப்பிரம காரணம்" என்றமையால், அவனுந் ஞானி யன் றென்பதே சித்தாந்தம். இஃதன்றி, பஞ்சாக்ஷரம், பிரணவம், அவை முத்தி நெறி யல்லவோ வென்னில், முத்தி பலவும் பகர்ந்தோம் பக்குவத்துக் கிடாய். "ஒருவசா மாகவே

முடிந்தபொரு ளுரைத்தோ மொன்ருகக் காண்பதுவே காக்ஷி யின்னும் பலவாய்ப், பெருவசந மாகநீ பலபடக்கேட் டாலும் பின்னுநாம் நிகழ்த்துவது மிந்தவுப தேசந், தருவசநஞ் சமுதாயம் பலபொருளும் விளக்குந் தடுமாறு தேகமாய்த் தானேதா னாகி, நிருவசந மாய்ஞாந மோகமொன்றுமின்றி நில்லாத நிலையன்றி நின்றநிலை நிலையே" மகா வாக்கியத்தில் அசிபதத்துக்காக வந்தது அத்வைதம். அத்வைதம் துவிதக் கலப் பென்பாருமுளர்.

திரு முகப் பாசுரம்.

ஒன்றே பரமதுநீ யுற்றுணரி லென்று, நானேநீ நீநானே யென்றுனக்கு நாந வின்றேரும், மறைப் பெல்லா நீங்கினவிடமும் மறைப்பு நீங்கவே யீசுரன் வேறல்ல நாமே யீசுர னென்னும் பேரானந்தம் அபரிமிதமாய்ப் பெருகும் நிர்ச்சஞ்சலமான வாத்மாவே சர்வ வுபாதி சூநியரான பராபரவத்து. 'நாற்றமிகும் பூமாலை நற்குரங்கின் கைகொடுத்தாற், போற்றி மணங் கொள்ளாவாம் புத்திதனக் கில்லாமை, வேற்றொருவர் காணாத வேதாந்தத் துட்பொருளைத், தேற்றமிலி கைக்கொடுத்தேன் றேறுவனே தேருனே".

மர பட்டவணை.

'அஞ்ஞாநத்துக்குச் சாக்ஷி பூதம் நாமென் றறியின் அஞ்ஞாநமு மில்லை, நல்வினை தீவினையாகிய விலங்கு மில்லை, அதற்கு முன்னே நரக சொர்க்கமு மில்லை'.

என்பன வாதிச் செய்யுட்களில் வேதத்தையும், வேதாந்தத்தினையும், வேதாந்தப் பெரியார்களையும், புகழ்ந்து கொண்டாடியும், வேதாந்த சாஸ்திர சித்தாந்தம் முத்தியில் ஒரு பொருளே யுண் டென்பதென்றும், அஃதே தமக்கு உடன்பா டென்றும், பாசம், மலம், ஆணவம், அஞ்ஞாநம், பிரபஞ்சம் என்பன முத்தியில் அத்தியந்தாபாவ மடைகின்றன வென்றும், ஆகம சித்தாந்தமும் முத்தியில் ஒரு பொருளே யுள்ளது என்று கூறுகின்றதென்றும், அதற்கு முரண் கூறுவோரைப் பழித்தும், மும்மூர்த்திகளைச் சமப்படுத்தியும், ஜநக ராஜாவைப் பிரஹ்ம ஞாநி யென்றும், தென்மொழிச் சிவஞாநபோதத்திற்கு விரோதமாய் ஆத்மாவே சிவம் என்றும் முத்தியிற் கலத்தல் கூடா தென்றும், பாச மிருக்கின்றதென்பது முயற் கோடு போலச் சொல் லளவே யென்றும், அதிகாரி பேதத்தாற் பத்தி செய்யும் மந்தர்கட்குப் பாச முண் டென்று பத்திகாண்டம் சொல்லிற் றென்றும், சைவர்கள் நிந்திக்கும் விஷ்ணுவையும், விஷ்ணு பக்தர்களையும் புகழ்ந்தும், இன்னும் பலவாறு பற்பல விஷயங்களைக் கூறியிருப்பவும் அதனை யுணராது, 'சைவ சித்தாந்தமே யவர் கொள்கை' யெனத் தேற் றேகாரங் கொடுத்துக் கூறினர். இதுகாறும் யாங் காட்டிய அவரது செய்யுட்களால், அவர் சாத்தியமாய அத்வைதக் கொள்கை யென்னும் வேதாந்தக் கொள்கையை யுடையோ ரென்று நிலை நாட்டப்பட்டமையின், கேவல சைவ சித்தாந்தி யென்

று சிவ ஞாந வள்ளலாரைக் கொள்ளா தொழிவாராக. சிவ ஞாந போத பாஷ்யத்தில் முத்தித் தசையிலும், பெத்த தசையிலும் மூப் பொருள் நித்திய மென்று, யாங் காட்டிய வாக்கியங்கள் அறிவிக்கின்றமையின், "இவ்வாறே சிவ ஞாந போத முதலிய சித்தாந்த சாஸ்திரங்கள் போதிக்கின்றன" வென்று, முத்தி தசையில் இரு பொருள் நித்தியங் கூறினமையின், 'அவசிந்நாந்தம்' என்னுந் தோல்வித் தாநத்தை யடைந்தனர். முன்னர் 3-வது பக்கத்தில் 'மல சத்திக்குக் கே டுண்டு, மல சத்தியின் கேட்டினால் மலத்தினின்றும்' என் றுள்ள வாக்கியங்களால், சத்திக்குக் கேடே யன்றி மலத்திற்குக் கே டின் றென்றும், ஈண்டு 'முத்தியி லுயி ருண்டு மல மில்லை' யென்ற வாக்கியத்தால், மலத்திற்கு நாச முண் டென்றும் கூறுகின்றமையின், 'மாறு கோளக் கூறல்' என்னுங் குற்ற முடையவ ராயினர்.

10. 'இறப் பிலா இந்த மோகம், என்ற ஞாந வாசிட்டச் செய்யுளுக்கு இவரும் இவர் சார்பினரும் என்ன பொருள் கொள்கின்றனர்" என்கின்றார்.

"நல்லது சிறுவநீ யுரிமை நானது, சொல்லுவன் கேட்குதி துயர்செய் மோகநீ, வெல்லலா மோகந்தான் சகத்தின் வேறன்றி, மல்லல்வா னிறம் படைத் தென்ன வந்துறும்"

ஸாயா வத்ஸ ஸாஅஜ பொமெஹ்யாவஸி ஶுமபாத்தி தெ।
ஶ்ரூணு மெ தந பெ ந ஸம்மோஹஸ்ரேஷம் உ-ஷுமெ ஶரிஷ்யஸி॥ 5

ஸூ ஜேஸ்ய ஜாமத்வஸ்யாஸ்ய ஜாதஸ்யாகாஶ வணஷ்வஸ।

"இறப்பிலா விந்த மோக மிறையுமீட் டெண்ண மின்றி, மறப்பதே நல்ல தென்று மதித்துயர் மாத்தி னுக்குத், திறப்படக் காணப் பட்ட தில் லெனச் சித்தி னாலே, யுறப்பெறு மெய்போ தப்போ துயர்பா சுகம தாமே".

அவாநஃ ஸ்மரணம் ஸாயோ ஜநெந்ய விஸ்மரணம் வரம்॥ 6

தூஶ்யம் நாஸ்தீதி யொயெந தேநவிஸா தூஶ்யஜாஜந்டு।
ஸம்வணம் வெதநாதலெஷா வாராநிவட்டணநிவ்ருத்திஃ॥ 7

என்னும் செய்யுளி லுள்ள, 'இறப்பிலா மோகம்' என்றதற்கு நித்திய மென்று பொருள் கொண்டு, வேதாந்திகள் 'மோகத்தை நித்திய மென்று கொள்ளுகின்றார்களா? இன்றா? என்று வினவு கின்றார். மாயை அஞ்ஞாநம் என்னுங் காரணங்களையே நித்திய மென்று கொள்ளாத வேதாந்திகள், அந்தக்காணத்தின் காரியமான மோகத்தினை நித்திய மென்று கொள்வர்களா? "நல்லது" என்னுஞ் செய்யுளுக் குள்ள சுலோகத்தின் கண் 'சம்மோகம்' என்னும் பதத்தை, மொழி பெயர்ப் பாசிரியர் எதுகைத் தொடை நோக்கி யநுவதித்தனர். அல்லது, 'அபுநஸ் மரணம்' என்னும் சொல்லுக்கு விசேடமாக 'இறப் பிலா மோகம்' என மொழி பெயர்த்

தனவொன் றுணர்க. ‘நித்தியம் போலுங் காணப்படும் இந்தச் சகத்தை’ என்பது அதன் பொருளாம். வடநூல் வியாக்கியானத்தின் பொருள் ‘திருசிய விஸ்மரணத்தை’ யென்பதாம். இது போன்றே, படலக்காரரும் இந்நூலில் ‘ஈனமில்லை வாகமர்க்கு’ என்னுஞ் சொல்லை யெடுத்துக் கூறித், தமக்கு அநுகூலம் வேதாந்தத்தி லிருப்பதாகச் சாதிக்க நினைத்துப் பன் முறை யெழுதி, மூலத் தின்றென்று கண்டன மிறுக்கப் பெற்ற பின் பேசாது மௌன முற்றனர். இவரும் அவர் போன்றே தென்மொழி மாத்திரம் ஒரு சிறிது கற்றவ ராகலின், மொழி பெயர்ப் பாசிரியர் எதுகைத் தொடை மோனைத் தொடை நோக்கிக் கொடுத்த அடைப்பதங்க ளெல்லாவற்றையும், தமக்கு ஒப்புயர் வற்ற பெரியதோ ராதார மெனக் கருதி வரைகின்றனர். யாம் காட்டிய சுலோகங்களால் அது நிராதார மானமை காண்க. முத்தியில் முத்தாத்மாக்கட்குப் பாச மில்லை யென்று கூறுமிவர், வேதாந்திகள் மோகமாய சகத்தை நித்திய மென்று, கூறுகின்றார்க ளென்று கூறுதற்கு, “இறப்பிலா இந்த மோகம்” என்னுஞ் செய்யுளை வரைந்தனரோ? வேதாந்திக ளிவரினுங் கூரிய புத்தி யுடையவர்களாகலின், இறப்பிலா மோகமாய சகத்தையும், பதித்தன்மை பசுத்தன்மைகளையும் நித்திய மென்று கொள்ளாது, சேதநப் பொரு ளொன்றே நித்திய மெனக் கொள்ளுகின்றன ரென் றுணர்வாராக.

11 “எலாதாகவே யென்ற பின்னர் பொய்யே யென் றங்கீகரிக்க நேரும் என்றது எத்துணைப் பொருத்த முடைத்து?” என்றனர். ‘நான் கருடன் என்னும் பொய்யாகிய பாவனையினால் பிறர்பாலுள்ள விட நீக்குதலெவ்வா றேலும்? எலாதாகவே, கருட பாவனையின், பலன் பொய்யே யென் றங்கீகரிக்க நேரும். அங்ஙனம் பொய் யென்று நம் நண்பர் அங்கீகரிப்பரா? அங்கீகரியாராகவே, பொய்யாகிய கருட பாவனையினாலும், மெய்யாகிய விட நீக்கங் கூடு மென் றாயிற்று.’ என்று குட்டிக் கோலெழுதியிருக்க, பிழை திருத்தத் துண்டுப் பத்திரத்தில் உள்ள ‘யின்பலன்’ என்றதைக் கூட்டிப்படிக்கு மறிவில்லாது ‘எத்துணைப் பொருத்த முடைத், தென்று எழுதினர்? அஃதோ டமையாது, “சுவாமியார் தர்க்க சாஸ்திரத்தில் வல்லவர் போன்று தம்மைப் பல விடங்களிலும் வியந்து கொள்ளுகின்றனரே. இனி யேனுங் கவனித் தங்கீகரிப்பாரா?” என்று பிழை திருத்தத்தை யுணரும் உண ரிலாத் தேவானும் பிரியராய இவர் எங்ஙனம் கவனித்து நடக்கும்படி யாஞ்ஞாபித்தனர். பிற ருணர்ந்த பிழை திருத்தத்தினை யிவ ரறியாமையின் ‘அஞ்ஞானம்’ என்னுந் தோல்வித் தானத்தை யடைந்தார்.

12 “இவருக்குத் தாயுமான சுவாமிகள் மீது இத்துணைக் கோபம் வந்தமைக்குக் காரணம் என்னையோ? தாயுமான சுவாமிகள் திரு மூல நாயனார் போலவே, வேதாந்தஞ் சித்தாந்தம் இரண்டனையுஞ் சமரசமாகக் கொண்டு சித்தாந்த நெறியே சென்றவர். ‘சிவ ஞானிக ளென்று சொல்லித் தம்பட்ட மடிக்கு’ மென்று எள்ளனஞ் செய்தது இவர் மதத்தைக் கண்டித் திருத்தல்

கொண்டு போலும். திரு மூல நாயனுரைப் பெரியா ரென்று கொண்டது ஜமீந்தாராகிய ஸ்ரீமாந் அள அரு. அருணசலஞ் செட்டியா ரவர்கள், திரு மந்திரத்தைப் பரமப் பிரமாணமாகக் கொண் டொழுகுவது பற்றியா? அல்லது உண்மையா ?" என்கின்றார்.

'நம் நண்பர் தம்பட்ட மடிக்கும் தாயுமான சுவாமிகள்' என்று சூட்டுக் கோல் சுடுகின்றமையின், தம்பட்ட மடித்தற்குக் கருத்தா, நண்ப ராவரே யன்றித் தாயுமான சுவாமிக ளன்ரும். "சகம் பொய்யெனத் தம்பட்ட மடியே" யென்று அவர் கூறுயிருக்கின்றனர். நம்மவர்மீது கோபமே யன்றித் தாயுமான சுவாமிகள் மீது கோப மின்ரும். திரு மூல நாயனுர், வீர வைசவக் கொள்கை யுடையாராய் 'சிவாத்துவிதம் ஐக்கிய வாத சைவம்' என்னுஞ் சித்தாந்தத்தை யவலம்பித்தவ ரென்பது, சமஸ்கிருதத்தி லுள்ள மந்த்ர மாலிகா என்னும் நூலினுலும் அவரது சரித்திரப் புத்தகங்களினுலும், தென் மொழியி லுள்ள திரு மந்திரம், வீர சைவக் கிரந்த முதலிய வற்ருலு முணரலாம்.

வேதாந்தம் சித்தாந்தம் இரண்டனையுஞ் சமரசமாகக் கொண்டு என்னுஞ் சொற் பொருளை யாராய்வாம். வேதாந்தத்தோடு சித்தாந்தத்தைச் சாரவைத்தலால், சமரசமா? வேதாந்தத்தைச் சித்தாந்தத்தோடு சார வைத்தலாற் சமரசமா? வேதாந்தஞ் சித்தாந்த மிரண்டையும் சகட சக்கரம் போல் கொள்ளுதலாற் சமரசமா? இரண்டாவது பொருந்தாது; மூலமாய வேதத்திற் கூறும் வேதாந்தத்தை, யுரையாய ஆகமத்திற் கூறுஞ் சித்தாந்தத்தோடு சார வைத்தல் பொருத்த முடைய தன்ரும். ஒன்றென்று வேதத்திற் கூறிய பொருட்கு முரணி, மூன் றென்று பொருள் கொள்ளுதல் அறிஞர் கூற் றன்ரும், மூன்ருவது மன்று:—சகட சக்கரம் போலக் கொள்ளின் வேதாந்தத்துட் கூறிய பிரஹ்மப் பொரு ளோடு, சித்தாந்தத்திற் கூறிய பசுப் பொருளையு முடன் கூட்டிப் பொரு ளிரண்டாய், அவ்வாறே சித்தாந்தத்திற் கூறிய பாசப் பொருளை அபாவமாக்கி, பொரு ளிரண்டாய், வேதாந்தஞ் சித்தாந்த மென்னு மிரண்டற்கும் சமரசங் கூறல் வேண்டும். அஃது, சித்தாந்தத்திற்கும் வேதாந்தத்திற்கும் கருத் தன்ரும்; அவசித்தாந்தமுமாம். ஆதலால், முதலாவதே சால்புடைத்தாம். 'தந்தையொடு மகன் வந்தான்' என்பது போன்று மூலமாய வேதத்திற் கூறும் வேதாந்தத்தோடு, உரையாய ஆகமத்திற் கூறும் சித்தாந்தத்தி லுள்ள பாசத்தை யபாவஞ் செய்து, அபாவஞ் செய்துழிப் பசுத்தன்மை பதித்தன்மை நீங்குதலின் சுத்த சேதந மொன்றே யெஞ்சும். அச் சுத்த சேதநத்திற்கு வேதாந்தத்திற் கூறும் பிரஹ்ம சேதநத்தோடு, சமமாந்தன்மை யிருத்தலின், முன் மொழியாய வேதாந்தத்தோடு, பின்மொழியாய் சித்தாந்தத்திற்குச் சமமாந் தன்மை பொருந்தும். இவ்வாறே, வேதாந்த சித்தாந்த சமாசம் என்று எந்நூலில் வரினும் பொருள் கொள்க இதனை யுணருந் தவ விசேட மின்றி, மே லெழுந்த வாரியாய், 'சித்தாந்த நெறியே சென்றவர்' என் றெழுதியது

நாமாபிமான மாத்திரமா யுள்ள சைவ சித்தாந்திகளை யேமாற்றும் பொருட் டா?

தாயுமான சுவாமிகள் பாடல்.

அத்துவித வத்துவைச் சொப்ரகா சத்தனியை அருமறைகண் முர சறையவே' 'விரிவாய பூதங்க ளொன்றென்றொன் றாயழியும்' 'இந்திரசா லங்கனவு கானலினீ ரெனவுலகம்'. 'மைவிடா தெழுநீல கண்ட குரு வேவிஷ்ணு வடிவான ஞாநகுருவே' 'மலர்மேவி மறையோது நான்முகக் குருவே மதங்கடொறு நின்ற குருவே' 'வேதமே வேதாந்தமே'. 'சொல்ல வேண்டும்வகை நல்ல காதிகதை, சொல்லு மாயையினு மில்லையென், 'தெரிவதற் கரிய பிரம மேயமல சிற்சு கோதய விலாசமே'. இது போன் றே இன்னும் பத்துப் பாட்டு உள்ளன. 'மதவுண்ட வண்டெனவுஞ் சநக நாதி மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தா ரென்றும்' 'ஓதரிய சுகர்போல வேனெனென்ன வொருவரிலை யோவெனவு முரைப்பேன்றானே.' 'நான் முகத் தேவே நின்னாட்டிய வகிலமாயை, கான்முயற் கொம்பே யென் கோ கானலம் புனலே யென்கோ, வான்முக முளரி யென்கோ மற்றென் கோ விளம்பல் வேண்டும்' 'திடம் பெறவே நிற்கினெல் லாவுலக மும்வந் தேவல்செய்யு மிந்தநிலை நின்றோர் சநகன்முதன் முநிவர்.' 'பாராதி யண்ட மெலாம் படர்கானற் சலம்போற்' 'சகம் பொயெனத் தம்பட்ட மடியே.' இரவுபக லினைப்புமறப் பெனுந்தொந்த மறியார்க ளிதயம்வே தச்சிரமென வாழ்,'அத்துவித வநுபவத்தை யநந்தமறை யின்னமின்ன மறியே மென்னா, நித்தியத்தை நிராமயத்தை நிர்க்குணத்தைத் தன்னருளா லினைவுக் குள் ளே, வைத்து வைத்துப் பார்ப்பவரைத் தானாக வெந்நாளும் வளர்த்துக் காக் குஞ், சித்தினைமா தூவெளியைத் தன்மயமா மாநந்தத் தெய்வந் தன்னை.' 'பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போ லாருந் துறக்கை யரிதரிது, 'அவனே பரமு மவனே குருவு, மவனே யகில மனை த்து-மவனேதா, மானவரே சொன்னா லவரே குருவெனக்கு, நானவனாய் நிற்பதெந்த நாள்' 'நேரே மநத்துறவு மப்படியே மானா விவற்றி, லுனக் கிசைந்த வாறென்றே யோர்.' 'மெய்யைப்பொய் யென்றிடவு மெய்யனை யாப் பொய்நெஞ்சே, பொய்யைத்தான் மெய்யெனவும் போகுமோ - வைய மறத், தன்மயத்தை மெய்யெனவே சார்ந்தனையே லாநந்த, மென்மயமு நின்மயமு மே.' 'மதுசூதநன் றங்கையே' 'தந்தைதாய் மகவுமனை வாழ்க் கை யாக்கை சகமனைத்து மௌநியரு டழைத்தபோதே, யிந்திரசா லங்க னவு கானனீரா யிருந்ததுவே யிவ்வியற்கை யென்னே யென்னே'வேதமே வேதமுடி வானமோன' 'நெறிபார்க்கி னின்னையன்றி யகிலம் வேறோ நில நீர்தீக் கால்வானு மியலாத, குறியாது மில்லையென்றால் யாங்கள் வேறோ கோதையொரு கூறுடையாய் கூறாய் கூறாய்' 'ஏகதே சம்பூர ணத்துக் குண்டோ தான்புகலல் வேண்டும்.' 'ஆரறிவா ரென்ன வநந்தமறை யோல மிடும், பேறறிவே யின்பப் பெருக்கே பராபரமே.' 'வாநந்த மண்ணினந்தம் வைத்து வைத்துப் பார்க்க வெனக், காநந்தந் தந்த வரசே பராபரமே.' 'வே

தாந்த வீட்டில் விளக்கே பராபரமே.' 'விளக்குந் தகளியையும் வேறென்
றார் நின்னைத், துளக்கமறச் சீவனென்று சொல்வார் பராபரமே.' 'பாராதி
நீயாப் பகர்ந்தா லகமெனவு, மாராயுஞ் சிவனாநீ யாங்காண் பராபரமே.' 'வரு
வான்வந் தேதென்னல்போன் மன்னியழி யுஞ்சகத்தை, தெரிவாக வில்லை
யென்ற தீரம் பராபரமே.'

'மாயா சகமில்லையேன் மற்றெனக்கோர் பற்றுமில்லை, நீயேநா னென்று
வந்து நிற்பேன் பராபரமே,' 'வானாதி நீயெனவே வைத்தமறை யென்னையு
நீ, தானாகச் சொல்லாதோ சாற்றாய் பராபரமே.' 'மாயைமு தலாம் வினைநீ
மன்னுயிர்நீ மன்னுயிர்தேர்ந், தாயுமறி வானதுநீ யன்றோ பராபரமே.' 'தன்
னைத் தந்தென்னைத் தடுத்தாண்ட நின்கருணைக், கென்னைக்கொண் டென்
னபல னெந்தாய் பராபரமே.' 'என்று மிருந்தபடிக் கென்னையெனக்களித்த,
தொன்றும் போதாதோ வுரையாய் பராமே.' 'எண்டிசைகீழ் மேலான வெல்
லாம் பெருவெளியாய்க், கண்டவிடத் தென்னையுநான் கண்டேன் பராபர
மே.' 'பாலரொடு பேயர் பித்தர் பான்மையென நிற்பதுவே, சீலமிகு ஞானி
யர்தஞ் செய்கை பராபரமே.' 'அப்பு முப்பும் போன்ற வயிக்யபரா னந்தர்
தமக், கொப்புவமை சொல்லவும்வா யுண்டோ பராபரமே,' 'சித்தந் தெளிந்
து சிவமானோ ரெல்லார்க்குங் கொத்தடிமை யான குடிநான் பராபரமே'
வல்லமையே காட்டுகின்ற மாமாயை நானொருவ, னில்லையெனி னெங்கெ
யிருக்கும் பராபரமே.' 'முக்குணத்தா லெல்லா முளைக்கப் பிரகிருதிக் கிக்
குணத்தை நல்கியதா ரெந்தாய் பராபரமே.' 'பாசசா லங்களெல்லாம் பற்று
விட ஞானவைவாள் வீசுநா ளெந்நாள் விளம்பாய் பராபரமே.' 'மின்னனைய
பொய்யுடலை மெய்யென்று நம்பியையோ, நின்னை மறக்கை நெறியோ
பராபரமே.' 'நித்தியமொன் றில்லாத நீர்க்குமிழி போன்றவுடற், கித்தனை
தான் றுன்பமுண்டோ வென்னே பராபரமே.' 'ஞாலத்தை மெய்யெனவே
நம்பி நம்பி நாளுமென்றன், காலத்தைப் போக்கியென்ன கண்டேன் பரா
பரமே.' 'அங்கமே நின்வடிவ மானசுகர் கூப்பிடநீ, யெங்குமே னேனெ
ன்ற தென்னே பராபரமே.' 'சிற்பரமே தற்பரமே தெய்வச் சுருதிசொன்ன,
வற்புதமே யன்பே யறிவே பராபரமே.' 'அத்துவித மான வயிக்ய வநுபவ
மே, சுத்தநிலை யந்நிலையார் சொல்வார் பராபரமே.' 'தானந்த மான சகச
நிரு விகற்ப, வானந்த நிட்டையருளையா பராபரமே.' 'சிந்தை மயக்கமறச்
சிந்மயமாய் நின்றவுன்னைத், தந்தவுனக் கென்னையுநான் றந்தேன் பராபர
மே' 'மண்ணான மாயையெலா மாண்டுவெளி யாகவிரு, கண்ணார வுங்கனவு
கண்டேன் பராபரமே.' 'நீயேநா னென்று நினைப்பு மறப்புமறத், தாயே
யனைவரு டந்தாய் பராபரமே.' 'பூதமுத லானவரை பொய்யென்ற மெய்ய
ரெல்லாங், காதலித்த வின்பக் கடலே பராபரமே' 'நீர்க்குமிழி பூணமைத்து
நின்றாலு நில்லாமெய், பார்க்குமிடத் திதன்மேற் பற்றறுவ தெந்நாளோ'
'காக்கைநரி செந்நாய் கழுகொருநாட் கூடியுண்டு, தேக்குவிருந் தாமுடலைச்
சீயென்ப தெந்நாளோ.' 'வேலையிலா வேதன் விதித்தவிந்த்ர சாலவுடன்,
மாலைவியா பார மயக்கொழிவ தெந்நாளோ.' 'வித்தியா தத்துவங்க ளேழும்

வெருண்டோடச், சுத்தபர போகத்தைத் துய்க்குநா ளெந்நாளோ’ ‘எல்லா மிறந்தவிடத் தெந்தை நிறைவாம் வடிவை’ ‘சாலோக மாதி சவுக்கியமும் விட்டநம்பான், மேலான ஞானவின்ப மேவுநா ளெந்நாளோ.’ ‘தற்பரத்தி னுள்ளேயுஞ் சாலோக மாதி யெனும்.’ பொற்பறிந்தா னந்தம் பொருந்துநா ளெந்நாளோ.’ ‘கானற் சலம்போன்ற கட்டுழலைப் பொய்தீர, வான முத வாவி மருவுநா ளெந்நாளோ.’ ‘வீறியவே தாந்தமுதன் மிக்க கலாந்தவரை, யாறுமுணர்ந் தோருணர்வுக் கன்புவைப்ப தெந்நாளோ.’ ‘எனக்குநீ யென்று மியற்கையாய்ப் பின்னு, முனக்குநா னென்ற வுறுதிகொள்வ தெந்நாளோ.’ ‘நாம்பிரம மென்று னடுவே யொன்றுண்டாமா, றேம்பியெல்லா மொன்றாய்த் திகழுநா ளெந்நாளோ.’ சித்தான னாமென் ஜடத்தைநா மென்னவென்றுஞ், சத்தான வுண்மைதனைச் சாரவா நல்லறிவே’ ‘இருக்காதி மறைமுடிவு மிதயத்துள்ளே, யொருக்காலே யுணர்ந்தவர்கட் கெக்கலுந்தா னொழியாத வின்பவெள்ள மூலவா நிற்கும்.’ ‘பாராதி பூதநீ யல்லை உன்னிப்பா ரிந்திரியங் கரணநீ யல்லை’ ‘யாரா யுணர்வுநீ யென்றான்,’ ‘அன்பருக் கன்பான மெய்யன், ஐயனாநந்த மோன னருட் குருநாதன், தன்பாதஞ் சென்னியில் வைத்தான் என்னைத்தா னறிந்தேன் மநந் தானிறந்தேனே’ ‘இறப்பும் பிறப்பும் பொருந்த, எனக் கெவ்வணம் வந்ததென் றெண்ணியான் பார்க்கின், மறப்பு நினைப்புமாய் நின்ற மாயா மநத்தால் வளர்ந்தது’ ‘என்னையுந் தன்னையும் வேறா உள்ளத் தெண்ணாத வண்ணம்’ ‘தத்த நிலையே முத்தி முடிவென வாத தர்க்கமும்’ ‘குறியுங் குணமு மன்றி நிறைவுங் குறைவு மன்றி மறையோன் றேன விளம்ப’ ‘சகரை யகண்டத் தூவெளி யெல்லாந் திகழவே காட்டுஞ் சின்மய சாக்ஷி’ ‘அதுநா னெனவே யாற்றிடு மறுபவஞ் சதுர் வேதாந்தத் தன்மையென் றுரைத்தோன்’.

என்பனவாதி செய்யுட்களில் வேதாந்தத்தைப் புகழ்ந்து கொண்டாடி யிருக்கவும், ‘இவர் மதத்தைத் தாயுமான சுவாமிகள் கண்டித் திருத்தல் கொண்டு போலு’ மென் றெழுதியது அந் நூலைப் பார்த் தவ்வழி நில்லாக் குறையாலேயாம். ஒருவரை யுலகத்தி லுள்ள எம் மதத்தரும் பெரியா ரென்று கொள்ளல் தகாதாம். பிரமா, விஷ்ணு, ருத்திரன், சிவன், பிரஹ்மம், என்பவரையே, அவ்வம் மதத்தர் உயர்த்திக் கூறுவதனை, யேனையர் தாழ்த்திக் கூறுதலின், ஒருவர் பிறரொருவரைப் பெரியா ரென்று கொள்வது,அவரிடத்துள்ள தமக்கு வேண்டிய நற்குணத் தனாலே யன்றி வே றின்றாம். திரு மூல நாயனார் தமது நூலிற் சடந்தங்களையுங் கூறுமிடத்து, முதலில் வேதாந்தத்தினைக் கூறி, அம் மதத்தின் முக்கிய சித்தாந்தமான "த்வந்தத்அசி" (தத்துவ மசி) என்னும் வாக்கியப் பொருளைப் பிறண்டு பல செய்யுட்களால் ‘நீ அது ஆனாய்’ ‘நீ அவன்’ ‘நீ அவனா யிருக்கின்றாய்’ என விளக்கி யிருத்தலின், அது கொண்டு அவரை, உண்மைக் கருத்தோடு, பெரியா ரென்று கொண்டோ மன்றிப் பிறர் கொண்டதற்காகத் தாக்ஷண்யம் பற்றிக் கொள்ள வில்லை. ஸ்ரீமாந். அழ. அரு. அருணாசலச் செட்

டியா ரவர்களும் இவ்வாறாய கருத்துப் பற்றியே, கைக் கொண்டார்க ளன்றி, அந் நூல்களையும், ஏனை வேதாந்த சாஸ்திரங்களாய, வேதாந்த சூடாமணி, கைவல்ய நவநீதம், ஞாந வாசிட்டம், விசாரசாகரம் முதலிய நூல்களையும் ஸ்ரீ செல்லப்ப சுவாமிக ளவர்களாய தமது ஞானாசாரிய ரிடத்து முறையாகப் பாடங் கேட்டும், உணர்ந்தவர்க ளாகலின், பிறர் தாக்ஷண்யத்திற்காகக் கொள்ள வில்லை. கடாவிய இவர், தாம் கொண்ட வேதாந்தத்தைக் கை விட்டு, திருஷ்டப் பிரயோஜநமாய வுபகாரங் கருதிச் சைவ சித்தாந்தத்தைக் கைக் கொண்டது போன்று வேதாந்திகளும், ஜமீந்தாரவர்களும் கைக் கொண்டார்க ளென்று கருதுகின்றனரோ? அவ்வா றின்றென்று தெள்ளிதி னுணர்வாராக.

13. "பெரிய புராணத்திலும், திரு முறை வகுப்பிலும், எழுத்து மூல மாகவும், சிவாலயங்களில் வழிபாடு மூல மாகவும், திரு மூல நாயனாரைச் சைவ சித்தாந்திகள் கொண்டாடுகின்றார்கள் என்பது சுவாமியாருக்குத் தெரியுமா? தெரியாதா? தெரியுமாயின் சொன் மாத்திரையானே கொண்டாடும் என்றது பொருந்துமா? தெரியா தாயின் வாதத்திற்கு வரும்போ தாயினுந் தெரிந்து கொள்ள வேண்டாமா?" என்கின்றார்.

'தமது குல குரு வென்று சொன் மாத்திரையானே கொண்டாடுந் திரு மூல நாயனார்' என்று சூட்டுக் கோலில் எழுதியதனைக் குறித்துக் கவல்கின்றார். இவர்க ளெழுத்து மூலமாகவும், வழிபாட்டு மூலமாகவும், திரு மூல நாயனாரைக் குரு வென்று கொள்வது, சொன் மாத்திரையே யன்றி யுண்மைக் கருத்தோ டன்றாம். திரு மூல நாயனார் 28 தத்துவங் கொள்வோர் வேதாந்தி யென்றும், 25 தத்துவங் கொள்வோர் மாயா வாதி யென்றுங் கூறியிருக்க, அதனை யுணரும் ஆகூழ்வலி யின்றிப் போகூழ் வலியின் புணர்ப்பினால், தென்னிந்தியாவில் பேத வாத சைவமாய, இவர் மதந் தோன்றி ஐந்நூறு வருஷ கால முதல், இவரு மிவர் மரபினரும், வேதாந்திகளை மாயா வாதிக ளென்று மருண்டு கூறி நிந்திக்கின்றமையின், சொன் மாத்திரையே குருவாகக் கொண்டவ ராவர். உண்மைக் குருவாகக் கொண்டிருப்பின், அவர் வாக்கியத்திற்கு மாறாக, வேதாந்திகளை நிந்திப்பரா? நீங்கள் தாம் மாயா வாதிக ளென்பரேல், 28 தத்துவங் கொள்ளும் யாங்கள் மாயா வாதியாகுங்கால், 36 தத்துவங் கொள்ளு மிவரும் இவர் மரபினரும் மாமாயா வாதியாவர் என்க.

திரு மந்திரம் - இரண்டாந் தந்திரம் - 2-வது. குரு நிந்தை - 531:— "ஓரெழுத் தொருபொரு ளுணரக் கூறிய, சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர், ஊருடைச் சுணங்கனாய்ப் பிறந்திங் கோருகம், பாரிடைக் கிருமியாய்ப் படிகுவர் மண்ணிலே." 538, "மந்திர மோரெழுத் துரை செய்த மாதவர், சிந்தை நொந்திடத் தீமைகள் செய்தவர், நந்திய சுணங் கனாய்ப் பிறந்து நூறுரு, வந்திடும் புலையராய் மாய்வர்தண் மண்ணிலே." 535. "சன்மார்க்கச் சற்குரு சன்னிதி பொய்வரின், நன்மார்க்க முங்

குன்று ஞானமுந் தங்காது, தொன்மார்க்க மாய துறையு மறந்திட்டுப், பன்மார்க்க முங்கெட்டுப் பஞ்சமு மாமே." என்பன வாதிச் செய்யுட்கட்கு இலக்கிய மாவர் இவரு மிவர் மரபினருமேயாம்; குரு வாக்கியத்திற்கு மாறாய்க் கூறினமையா னென்க. தெரிந்தே சொன் மாத்திரையாகக் குருவாகக் கொண்டாடுகின்றார்க ளென்று கூறினேம். கொண்டாடுபவர்க ளெல்லாரையும், இவர்க ளுண்மைக் கருத்தோடு கொள்ளுகின்றார்க ளென்பதற்கு இடனின்று; நீல கண்ட சிவாசாரியர் இவர் கோளுக்கு மாறாய் அபிந்ந நிமித்த வுபாதாந காரணங் கூறுகின்றார். ஸ்ரீ அப்பய்ய தீக்ஷித ரவர்கள் சுத்தாத்வைதத்திற்கு மாறாய் சிவாத்வைதங் கூறுகின்றார்கள். உமாபதி (சிவாசாரியர்) சுவாமிகள், இவர்கள் நிந்திக்கும் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளைப் புகழ்கின்றார்கள். ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகளும், ஸ்ரீ சம்பந்த மூர்த்தி சுவாமிகளும், இவர் நிந்திக்கும் வேத வேதாந்தங்களைப் பல விடத்தும் புகழ்ந்திருக்கின்றார்க ளாகலின் என்க. மற்றும், இயற்கையில் பிராமண வருணத்தைத் தூஷிக்கு மிவர்கட்கு, சுந்தரமூர்த்தி நாயனார், திரு நாவுக் கரசு நாயனார்களிடத்து மிருக்கும் குரு பாவனை போன்று, ஸ்ரீ ஞாந சம்பந்த சுவாமிகளிடத்தும், ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகளிடத்தும், ஸ்ரீ அப்பய்ய தீக்ஷித ரவர்க ளிடத்தும், ஸ்ரீ உமாபதி சுவாமிகளிடத்தும், குரு பாவனை யின் றென்பதனை யாவரு முணர்வர்.

வாதத்திற்கு வருங்கால் தென்மொழி வடமொழிகளிலுள்ள நூல்களை யுணர்ந்து, வாதத்திற்கு வர வழி யறியாது, பிறர்க் கிட்ட சூட்டுக் கோல் நுழைந்து, அச்சூட்டைத் தாமும் பெற்று, அதனால் வினவல் முறை யறியாது, வினவி யிடர்ப்படு மிவர், பிறரைத் "தெரிந்து கொள்ள வேண்டாமா ?" என்று எழுதுதற் கெவ்வா றருக ராவர். தெரிந்தே வாதத்திற்கு வந்தோ மென் றுணர்வாராக.

14. "படிப்பின் கர்வம் பற்றியா ? சித்தாந்த நூல்களைச் செவ்வனே தெரிந்து கொள்ளாக் குறை பற்றியா ?" என்கிறார்.

படிப் பின்றியே, கர்வத்தா லொன்றை யொன்றாகக் கூறுங் கர்வ முடையோரும், நூல்களைச் செவ்வனே தெரிந்து கொள்ளாக் குறை யுடையோரும், இதுகாறுங் கூறியவற்றாலும், இனிக் கூறுமாற்றாலும், இவரு மிவர் மரபினருமே யாவர். உண்மையை யுள்ளபடி யெழுதினோ மன்றிக் கவர்த்தாலும் படிப்பின் குறையாலு மன்றாம்.

15. "சமஸ்கிருத ஞாந முடைய உமாபதி சிவாசாரிய சுவாமிகள், சமஸ்கிருதத்தி லொரு நூலேனுஞ் செய்யாது, தமிழிற் பல நூல்கள் செய்து வைத்தமைக்குக் காரண மென்னை ?" என்கின்றார்.

சூட்டுக் கோலில், உமாபதி சிவாசாரியர் சமஸ்கிருதத்தில் பௌஷ்கராகமத்திற்கு வியாக்கியாநஞ் செய்திருக்கின்றா ரென்றும், ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளை யதிற் றுதித்திருக்கின்றா ரென்றும் அறைந்திருக்க, அதனை யறியு மறி வின்றி, சமஸ்கிருதத்தி லொரு நூலேனுஞ் செய்யா'

தென்றார். இது தென்மொழிஞரை யேமாற்றற்கா? சூட்டுக் கோலைத் தக்
காரிடத்துப் பாடங் கேட் டறியாக் குறையாலா? உரை, நூ லன்று என்ப
ரேல், வேதவுரையாய ஆகமம் இவர்க்கு எங்ஙனம் முதனூலாம்? ஸ்ரீ அப்
பய்ய தீக்ஷிதரவர்கள் இயற்றிய 104 கிரந்தங்களுள், சிவார்க்கமணி
தீபிகை, யின்னோ ரன்ன பிறவுரைகளும், அடங்கியிருத்தலின், அவற்றிற்கு
நூ லென்னுந் தன்மை பொருந்தாதாம். "இதனை விரித்து, சிவாதித்த
மணிதீபிகை, சிவ தத்துவ விவேகம், முதலிய நூலுடையார்" என்று
சிவ ஞாந சுவாமி தமது பாஷ்யத்தி லெழுதி யிருத்தலின், இரண் டுரைகளை
யும் நூ லெனக் கொண்ட சிவ ஞாந சுவாமியும் புரட்ட ராவர். சிவ தத்துவ
விவேகம் நூலே யன்றி யுரை யன்று என்பரேல், அஃதறிவிலி கூற்றாய்
முடியும். நூலுக்குச் சிகரணி மாலை யென்றும், உரைக்குச் சிவ தத்துவ
விவேகம் என்றும் பெய ருண்மையின், மொழி பெயர்த்தாரும் அச்சிட்டா
ருந் தமோகுண வயத்தராய், "நூலாசிரியர் கருத்தினை நோக்கா, தொரு
சூத்திரத்திற் கொவ்வொரா சிரிய, ரொவ்வொரு மதமா யுரையுரைக் குவ
ரே, யவ்வுரை யதனு ளடுத்தவா சகங்கட், கவர்கருத் தறியா தவரவர் கருத்தி
னுட், கொண்ட பொருள்படப் பொருள்கூ றுவரே,.........நூலுரை
போதகா சிரியர் மூவரு, முக்குண வசத்தான் முறைமறந் தறைவரே, யிம்
முறை யெல்லா மெவர்பகுத் தறியினு, மவத்தை வசத்தா லலைகுவர் திட
னே, யதிமதி நுட்பமோ டதிகலை கற்பினும், விதியது வசத்தால் விதி
விலக் கயர்ப்பார், ஆசையா லளவிட் லரிதே........." என்று இலக்கணக்
கொத் துரைத்தாங்கு, முறை பிறழ்ந் துரைத்தன ரென்க. இதனால், சமஸ்
கிருதத்தில் நூல் செய்திருக்க, 'ஒரு நூலேனுஞ் செய்யாது' என்று புரட்
டினமையின் புரட்டரும், தம்மதத்தர் உரையை நூ லெனக் கொண்டாங்கு,
கொள்ளாமையின் 'அவசித்தாந்தம்' என்னுந் தோல்வித்தான முடையோ
ரும், சிவ ஞாந பாஷ்யத்தை யறியாமையின் 'அஞ்ஞாநம்' என்னுந் தோல்
வித்தானத்தை யுடையோரும், சிவஞாந பாஷ்யத்திற்கு மாறுபாடாகக் கூறின
மையின், 'மாறு கோளக் கூறல்' என்னுங் குற்ற முடையோருமாயினர்.

"ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் முன்னர் பௌத்த மதத்தினை வெல்
லுதற் பொருட்டு ஏகாத்ம வாதஞ் சாதித்துப் பின்னர்த் தா முய்ய வேண்
டிச் சைவ சித்தாந்த நெறியைத் தலைக்கூடி நின்று சைவ சித்தாந்த சம்
பந்தமாகச் சில வியாக்கியானங்களும், சிவ வழிபாடுகளும், செய்து வந்த
மையால், ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள், பின் செய்த வியாக்கியா
னத்தை யெடுத் தாண்டன ரென்று ஏன் கொள்ளக் கூடாது?" என்கின்
றார்.

பிறரை வெல்லுதற்கு, வேதாந்த நூல் சாதகம் என்கின்றமையின்,
பகலை யிர வென்று கூறின், மறுமொழி கூறாது, அங்கீகரிக்கும் மாணாக்
கனுக்குக் கூறுவது சைவ நூ லென்றாகின்றது. அவ்வாறாயின், இவர்
மரபினரும் எம்மவரிடத்துச் சாணாகதி யடைந்து, பிறரை வெல்லுதற்கு

வேதாந்த நூலைக் கேட்கலாமே? அவ்வாறு செய்யாமையின் இவர் கூறியது புரட்டாம். வேதாந்தத்திற்குப் பிறரை வெல்லுதற் பயனே யன்றி மோக்ஷ மின் றென்கின்றார். மூலமாய வேதத்திலுள்ள உபநிடதத்திற் கூறும் மார்க்கத்திற்கு, மோக்ஷ மின்றாயின், வேதத்தி னுரையாய ஆகமத்திற் கூறுஞ் சைவத்திற்கு மோக்ஷ மெங்ஙனமாம்? அங்ஙன மாமேல், திருவாசகம், தேவாரம், பெரிய புராணம், திரு விளையாடற் புராணம், திரு மந்திரம் முதலிய மூலத்திற்கு மோக்ஷ மின் றென்றும், அவற்றின் உரையைப் படித்தலாலே மோக்ஷ முண்டா மென்றுங் கொள்ளல் வேண்டும். அங்ஙனம் அறிஞர் அங்கீகரிப்பாரா?

"பின், தா முய்ய வேண்டி சைவ சித்தாந்த நெறியைத் தலைக் கூடி நின்றார்கள்" என்று, குரு, தீக்ஷை, முதலியன வின்றி, வெற் றுரையாகச் 'சைவ நெறியைச் சார்ந்தார்க'ளென்று கூறிய தெற்றிற்கு? சாஸ்திரங்களிற் சைவ குருவும், தீக்ஷையுஞ் சாற்றப்படாமையாலா? குரு, தீக்ஷை, முதலியன வின்றிச் சைவ சாஸ்திரத்தான் மோக்ஷ மடையலா மென்னுங் கருத்தாலா? இவ்வாறு இவர் ஒப்பினும், இவர் மரபின ரொப்புவாரா?

"சைவ சித்தாந்த சம்பந்தமாகச் சில வியாக்கியாநங்களு" மென்றனரே; உம்மையால் வேதாந்தத்திற்குப், "பிரஹ்ம சூத்திர பாஷ்யம், ஈஶாவாஸ்யோபநிஷத் பாஷ்யம், கேநோபநிஷத் பாஷ்யம், கடோபநிஷத் பாஷ்யம், பிரஶ்நோபநிஷத் பாஷ்யம், முண்டகோபநிஷத் பாஷ்யம், மாண்டூக்கியோபநிஷத் பாஷ்யம், ஐதரேயோபநிஷத் பாஷ்யம், தைத்ரியோபநிஷத் பாஷ்யம், சாந்தோக்கியோபநிஷத் பாஷ்யம், பிருகதாரண்யகோபநிஷத் பாஷ்யம், நரசிம்ம பூர்வ்தாபநீயோபநிஷத் பாஷ்யம், பகவத்கீதா பாஷ்யம், விஷ்ணு சகஸ்திர நாம பாஷ்யம், சநத் சுஜாதீய பாஷ்யம், லலிதா திரிசதீ பாஷ்யம்" என்னும் பதினாறு பாஷ்யங்களைச் செய்திருக்கின்றார்களென்று விளங்குகின்றது. சைவ சித்தாந்தத்திற்குச் சார்பாக வியற்றிய சில வியாக்கியாநங்களின் பெயரை யிவர் ஏன் எடுத்துக் காட்டவில்லை? இருந்தா லன்றோ காட்டுவர். கமட ரோமம் போ லில்லாமையாற் காட்டவில்லை போலும்!

"சிவ வழிபாடு செய்து வந்தமையால்" என்று கூறுகின்றமையின், சிவ வழிபாடு ஆகமத்திற்கே யுரிய தென்று கருதுகின்றனர் போலும்! வேதத்தின்கண் சிவ வழிபாடு முதலியவற்றை விரித்துக்கூறி யிருத்தலின், அதனை நோக்க ஆகமத்திற் கூறிய தொரு சிறிதே யாம். தாந்திரிக வழிபாட்டினும் வைதிக வழிபாடே யுயர் வுடைத்தாம். பிரமாணமாதற்கு நூல் காரணமே யன்றி, வழிபாடு முதலியன காரண மன்றாம். வழிபாடு முதலியனவே காரணமாமாயின், வழிபாடு முதலியன வுடையோர், வெள்ளறிவாற் கூறிய மூட நூல்களும் பிரமாணமாதல் வேண்டும். சிவத்திற்கு மேலொரு சிவ மின்மையால், அச்சிவன் சிவ வழிபாடு செய்யாமையின், அவ ரறைந்த ஆகமம் பிரமாண மன்றாதல் வேண்டும். "ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள் பின் செய்த வியாக்கியாநத்தை யெடுத் தாண்டன

ரென்று என் கொள்ளக் கூடா" தென்று ஜோதிஷங் கூறுகின்றார். இந்தச் சோதிடத்தாற் காரியம் பலிதமாமா? சைவ சித்தாந்த பரமாக, வியாக்கியான மியற்றி யிருந்தா லன்றோ, "என் கொள்ளக் கூடாது" என்று கூறறகும், பௌஷ்கராகமத்தின் வியாக்கியானத்தைச் சமஸ்கிருத வல்லார்வாய்ச் சரணாகதி யடைந்து முறையாகக் கேட்டு, எவ் வுபநிஷத் பாஷ்யத்தின் அநுவாத மென்று வரைந்திருக்கின்றதென வுணர்ந்தனரா? அப் புத்தகமே அச்சுவாகன மேறா திருக்க, எங்ஙனங் கேட்டேனு முணருவர்? "தைத்திரீய வுபநிஷத்தின் அநுவாதத் தன்மையால் உபநிஷத்திற்கு வியாக்கியானஞ் செய்பவர்களாயும், மஹாஞயு முள்ள, ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளால், வியாக்கியானஞ் செய்யப் பட் டிருக்கின்றதே யன்றி, சுபாலோபநிஷத் தநுவாதத் தன்மையால் வியாக்கியானஞ் செய்யப் படாமையின்" என்று உமாபதி சிவாசாரியர் எழுதியுள்ள வாக்கியங்களை யுணர்ந்தனரா? தைத்திரீய உபநிஷத்துக்கு அவைதிக தாந்திரிக சைவ சித்தாந்த பதி பசு பாச நித்திய துவைத பரமாக ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் பாஷ்ய மெழுதி யிருக்கின்றார்களா? இல்லா திருக்க "பின் செய்த வியாக்கியானத்தை யெடுத் தாண்டன ரென்று ஏன் கொள்ளக் கூடாது" என்று சிறிதேகற்கு மிளையார்பாற் றங் குறி வழக்க மிகவெடுத்து நாட்டும் தன்மையராய் வரைந்தது அறிவுக் குறைவினலாம். படலக் காரர் வாங்கிய சூடு, தமக்கும் வந்து பொருந்தியதாகத் துள்ளி யெழுந்து துடி துடித்துத் துண் ணெனத் தூணுக்கெனப் பலிவர்த்தன் போன்று மதர்ப்பால் முன் பின் யோசனை யின்றித் தூல வறிவால் மேலெழுந்த வாரியாய் இருபது கடாக்களை யேவினமையா னன்றோ இக் கட்டாரியால் இத்தனை யிட ரிணயந்தனர். சமஸ்கிருத ஞான மின்றிய தாம், சம்ஸ்கிருத நூல் விஷயமாகத் தலை யிட்டுக் கொள்ளலாமா? என்னுஞ் சத்துவ குண மின்றித் தமோ குண மிகுதிப் பாட்டால், தம்மவர் சென்ற வழியிலுஞ் செல்லாது, புதிய புரட்டு வழி யொன்றைக் கற்பித்து, "பின் துவைத சைவ சித்தாந்த பரமாகச் செய்த வியாக்கியானத்தைப் பிரமாணித்தன ரென என் கொள்ளக் கூடா தென்று,குருட்டுத் தனமாகக் கூறி; ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளை அவைதிக தாந்தரிக துவைத சவை சித்தாதியாக்கக் கருதுகின்றனர். ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரவர்கள் சிவார்க்க மணி தீபிகை முகப்பில் "பிராவீணர்களாய ஆசாரிய ரத்நங்களான ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகட்கு, அத்வைதமே (வேதாந்தமே) உடன்பாடாம்" என்று கூறி யிருத்தலையு முணர்வாராக. சிவ ஞான சுவாமி ஸ்ரீ வியாச பகவானையும், ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளையும், வேதாந்திக ளென்று கருதி வேறு படுத்தி யிருக்கவும், குரவரினுங் கூரிய புத்தி யுடையவ ராகலின், 'சைவ சித்தாந்தி' யென்று சாற்றினர் போலும். இவ் விஷயத்தைப் புரட்ட நினைத்த இவர், ஏனைச் சாதாரண விஷயங்களை யென் புரட்டுப் புரட்டுவர்? இவரை அண்டப் புரட்டரு ளொருவராக்குதலே சாலும். இனி, வரைவாராயின், அவ்வவ் நூல்களைப் படித்து; அவற்றிலுள்ள வாக்

கியங்களை யெடுத்துக் காட்டி வரைவாராக. அவ்வா றின்றி யிவ்வாறே வெற் றுரையாக வரையின் ஏனைய ரோளனஞ் செய்வ ரென் றுணர்க.

16. "சிவ ஞாந சுவாமிகள் சிவனுக் குரிய எண் குணங்களும், மோக்ஷ காலத்திற் சீவனுக்கு வந்து பொருந்தாது என்று எவ்விடத் தெழுதி யுள்ளார்கள்" என்கின்றார்.

சிவ ஞாந பாஷ்யத்தில் ஆறாஞ் சூத்திரத்தில் "ஆன்மா பசுத்துவ நீங்கிய முத்தி காலத்தில் சிவனைப் போல முற்று முணர்தல் முதலிய வெண் குணங்களு முடைய னென் றாகமங்களிற் கூறுதலின், ஆண் டாங்மாவி னறிவு சிவ ஞாநத்தோ டொத்த ஞாநமே யன்றிப் பசு ஞாநமன்மையா னவ் வறிவா னறியப்படுங் கோசரப் பொரு ளென்றலே பொருத்த முடைய தெனச் சிவ சமவாதி மதம் பற்றி யாசங்கை நிகழ்ந்த வழி யதனை மறுத்து" என்றும் "அத்தன்மையனாகிய முதல்வனைத் தலைப்பட்ட வான்மாவம் முதல் வனோ டொன்றாய்ப் போதலே யன்றித் தா னென வேறு நிற்குமா றின் மையிற் றன்னருளா லான்மா வுணரு மென வேறு படுத்துக்கூறுதல் பொருந்தா தெனச் சிவாத்துவித சைவர் மதம் பற்றி யாசங்கை நிகழ வதனை மறுத்து" என்றும், "பசுத்துவ நீங்கியவழி யான்மாவின் ஞாநத் திற் கோசரமா மென்னுஞ் சமவாத சைவரையும், முத்தியிற் சிவமே யன்றி யான்மா வென வே றின்மையின் ஆன்மாவுக்குக் கோசரமாமா றியாண் டைய தென்னுஞ் சிவாத்துவித சைவரையு மறுத்து" என்றும், "சிவாக மங்களில் ஓரோ ரோரிடத்தி லான்மாப் பெத்தத்திற் பாதந்திரன் முத்தியிற் சுதந்திரன் எனவும், பாதந்திரனாதல் பற்றி மல வுண்மை துணியப்படு மெனவுங் கூறுவன வெல்லாம் பொது வியல்பு பற்றிப் பதி யென நின்ற முதல் வன் செய்யு மைந்தொழிலின்கட் பட்டு நிற்றலு மவற்றி னகப்படாது நிற் றலும் பற்றியே பிறி தில்லை யாகலின் அது பற்றித் தன்னியல்பி னின்ற முதல்வனை நோக்கியுஞ் சுதந்திர னவன் போலு மென மலையற்க" என் றும், "இன்னோ ரன்னவை யெல்லா முபசாரம் பற்றி" என்றும், "ஆன் மாவுக்கு விசேட குண மில்லையாயிற் குண குணிகட்கு வேற்றுமை யில்லை யென்பது மேற்காட்டுதலிற் குணமில் வழிக் குணியு மில்லை யெனப் பட் டுச் சிவாத்துவித மதமாய் முடியு மாகலி னது பொருந்தாது" என்றும், "தனித்து நின் றறிவதாகிய சிவமுந் தானுந் தம்முள் ஒத்தல் சாலாமை யான் என்பது" என்றும், "நீரொடு நீரும் பாலொடு பாலுஞ் சேர்ந்தாற் போ லென ஐக்க வாதங் கூறுவார் மதமும், குட முடைந்த வழிக் குடாகாய மகாகாயத்தோடு கூடி யொன்று மாறும், சிறை முறிந்த வழி யாற்று நீர் கட லீரோடு கூடி யொன்றுமாறும் போ லெனச் சிவாத்துவிதங் கூறுவார் மதமு மறுக்கப்பட்டன. ஆகமங்களி னவ்வா றவற்றை யெடுத்துக் காட் டிய தொற்றுமைப்படச் சேர்தன் மாத்திரைக் கொருபுடை யொப்புமை யாதல் பற்றியே பிறி தில்லை யென்க." என்றும், "தற் றரும தருமி யென் றோதியதனை மீளவும் அதனை விரித் துணர்த்துவான் புகுந்து முற் றுணர்தன் முதலியனவாக வெண் வகைப்படுத் தோதி, யவற்று ளநாதி

போத மென் றொரு குணம் முற் றுணர்வு முதலியவற்றின் வேறு வைத்
தெண்ணப்பட்டது ; படவே அஃதநாதி முத்தத்தன்மை யென்னுங் குணத்
திற்குப் பரியாயப் பெயரா னநாதியே ஞானம் விளங்குத லெனப் பொருட்கு
வதே யாமாகலி னக்குண மநாதி முத்தனாகிய சிவனுக் கன்றி யிடையே
முத்தி பெற்ற வான்மாவுக் கில்லை யென்ப தனக்கு மொத்தலா னநாதி
போத னல்லாத வான்மாவுக்கு அநாதி போதத்தன்மை கூறியது, மாணிக்க
வொளி முழுவதுந் தன்னைச் சார்ந்த படிகத்தின் விளங்கினாற் போலச் சிவ
னுக் குரிய தருமந் தன்னைச் சார்ந்த வான்மாவின்மாட்டு விளங்குதன் மாத்
திரையே பற்றி யாகலின் [illegible] ஏனைக் குணங்களான்மாவிற் கோதிய தூஉ
மவ்வாறேயா மென்பது தெளியக்கிடந்த வா றறிக.'' என்றும், "பவுட்கா
மதங்க முதலிய சிவாகமங்களிற் சிவனுக் குரிய வெண் குணங்களே யன்றி
யவற்றோ டொப்ப வேறா யான்மாவுக் கெண் குணங்க ளுள வென யாண்
டானு மோதாமை யானும்'' என்றும், " அற்றாகலி னன்றே மல சத்திகள்
பலவாயின—சிவமும் ஆன்மாவும் இலக்கணத்தா லொன்றாய வழிப் பதி
பசு வென வேறு வைத் தெண்ணுதல் பொருந்தா மையானும்'' என்றும்,
"சிவனு மான்மாவு மிலக்கணத்தா லொன்றாய வழிச் சிவனை மறைக்க
மாட்டாத வாணவ மலம் ஆன்மாவுக் காவாரக மாதல் சொல்லாமையானும்''
என்றும், " என் குணங்களி னநாதி போத மென முற்றுணர்வின் வேறு
வைத் தெண்ணியது அநாதி முத்தத் தன்மைக்குப் பரியாயப் பெயரே
யாகலி னதுவு மதனோடொ னெண்ணிய வேனைக் குணங்களு மநாதி
முத்தனாகிய சிவனுக்கே யுரிய குணங்க ளென்பது முணராது, அக் குணங்
கள் முழுவதும் படிகம் போலப் பற்றியதன் வண்ணமாய் நிற்கு மியல்
புடைய வான்மாவின்மாட்டு விளங்கிய வுபசாரத்தால் என்பது முண
ராது,'' என்றும், " ஒன்றாய வழி அது வதுவாய் நின் றறிதலாகிய வான்
மாவி னிலக்கணம் முத்திக் காலத் தில்லை யெனப் பட்டு வழுவா மாகலி
னது பொருந்தாமையானும்'' என்றும், ஏழாஞ் சூத்திரத்தில் " அவையே
சிவகரணங்களாய்ச் சிவத்தை யறியு மென்பதனை மறுத்து'' என்றும், முதற்
சூத்திரத்தில் " அது கொண்டு தானே நிருபசரித வைக்கியங் கூறுதல்
சாலா தென்பது'' என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

இவ் வாக்கியங்கள் சீவனுக் குரிய குணங்கள் நாசமாவ தில்லை, சீவனுக்
குரிய ஆணவ, கார்மிக, மாயேய மலமும், மூல மலமும் நாசமாவ தில்லை.
சத்தி மாத்திரம் அடங்குவதாம். சிவன் குணங்கள் சீவனிடத்து தோற்றன்
மாத்திர மன்றி உண்மையில் இல்லை யென்று படிக திருஷ்டாந்தத்தாற்
கூறி, ஆகமங்களில் சிவ குணங்கள் ஜீவனுக்கு வந்து பொருந்துவதாக உப
சாரமாகக் கூறப்பட்டிருக்கின்றன வென்றும் கூறுகின்றன.

வேதாந்த ஆசாரியராய ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதாவர்களும் சித்தாந்த லேச
சங்கிரகத்தின் நான்காவது பரிச்சேதத்தில் " பிரதிபிம்பம் ஜீவன் பிம்ப
ஸ்தானீயன் ஈஸ்வரன். ஈரிடத்தும் அநுஸ்யூதமா யிருக்கின்றது சுத்த சைதந்
யம் என்னும் பக்ஷத்திலோ முக்தனுக்குச் சர்வ முக்தி வரும் வரைச் சர்வஞ்

ஞத்வ, சர்வ கருத்திருத்வ, சர்வேஶ்வரத்வ, சத்திய காமத்வாதி குண பரமேஶ்வர பாவ அடைவி னங்கீகாரமாம். எங்ஙனம் அநேகந் தருப்பணங்களில் ஒரு முகத்திற்குப் பிரதிபிம்ப முற்றவழி ஒரு தருப்பண மொழிக்கின் அந்தப் பிரதிபிம்பம் பிம்ப பாவமாக நிலை பெறும்; முக மாத்திர ரூபமாக வன்றும். அஞ்ஞான்றும் வேறு தருப்பண சந்நிதாநத்தா லாக்கப்பட்ட பிம்பத் தன்மை வதநத்தில் அகலாமையின். அங்ஙனம், ஒரே பிரஹ்ம சைதந்யத்திற்கு அநேக உபாதிகளில் பிரதிபிம்ப அடைவுறவே ஒரு பிரதிபிம்பத்தில் வித்தையின் உதயமாக, அதனன் அதன் உபாதி அகலவே அந்தப் பிரதிபிம்பத்திற்குப் பிம்ப பாவமாக நிலை பெறுத லின்றியமையாததாய் முடியும். முக்தனுக் கவித்தை யிலாமையின் சத்திய காமத்வாதி குண விசிஷ்ட சர்வேசுவரத் தன்மையி னடைவு கூடாதா மென்னற்க; அவன தவித்தை யின்றேனும் அக்கால் வேறு பத்தர தவித்தை யிருத்தலின், ஈசுவரரது ஈசுவரத் தன்மையும், சத்திய காமாதி குண வைசிஷ்ட்யத் தன்மையும், தம தவித்தையினு லாக்கப் பெற்ற தன் றன்றே; அவர்க்கு நிரஞ்சநத்தன்மை யுண்மையின்; மற்றே, பத்தரது அவித்தையா லாக்கப் பெற்றதேயாகு மவையாவு மென அங்கீகரிக்கத் தக்கதாம். "எத்தகைக்குணமுடை யீசத்தி யாநவான், இத்தரை யிடையே யிசைகு வானே, அத்தகை யீசனை யாகம்வீழ்ந் தடைவன்", "எவ்வெக் குணத்தொடு மீசனை யேத்துதுவர், அவ்வக் குணமுடை யவரையே யடைவர்" என்பன வாதி சுருதிகளில் சகுண உபாசகர்கட்கும் ஈசுர சாயுச்சியங் கேட்கப்படுதலின் முத்திக்குச் சகுண வித்தையின் பலச் சம அடைவாம் என்னற்க; சகுண உபாசகர்கட்கு அகண்ட சாக்ஷாத்கார மின்மையின் அவித்தையின் நீக்கமு மின்றும்; அவரது மூல அகங்கார நீக்கமு மின்றும். ஆவரண நீங்காமையின் அகண்டாநந்த விளக்க மின்றும். "உலக வியாபார மொழியும் பிரகரணத்தான் முன்னிலை யின்மையினானும்", "யோக மாத்திரம் ஒப்புமைக் குறியானும்" என்பன வாதி சூத்திரத்திற் கூறிய நியாயத்தானே அவர்கட்குப் பரமேச்வரரோடு போக சமாநத் தன்மை யிருந்த போதினும், சங்கற்ப மாத்திரையானே தமது போகத்திற்குப் பொருத்தமான திவ்ய தேகேந்திரிய வநிதை முதலியவற்றைச் சிருஷ்டிக்கும் ஆற்ற லிருந்த போதினும், சகல ஜகத் சிருஷ்டி சங்காராதி சுவாதந்திரிய இலக்கணம் வாய்ந்த நிரதிசய ஐச்வரிய மின்றும். முக்தர்களோ, எல்லா வடிவானுமே ஈசுவர பாவத்தை யடைந்து அவை யாவற்றையுமே யடைவர் என்பதாகப் பெருஞ் சிறப்புளதாம்."

"பரமேசுரருக்கு இரகுநாதாதி அவதாரத்தில் அறியாமையோ டுற்றமை துன்ப அடைவு முதலியன கேட்கப்படுதலின், முக்தர்கட்கு ஈசுர பாவ முறவே மீண்டும் பந்த அடைவாம் என்னற்க; அவர்க்கு விப்பிர சாப அமோகத் தன்மை முதலிய தாமியற்றிய மரியாதையைக் காக்கும்பொருட்டுத் தம்மிச்சையினனே பிருகு சாபாதிகள் சத்தியத் தன்மையை யடைவுறுமாறு நடங்குப்ப ஈசுவரருக்கு அதன் அபிநய மாத்திர பரத்தன்மை யுண்மை

யின் ; அன்றுயின், அவர்க்கு நித்திய முக்தத் தன்மையையும் தடை யற்ற சுவாதந்திரிய ஒப்புயர்வு இல்லாமை முதலியவற்றையுங் கூறும் மறை முரணன்றேவாம். ஆகலின், சர்வ முக்தி வரை பரமேஸ்வர பாவம் முத்தனுக்கா மெனப் பிம்ப ஈஸ்வர பாவத்தில் ஒரு கோது மின்றும். இப் பக்ஷமே சுருதி சூத்திர பாஷ்யாதி யநுகுணமானதாம்."

"சூத்திரக் காரர் நான்காவது பரியாயத்திற் பிரதிபாதிக்கப்பட்ட முக்தனுக்கு ஈஸ்வர பாவ அடைவை வெளிப்படையாய் விளம்புகின்றூர். அஃதின்றேல், முக்தனிடத்தும் சத்திய சங்கற்பத் தன்மை முதலியன கூடாமையின் உபக்கிரமத்திற் கேட்கப்பட்ட குணஷ்டகத்திற்கு ஈஸ்வரரினும் வேற்றிடத் திருப்பாதலின் செய்த சங்கா பரிகார இலாப மின்மையினுனுமென் றுணர்க."

"ஸ்ரீமத் பாஷ்யக் காரரும் மிகவெளிப்படையாய் முக்தனுக்குச் சகுண ஈசுவர பாவத்தினைக் கூறி யுள்ளார்".

"முத்தர்கட்கு ஈசுவர பாவம் இன்றியமையா தங்கீகரிக்க வேண்டலின்".

"நித்திய சித்தமாகிய பாவ மற்ற தன்மையோ எப்போதும் பாவ மற்ற தன்மையாம். உண்மையாக எப்போதும் பாவ மற்றதில் பாவ சம்பந்தமேனும், பாவ சம்பந்த மூல கருத்திருத்வ, போக்திருத்வ, சம்பந்தமேனும் பாரமார்த்திகமாகச் சம்பவியாதாம். இவ்வாருகவே, ஜீவனுக்கு ஈஸ்வரா பேதமும் நீக்க முடியாதாம். சுருதியினுற் போதிக்கப்பட்ட அதன தபேத விரோதி பந்தத்திற்குச் சத்தியத்தன்மை யின்மையின் என்க."

"சூத்திர அநுசாரிகளானே முக்த ஜீவர்கட்குச் சர்வ முக்தி வரை உண்மையாகச் சைதந்ய மாத்திரத்வ அவிரோதியாய பத்த புருட ரவித்தையாலாக்கப்பட்ட தடை யற்ற ஐஸ்வரிய அத னநுகுண கலாப விசிஷ்ட நிரதிசய ஆநந்த விளக்க சம்பத்தாகிய சர்வான்மகமாகப் பரமேஸ்வர பாவம் ஆதரிக்சத் தக்கதா மெனத் துணியப் பெறும்" என்று. ஜீவனுக்கு ஈஸ்வரத் தன்மையினைக் கூறிப் பந்தம் மித்தை யென்றும், பந்த காலத்தில் தன் குணங்கள் அவித்தையினுல் மறைப் புண் டிருக்கின்ற தென்றும், முத்தி காலத்தில் இயற்கைக் குணம் வெளிப்படுகின்ற தென்றும் கூறியிருக்கின்றூர்கள்.

இவற்றை விரித்துச் சைவ மத சகஸ்ர தூஷிணி யென்னும் நூலுள் வரைவாம். ஆவா வுடையோர் புத்தி கௌசல்யத்தினை ஆண்டுக் காண்க.

"இவரும் இவர் சார்பினரும் பொய் பொய் யென்று, பொய்யினையே சிந்தனை செய்பவராகலின் இப் பொய்க் கதை கூறினரா? இவரும் இவர் சார்பினரும் ஒரு வார்த்தையாவது,குற்ற மறச் சொல்ல விரும்பாது, வெற் றுரையாகப் பலவாய வார்த்தைகளைச் சொல்ல விரும்பி, ஒரு நூலையாவது கசடறக் கல்லாது, பல நூல் வல்லா ரென்று, அறியாதார் புகழுமே லெழுந்த வாரியாய், பல நூல் படித்தவராதலின், அது பற்றி யிப் புரட்

டுக்கதை கூறினரா? ஒரு நூலைப்பற்றியாவது ஒருவருரையைப் பற்றியாவது எழுதுவதாயின் அந் நூலையும், அவ் வுரையினையும் முறையாய்ப் பாடங் கேட்டுப் பொருளை நன் குணர்ந் தெழுதல் வேண்டும். அவ்வா றின்றித் தன் மனம் போனவா றெழுதல் முறையாகுமா?—இனியேனும் படித்துச் சிவ ஞான சுவாமியைப் பற்றிக் கூறிய குறைக்கு மன்னிப்புக்கேட் டுய்வாரா?" என்று வசை மொழி புகன்றார்.

மேலே காட்டியவாற்றால் சிவ ஞான சுவாமி கருத்து வெள்ளிடை விலங்கலாய் விளங்குகின்றமையின், இவரும் இவர் மதத்தினருமே பொய்க்கதை கூறுபவரும், குற்ற மற்ற வார்த்தைகளைக் கூறாதவரும், பல வெற் றுரை கூறுபவரும், நூலைக் கசடறக் கல்லாதவரும், சில நூலிடையும் வன்மையின் றென்று அறிஞாருவருக்கும்படி நூல்படிப்பவரும் ஆகின்றனர். இவர் பௌஷ்கராகம விருத்தியை முறையாய்ப் பாடங் கேட்டு, அல்லது, அதிகாரமின்றாயின் பிறரை மொழி பெயர்த்துத் தரும்படி யிரந்து, பின் மொழி பெயர்ப்பை நன் குணர்ந்து, எழுதாது தம் மனம் போனவாறு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளைத் தூஷித்து எழுதியது துவைத மலத் தடிப்புப் பற்றியா? அறியாமை பற்றியா? பரம்பரைக் குணம் பற்றியா? இனியேனும் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளைத் தூஷித்த பாவம் நீங்குதற்கு, எம்மவரிடத்து மன்னிப்புக் கேட்டு உய்தற்கு யாங்கள் கூறுமாறு நடப்பாரா? வேதாந்த சாஸ்திரங்களைக் கற் றறியாக் குறையால் வேதாந்திகளை நிந்திக்கின்றாரென்பதை மறுக்க முடியுமா?

"ஸ்ரீ சிவஞான சுவாமிகள் உரையைப் பற்றிய இந்த வொரு விஷயத்தையாவது, வாத சபையில் சாதிக்கச் சித்தமா யிருக்கின்றனரா? இருப்பின் சபைத் தலைமை வகிப்பதற்கு ஸ்ரீமாந் ஜமீந்தார் - அருணாசலச் செட்டியா ரவர்களையே நான் சம்மதிக்கின்றேன்" என்று பிள்ளைகடா கூறுகின்றது.

"இந்த வொரு விஷயத்தை யாவது," என்றமையின், தாம் கடாவிய வேனைப் பத் தொன்பது விஷயத்தையும், நிலை நாட்டுவதற்கு ஆற்ற லிலரென்று கூறினா ரென்பது எதிர் மறை முகத்தால் விளங்குகின்றது. இதுகாறும், கூறியவாற்றால் பத் தொன்பது கடாக்களும், நமது கட்டாரியாற் குத்துண்டு போயினமையின், அவ்வாறே யிதுவும் குத்துண்ட தென் றுணர்வாராக. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பதே போன்று, பத் தொன்பது கடாக்களுங் குத்துண்டு பட்டபின், இக்கடா எங்ஙனமெஞ்சி நிற்ற றகும்? வாதத்திற்கு வருவதாக இவ்வாறே எமக் கொரு கடித மிறுத்தனர். அவ்வாறே வருமாறு மறு மொழியாய குருமொழி விடுத்தேம். அது கண்டு ஒரு மொழியு மெதிர் பேசாம லொடுங்கியே நின்றனர். வாதத்திற்கு வர ஆற்ற லுடையவராயின், அக்கால் வந்திருக்கலா மன்றோ? யாங்கள் சைவ சித்தாந்திகள் யாவரோடும் வாதஞ் செய்யச் சித்தமா யிருக்கின்றோ மென்று 'அத்வைதி' என்பார் வெளியிட்ட

"அசுத்த சைவ சித்தாந்திக் கோர் வாத வரை யறை" என்னும் பத்திரிகை கண் டடங்கினர் போலும்.

17. "அவ்வாறே தாட்டாந்தத்தில் புகுத்தினுல், நான் பிரமம் என்னும் ஞானம் ஊனத்துக் கிடமாகுமென் றஞ்சி மறைத்துக் கொண்டது முறையாகுமா? அன்றியும், அக் கதையின்படி மூக்கரையன் தாரத்தில் ஆண்டா னடிமை ஞானமும், சுவாமியார் கருதாமலே அமைந்தன என்பதை அறிந்தாவது திரு வருட் சம்மதம் எது என்பதை யுணர்வாரா?" என்றனர்.

அத் திருட்டாந்தம், தமக்குக் கருத் தின்றிய கைலாயந் தோற்றுகின்ற தென்ற அவ்வளவில் உபயோகமே யன்றி, யேனையவற்றிற்கு உபயோக மன்றும். முழுத் திருட்டாந்தமு முபயோகப்படுத்துவா ராயின், ஈப்வர சங்கற்பத்தாற் கர்மாதீநமாக மூக் கின்றியவனுகப் பிறப்பது போன்று, பிறப்பிலேயே வேதாந்தியாகப் பிறத்தல் வேண்டும். அவ்வாறு ஒருவரும் பிறக்கக் கண்டிலேம். பிறந்தபின் நிஷ்காம கருமம் பக்தி முதலியன செய்து, குருவை யடைந்து பிரஹ்மஞாநியாகின்றனரே யன்றிச், சாம்சித்தர் போன்று, இயற்கையிலேயே ஞாநியாகப் பிறத்த லேலாதாம். அவ்வாறே பிறர் பழித்தல் போல், அவைதிக சைவசித்தாந்திகட்கு அந்நியமாக வேதாந்தத்தைப் பழிப்பா ரொருவர் வேண்டும். அப்பழிப்பை நிவர்த்தித்தற்குத் தனக்கு உடன்பா டல்லாத "ஆண்டா னடிமைத் திறம்" என்றமையான், 'திரு வருட் சம்மதம் எது என்பதை யுணர்வாரா?' என்றெழுதுதல் விவேகிகள் கூற்ரு? ஆண்டா னடிமைத் திறம் கருத் தில்லாது போக, அதனை நிவிர்த்தித்தலே திரு வருட் சம்மதமாம். ஊனத்துக் குரிய மதம், வேதத்திற்குப் புறம்பாகலின் இவர் மதமே யன்றி வேதத்திற் கூறிய எம்மவர் மத மன்றும். 'முறை யாகுமா?' என்று, முறையாற் சூட்டுக் கோலைப் பெருத இவர், முறை பிறழக் கூறு முறை முறையாகுமா?

"இவர் மதத்திற்கு முதலாய ஆசிரியராய் விளங்கிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள், தா முய்தற் பொருட்டு ஆண்டானடிமைத் திறம் பேணி, பௌத்த மதத்தை வெல்லுதற் பொருட்டு ஏகாத்ம வாதஞ் சாதித்திருக்கவும் அவ்வுண்மை யறியாது, அவருக்குப் பின் வந்த இடையாய ஆசிரியருங், கடையாய ஆசிரியரும், ஏகான்ம வாதமே ஆதி சங்கராசாரிய சுவாமிகள் கொள்கை யென்று தம்பட்ட மடித்துத் திரிவது நுணுகி யாராயு மறிவின்மை யென்பதை மறுக்க முடியுமா?" என்கின்ருர்.

உய்தற்குக் கொள்ளுஞ் சைவ சித்தாந்தத்தில் பிறரை வெல்லுதற் காற்ற லின் றென்றும், பிறரை வெல்லும் ஆற்றலுடைய வேதாந்தத்தில் மோக்ஷ மில்லை யென்றுங் கூறுகின்ருர். அவ்வாருயின் சிவ ஞாந சுவாமி தம் பாஷ்யத்தில், ஏனை மதங்களைத் தம் மாம் போன வாறு சோபாந முறையா லெழுதியது பெரும் புரட் டென்று கொள்ளல் வேண்டும். பிறரைக் கண்டித்தற் கெழுதிய தெனின், கண்டித்தற் காற்றலுடைய சைவத்

தில் மோக்ஷ மின்றாம். இன்றாகவே, சைவ மதம் பிறரை யேமாற்றிப் பொருள் கவரும் மதமாம். இவர் கூறியவாறே வேதாந்தத்திற் பிறரை வெல்லுதற்கு ஆற்ற லுடைமையா னன்றோ, வேதாந்திகளைக் கண்டு, சைவ சித்தாந்திகள் யாவரும் அஞ்சியோடும் நீர்மைய ராயினர். ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள், தங்கருத்து ஆண்டா னடிமைத் திறம் பேணும் அவைதிகமே யென்று, இதுகாறும் வெளி வந்திருக்கும் 115 கிரந்தங்களுள் யாண்டாயினு மெழுதி யிருக்கின்றார்களா? பிரமாணமாக வொன்றையும் வரையாது, ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள், 'அவைதிகமாய எமது சைவர்' என வெற் றுரையாக, வீதிகள் சந்துகள் பொந்துக டோறும், இவரும் இவர் மரபினரும் தம்பட்ட மடித்தல் தகுதியாமா? அவர்க ளியற்றிய 115 கிரந்தங்களின் வாயிலாக, அவர் கருத்து அத்வைதமே யென்று கொண்டிருக்கும், அவர் மாணுக்கராய எம்மவர் யாவரையும், "நுணுகி யாராயும் அறிவின்மை என்பதை மறுக்க முடியுமா" என்று எழுதியது, எந்த எரிவாய் நரகிற் புகுதற்கோ? கும்பி பாகம் என்னும் நரகத்தினையே யடைவர். அவர்க ளியற்றிய நூலைப் பரிசித்தற்கும் அதிகார மற்ற இவரும் இவர் மதத்தினரும் அவர்கள் நூலை யெங்ஙனம் நுணுகி யாராய்ந்தனர்? அவர் மாணுக்கராய எம்மவருக்கு விளங்காது, சுவாமிகளைத் தூஷிக்கு மிவர்கட்கு விளங்கியது எப் பாவ விசேடத்தாலோ? நுணுகி யாராய்தற்குத் தர்க்கம் வியாகரணம் சாங்கியம் யோகம் பூர்வ மீமாஞ்சை முதலிய நூல்களைக் கற்றிருக்கின்றனரா? அவ்வா றின்றி, அபூர்வ நுண்ணிய ஆராய்ச்சி யுடையவரா யெங்ஙன மாயினர்? உமாபதி சிவாசாரிய சுவாமிகளும், அப்பய்ய தீக்ஷிதரவர்களும் புகழ்ந்து கொண்டாடிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளை நிந்திக்கு மிவர், தமது மதாசாரியர் எனக் கொண்டாடும் உமாபதி சிவாசாரியர், சிவஞான சுவாமி, திரு மூல நாயனுர், சிவ ஞான வள்ளலார், கண்ணுடைய வள்ளலார், தாயுமான சுவாமிகள், சுந்தர மூர்த்தி முதலியோர்களை நிந்தித்தற்கு அஞ்சா ரஞ்சார். இனி யெழுதும் புஸ்தகத்தில் அவர்களை நிந்தித்தெழுதப் புகினும் புகுவர். இக் கருத்தா னன்றோ வேதாந்திகளுஞ், சைவ சித்தாந்திகளும் தம்மொடு சேர்க்கா திவரை விலக்கினர். அதனு லிவரும் தனித் தொரு மத முடையரா யிருக்கின்றனர். சங்கா திக் விஜயம் 16-வது சருக்கத்தில், கோகரணத்தி லிருந்த நீல கண்ட சிவாசாரியர் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகட்குத் தோல்வி யுற்று மாணுக்க ராயின ரென்றும், இன்னும் பல மதத்தினரும் தோல்வியுற்று மாணுக்கராயின ரென்றும் கூறி யிருக்க, அதனை யுணராது பௌத்த மதத்தை மாத்திரம் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் வென்றதாக மையலுற்றுக் கையாடினமையின், அஞ்ஞானம் என்னுந் தோல்வித் தாக அறை யுண்டனர். ஊரேறு அன்னவும் ஆமா வன்னவும் மதர்ப் புற்றுத் திரியு மெல்லா மத வாதிகளையும், அடக்குதற்குப் பரப் பிரஹ்மப் பொருளாய பரசிவனே ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் என்னும் பெயருடன் அவதரித்தன ரென் றுணர்க. ஐந்நூறு வருடத்திற்கு முன் தென்னிந்தியாவில் தென் மொழியில் தோன்றிய சைவ மதத்தி[illegible]ராய இவரும் இவர் மரபினரும் மூவாயிர வருடத்திற்கு முன் னவதரித்து, வேதத்

தின் பொருளை யாவருக்கும் விளங்கும்படி விளக்கி, வேதாந்த நூல் பல செய்த ஸ்ரீமந் மஹாதேவ மாநுஷ அநுக்கிரக லீலா விக்கிரகமாகிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளைப் பற்றிப் பேசுதற் கெவ்வா றருகராவர்? அருக ராகாமையின் ஒன்றும் பேசா தொழிவாராக.

“ஆண்டா னடிமைத் திறத்தி னுண்மைப் பொருளிவருக்காவது, இவர் மரபினருக்காவது தெரியுமாயி னதனை யேளனஞ் செய்ய மாட்டார்” என்றார்.

ஆண்டா னடிமைத் திறத்தி னுண்மைப் பொருளை யாமும் எம்மவரு முணர்ந்தே யேளனஞ் செய்கின்றோ மென் றுணர்வாராக.

“இரு பொருள்களு முருவுடைப் பொருளாய், ஓரிடத்திற் குந்திக் கொண்டிருப்பதே யாண்டா னடிமைத் திற மென்று, இவரும் இவர் சார்பி னரும் வீணாச்சிரமங் கொள்ளுகின்றனர்” என்றார்.

‘இரு பொருள்களு முருவுடைப் பொருளாய்’ என்றதன் பொரு ளென்னை? உருவம் என்பது குணமா? சொருபமா? குணமாயின், உற்பூத குணமா? அநுற்பூத குணமா? அல்லது ‘உருவம்’ என்பதற்குக் குணமுஞ் சொருபமும் என்பது பொருளா? உற்பூத குணம் உடைய பொரு ளென்று கூறுதல் பொருந்தாது; புறவிந்திரியக் காட்சி யின்மையி னென்க. அநுற்பூத குணம் என்றல் பொருந்தும். இரு பொருளுக்கும் அறிவு இச்சை செயல்க ளென்னும் முக் குணங்களு முண்மையின். அங்ஙன மாயினும் கேவலம் குணப் பொருள்க ளெனக் கூறல் பொருந்தாது. குணியாய சொரூப மின்றி, அறி விச்சை செயல்க ளாய குணங்கள் தனித் தியங்கா வாதலின் பொருந்தாதாம். சொரூபம் என்றல் பொருந்தும். சிலர் சேதநமே, பதிக்கும் பசுவுக்கும் சொரூப மென்றும், சிலர் சார்ந்த வண்ணஞ் சார்தல் சொரூப மென்றும் கூறுகின்ற மையான். அங்ஙனமாயினும், அறிவாய சொரூப மாத்திரத்தால் ஈரிடத் தும் பேதந் தோற்றாமையின், ஆண்டா னடிமைப் பேதந் தோற்றுதற்கு, அறிவு இச்சை செயல்கள் தனித் தியங்கல், தனித் தியங்க லின்மை, முத லிய குணங்கள் வேண்டப் பெறுதலின் பொருந்தாதாம். குணமுஞ் சொ ரூபமும் உடைய பொரு ளென்றலே பொருத்த முடைத்தாம். அறிவு, இச்சை, செயல், தனித் தியங்க லின்மைக் குணங்களையும், அறிவாகிய சொரூபத்தையும், உடைய பசுப் பொருளும், அறி விச்சை செயல் தனித் தியங்கற் குணங்களையும் உடைய பதிப் பொருளும்,ஓரிடமாய மகா கைலா யத்தில் பசுவின் மீது, பதி தமது திருவடியை வைத்துக் குந்திக் கொண் டிருப்பதே, ஆண்டா னடிமைத் திறத்தின் பொருளா மென்று யாமும் எம் மவரு முணர்ந்திருக்கின்றோம். எனையோர்க்கு மிதுவே பொருளாம். விரிப்பின் ஆயுள் போதா தாகலினாலும், புத்தகம் விரியு மென்னுங் கருத்தி னாலும், நண்பர்கள் சுருக்க வேண்டு மென்று விரும்பியதனாலும், சுருக்கினா

மென் றுணர்வாராக. இதனாற்றான் ஆண்டா னடிமைத் திறம் சுருதி விரோத மெனக் கொண்டு எளனஞ் செய்கின்றோம்.

"பெத்த முத்தி யிரண் டிடத்தும், இறைவனை யின்றி உயிர் தனித்து நில்லாமையானும், தனித்து ஒன்றை யறியாமையானும், தனித் தொன்றைச் செய்யாமையானும், தனித் தொன்றை யிச்சிக்காமையானும், எவ் விடத்து மிறைவன் ஆண்டானும், உயிர் அடிமையும் என்று சைவ சித்தாந்திகள் கூறுகின்றார்க ளென்பதை யினியேனு மறிந்து கொள்ளுவாரா?" என்கின்றார்.

'பெத்த முத்தி யிரண் டிடத்தும், எவ் விடத்தும் இறைவன் ஆண்டானும், உயிர் அடிமையும்' என்று சைவ சித்தாந்திகள் கூறுவார்களாயின், பெத்த தசையினும் முத்தி தசைக்கு விசேடம் யாது? பெத்த தசையினும், பதியும் பசுவும் ஆண்டான் அடிமையாயும், உயிர்க்குத் தனித்து நிற்றல், அறிதல், செய்தல், இச்சித்தல் எலாமையானும்; முத்தி தசையினும், பதியும், பசுவும் ஆண்டா னடிமையாயும், உயிர்க்குத் தனித்து நிற்றல், அறிதல், செய்தல், இச்சித்தல் ஏலாமையானும், இரு தசையும் ஒன்றேயாம். குருவை யடைந்து அநந்த சிரம முற்று, ஞான மடைந்ததற்கு யாது பயனுளது? பெத்த தசையினும் முத்தி தசையில் அதிக விசேட முள தெனக் கருதி யன்றோ ஜீவன் பிரவிர்த்திக்கின்றான். விசேட பலனைக் கருதாது ஒரு மந்தனும் பிரவிர்த்தியான், என்பதை யுணர்ந்து இனியேனு மடங்குவாராக,

18. "வேதாந்திக ளென்று சொல்லித் திரிகின்ற அனைவரும் வேதாந்த சாஸ்திரம் படித்திருக் கின்றார்களா?" என்கின்றார். வேதாந்திக ளெனக் கருதுவோர் யாவரும் ஜீவ காருண்யம், ஈஸ்வர பக்தி, பாச வைராக்கியம், பிரஹ்ம ஞானம் நான்கும் ஓர் வடிவா யெழுந்தருளியிருக்கும் ஞானாசாரியரை யடைந்து, தம் மதத்திற் குரிய நூற்களுள் தம் கருத்தளவில் பாடங் கேட்டு, அவ்வாறே யொழுகுகின்றார்கள். சைவ சித்தாந்திகளோ பெயர் மாத்திரம் சைவ சித்தாந்தி யென விட்டுக் கொண்டு, தம் மதத்திற் குரிய நூல் இன்ன தென்றும், தம் மத சித்தாந்த மின்ன தென்றும் உணரும் உணர்விலியாய், பிறர் கேட்கின் தம் மத சித்தாந்தத்தை, தம் மத நூலிற் கூறி யாங்கு கூறாது மூரா னுறக் கூறியும், பொருள் கவர்ந்து திரிவார் அநேகரை யித்தேசத்து மெத் தேசத்துங் காண்கின்றோ மாகலின், கல்வி யில்லாது நாமாபிமான மாத்திரமாயும், பல சைவ சித்தாந்திக ளீண் டிருக்கின்றன ரென் றுணர்க.

19. "பதி பசு பாசம் மூன்றும் அநித்தியமாயின், இம் மூன்றின் வேறான நித்தப் பொருள் எது? இவர் தம் மதத்தைத் தம் மட்டில் வைத்துக் கொள்ளாது, பெரியார் கருத் திதுவே யென் றவர்கள்மீதும், தமது மதத்தை யேற்றுகின்றார். அந்தோ! இத் தீச் செயலுக் கென்ன பயனடைவரோ? இவரா லெடுத்துக் காட்டப்பட்டிருக்குஞ் செய்யுட்களில்,

பதி, பசு, பாசம், மூன்றும் அநித்தியமாகக் கூறி யிருப்பதாகக் காட்டக் கூடுமா?" என்கின்றார்.

பதியும் பசுவும் பாசமும் அநித்தியமேயாம். பசுத் தன்மை, பதித் தன்மைகள் நீங்குழி, யெஞ்சிய சேதனங்கட்குப் பேத மின்மையின் அபேத மாய்ப் பிரஹ்மம் என்னும் பெயர் பெற்று, ஒரு பொருளே நித்தியமா யிருக்கு மென் றுணர்க. சூட்டுக் கோல், 55-வது பக்க முதல் 83-வது பக்கம் வரை யெண் ணிறந்த செய்யுட்களை யறிவித்து, இதுவே அப் பெரியார் கருத் தென, அறிவித்திருக்க, அதனை யுணராது, எம் கருத்தை அப் பெரியார்மீது ஏற்றுவதாகக் கூறினார். "பொய் யுலகம் பொய்யாகக் காட்டியும். பொய் தோன்றின் மெய் தோன்றா. கடைப்படும் உலகப் பொய்யினை மெய்யாகக் கருதினேன். எங்கும் என் சொரூபம் சச்சிதாநந்த இலகொளியா யிருந்திடும். வஞ்சகச் சகப் பொய் யனைத்தையும் மறந்து. சுருதியின் றுணிவால் நினைவுகொண் டுலகம் துச்சமென் றுணர்தல் நிச்சயமாம். பொய்ச் சகத் துறினுங் கலங்குறார். ஈசன் உயிர்கள் தாம் மாயா சகிதங்கள். உமைபாகத் தண்ண லிறந்தும், என்னை யறியப் பொய்யாகி யிருந்தது. மருடக்கொம்பாகு மன்ன மாயைதனை யகற்றாய். நிகழும் நீ பிரமமென்றருளும். துன்பத் துவிதந் தொலைந்த எல்லா வுலகு மிறந்தும், அத்திபாதிப் பிரிய ஆதி வெளியா யிருந்தால் சுத்தமிலாச் சீவ பரத் துவைதமெங்கே? அநாதி பவ பந்த மெலாம் துப்பறவே நன்றாகத் துடைத்து. ஆன்மாவே பரம சிவம். ஆன்மாவே விசிட்ட காரணாதீத, வாக்கு மனாதீத சர்வஞ்ஞனை பூரணனும். ஆன்மாவே பரமசிவ சொரூபம். சககாரணனும் புருடனுமே. பரப் பிரமம் நானே. பரசிவனும் நானே. சீவ பரவைக்கியத்தை யடைந்து. ஆன்ம வுபாசனை பண்ணக் கடவன்." என்பன வாதி வாக்கியங்களால், பதி பசு பாசம் அநித்தியம் என்று கூறப்பட்டிருப்பன அப் பெரியார் கருத்தா? எமது கருத்தா? பெரியார் கருத்தையே அப் பரம்பரையி லுள்ள யாமும், எம்மவரும் கைக் கொண்டு கூறியிருக்க, அதனை யறியாது, எமது கருத் தென்று பொய் புகலுகின்றார். இப் பொய்க் கூற்றா லுளவாம் பாவத்திற்கு, எக் குருவைக் கொண்டு பிராயசித்தம் செய்து கொள்ளக் கருதியிருக்கின்றனர்? இவை யாவும், பொய் யென்று கூறிய இவர்க்கு, அவ் வாக்கியங்களை யுணரும் அறிவின்றாயினும் ஏனை யறிஞர் குழாங்கள் உண்மை யறிவார்களாக. தாம் தீச் செயலைச் செய்து விட்டு, 'அந்தோ! இத் தீச் செயலுக் கென்ன பய னடைவரோ?' என்று கூறியது அறியாமை பற்றியா? கர்வம் பற்றியா? இழி குணம் பற்றியா? பரம்பரைக் குணம் பாழாகா திருக்க வேண்டு மென்னும் கருத்துப் பற்றியா? இவ்வா றெழுதின் தம்மைச் சார்ந்த அறிவிலிகள் வியப்பரென்னுங் கருத்துப் பற்றியா? இக் கருத்துள் எக் கருத்துப் பற்றி யெழுதினும் அடா தடாது. சூட்டுக்கோலிற் காட்டிய செய்யுட்களில் பதி பசு பாசம் அநித்திய மென் றுள்ள வாக்கியங்களை யீண் டெடுத்துக் காட்டினமையின், அது கொண்டடங்கி வாழ்வாராக.

20. “முக வுரை யெழுதிய யாரோ வொருவர் தம் முடைய படிப்பின்
திறத்தைப் பிறர் அளந்து கொள்ளுமாறு ஏதேதோ கூறுகின்றார். அவர்
தன் கூற்றோ டமையாது தொல்லாசிரியர் திரு வாக்குக்களையும் தம் மநம்
போனவாறு திரித்து, அவ்வாசிரியர் கூற்றாகக் கூறுகின்றார்.” என்கின்
றார்.

முக வுரை யெழுதுவோரும், நூ லெழுதுவோரும், தம் படிப்பின்
திறத்தைப் பிற ரறிந்து கொள்ளுவதற்கே யெழுதுவ தன்றித் தாம் கற்ற
தொன்றும், முன்பின் முரணுற எழுவ தொன்றுமாய்ப் பிறர் செவ்வனே
யுணராதிருக்கு மாறு, எழுதுவது கற்றார் திற னன்றாம். தாம் கற்ற வளவில்
முகவுரை யெழுதியவரை யேளனஞ் செய்கின்றமையின், இவர் எழுதிய
கடா, இவர் கற்ற கல்வியிற் குறைந்தும், அல்லது பிறர்பால் விஷயங்களை
யாசித்தும், எழுதியிருக்கலா மென்று விளங்குகின்றது. இதனால், கற்ற
வற்றை யுண்மையாக எழுதுந்திற னின்றிப் பொய் பொதிந்த புரட்டுக்
குழூஉக்களை யெழுதி வெளியிடுபவ ரென்று வெள்ளிடை விலங்கலாய்
விளங்கலாயிற்று. ‘ஏதேதோ’ என்றதை விரியாது விடுத்ததன் காரண
மென்னை? விரிக்கின் படலக்காரர் ஒழுக்கம் வெளியா மெனக் கருதியா?
படலக்காரரிடத்துள்ள நசையாலா? பிறர் பழிப்ப ரெனக் கருதியா? முக
வுரையிற் கூறியயாவும் படலக்காரரிடத் துண்மையாயினமையின், மீண்டுங்
கூறப்புகின் வழுவா மெனக் கருதியா? விரியாது விடுத்த கருத்தை விளக்
குவாராக. ‘தொல்லாசிரியர் திரு வாக்குகளையும்’ எனப் பன்மைச் சொற்
புகன்று, ஒரு குறளையே திரித்ததாக அறிவித்தனர். ‘வாக்குகள்’ என்
பது குறட்பாவை யுணர்த்துவதா? சொல்லை யுணர்த்துவதா? வாயை
யுணர்த்துவதா? வாயையுஞ் சொல்லையும் அன்று; கருவியாகுபெயராய்ப்
பாவை யுணர்த்திற் றென்பரேல், ஒருமையைப் பன்மையாக மயங்கினது,
நன்னூல் தொல்காப்பிய மதங்கள் பற்றியா? தம் மதம் பற்றியா? தம் மதம்
பற்றி யெனின், அம் மதம் ஈண் டெவர்க்குஞ் சம்மத மன்றாகலின் செம்
மதமே சம்மதமாம் என்க. ‘புலவனார் வந்தார்’ என்பது போன்று, ஒன்
றனையே பன்மையாக வுயர்த்திக் கூறினே மென்பரேல், கடா “2-ம் பக்
கம், திரு மந்திரச் செய்யுளாலும், 8-வது பக்கம்-திரு மந்திரத் திரு வாக்கி
னாலும், என்ற திரு வாக்கினாலும், ·-வது பக்கம்—என்னுந் திரு வாக்கால்,
12-வது பக்கம் - ஞாந வாசிட்டச் செய்யுளுக்கு, 13-வது பக்கம், என்றற்
றொடக்கத்துச் செய்யுளால், 14-வது என்னுந் திருக் குறளுக்கு,” என்ற
இடங்களில், திருக் குறட்கும், மற்றைச் செயயுட்கட்கும் உயர்வு பற்றிப்
பன்மைச் சொற் புணர்த்திக் கூறாத தேனோ? ஒரே நூலிலுள்ள குறளை
யோரிடத் தொருமைச் சொல்லாலும், ஓரிடத்துப்பன்மைச் சொல்லாலும்,
சகசாணவ வயப்பட்டு மயங்கிக் கூறிய இவர் தாமா முகவுரை யெழுதிய
வரைப் புன் மொழி புகல்பவர்?

‘தம் மநம் போனவாறு திரித்துக் கூறினா’ ரென்றார். பாடபேத
முள்ளவற்றைக் கூறுபவர், திரித்துக் கூறுபவராயின், பாடபேத மென்

னுஞ் சொல் உலகில் வழங்கக் காரண மின்றே. அவ்வாறாயின், சிவ ஞான பாஷ்யத்திற் பாட பேத முள்ளனவாகக் காட்டப்பட்ட யாவுந் திரித்த தென்றாகிச் சிவ ஞான சுவாமி புரட்ட ரென் றங்கீகரிக்க நேரும். ஆகலின் பாட பேதங் கூறுவோர் திரித்தவ ராகார்; ஆகார். திருக் குறளில் பாட பேதம் பல வுள்ளன வாக, சென்னை, கோ—வடிவேலு செட்டியார், சோழவந்தான்—அரசஞ் சண்முகனார், தூத்துக்குடி வ. உ. சிதம்பரம் பிள்ளையென்பாரும், இன்னும் பலரும் அறிவித்திருக்கின்றனர். அவ்வாறே சில பாட பேதங்க ளுள்ள பிரதி முகவுரை யெழுதியவ ரிடத்து மிருக்கின்றதென் றுணர்வாராக.

"காலத்தி னாற் செய்த நன்றி யொருவற்கு, ஞாலத்தின் மாணப் பெரிது." என்று சூட்டிக் கோன் முக வுரையி லச்சிட் டிருக்க, அதனைப் புரட்டிக் கடாவின் 18-வது பக்கத்து, 'ஒருவர்க்கு' என்று சூட்டிக் கோலி விருப்பதாக அச்சிட்டனர். இவ்வாறு இதனைப் புரட்டிய விவர் புரட்டை யெப் புரட்டிற் சேர்ப்பது? எழுத்துப் புரட்டிலா? சொற் புரட்டிலா? வாக்கியப் புரட்டிலா? செய்யுட் புரட்டிலா? நூற் புரட்டிலா? சமயப் புரட்டிலா? மதப் புரட்டிலா? புவநப் புரட்டிலா? அண்டப் புரட்டிலா? ஜகப் புரட்டிலா? ஜீவப் புரட்டிலா? சிவப் புரட்டிலா? இத் துவாதசப் புரட்டின் ஒரு புரட்டிச் சேர்த்துக் கொள்ளுமாறு இனி யெழுந்துங்கா லெழுதுவாராயின், அந்தப் புரட்டுடையோ ரென் றிவருக்குப் பட்டங் கொடுக்கலாம். அப் பட்டத்தைப் பெற்றுச் சைவப் பிரசாரகர் என்னும் பட்டத்துக்கு முன், புரட்டு என்னும் பட்டத்தையுங் கூட்டிப் 'புரட்டுச் சைவப் பிரசாரகர்' என்னும் பெயரோடு விளங்குவாராக.

"காலத்தி னாற்செய்த நன்றி யொருவற்கு (சிறி தெனினும்), ஞாலத்தின் மாணப் பெரிது", 'ஒருவனுக்கு இறுதி வந்த வெல்லைக்கண் ஒருவன் செய்த வுபகாரம், தன்னை நோக்கச் சிறிதா யிருந்ததாயினும், அக் காலத்தை நோக்க நிலவுலகத்தினும் மிகப் பெரிது.' என்பது பரிமேலழகர் உரையாம். இதன் கண் 'ஒருவற்கு' என்னும் பதமும், 'சிறிதெனினும்' என்னும் பதமு மின்றி இவ் வுரை முடிவு பெறாதாம். ஒருவர் 'சிறி தெனினும்', என்னும் பாடத்தைக் கொண்டு, 'ஒருவனுக்கு' என்ற சொல்லை அத்தியாகாரஞ் செய்தனர். ஒருவர் 'மாணப் பெரிது' என்றதனானே 'சிறி தெனினும்' என்றது தானே பொருந்துதலின் 'ஒருவற்கு' என்னும் பாடத்தைக் கொண்டு 'சிறி தெனினும்' என்றதை அத்தியாகாரஞ் செய்தனர். ஆகலின், இருமையுஞ் சால்புடைத்தேயாம். இதனை யுணரா வாறின்றி, முகவுரை யெழுதியார் மீது புரை யுரை கூறிப் புல் லொழுக் குடையோ ராயினர். முகவுரை யெழுதியவரைப் பற்றி விரித்திருப்பாராயின், அவர் தங் கல்வித் திறத்தை யிவ ரளந்து கொள்ளுமாறு கண்டன மெழுதி யிறுத்திருப்பர். இக் கருத்துப் பற்றியோ விரிக்காது விடுத்தனர்?

"இப் புரட்டு முகவுரையை வாங்கிச் சேர்த்து வெளியிட்ட சுவாமியாருக்குத், திருக் குறளாராய்ச்சியுண் டென்று ஒப்புதல் கூடுமோ? தாம் பயின்

நறியாத திருக் குறள், திரு மந்திரம்,தேவாரம்,திரு வாசகம் முதலிய நூற்
களிற் றலையிட்டு, தாங் கற்ற நூல்களிலும், தமக்கு நுணுகிய ஆராய்ச்சி
யுண்டோ? இல்லையோ என் றையுறச் செய்வதைவிடத் தம் மளவிற் றாம்
அடங்குதல் முறைமை யென்பதை யினியேனு மறிந் தடங்குவாரா?" என்
கின்றார்.

திருக் குறட் செய்யுள், சூட்டுக் கோலி லச்சிட்டிருப்பதனை, அறியும்
தன்மை யில்லா இவர்க்கு, திருக் குற ளாராய்ச்சியேனும், சூட்டுக் கோலா
ராய்ச்சியேனு முண் டென் றொப்புதல் தருமா? சூட்டுக் கோலைப் படித்
தற்கு பாவ விசேடத்தாற் கண் ணின்றாயினும், பிறர்வாயிலாகக் காதாற்
கேட் டவ்வாறாயினு மெழுதலாம். அதற்கும் பாவ விசேடத்தாற் செவி
மந்தமாயின், கண் ணில்லாக் குருடரும்,. கா தி ல் லா ச் செவிடருமாய்
வாதத்திற்கு வந்திடுறுதல் என்ன அறியாமை கொல்லோ? திருக்
குறண் முதலிய நூல்களில் நுணுகிய ஆராய்ச்சியின் றிண்ணிய திரு
ந்தமையா னன்றோ, சைவர்கட்குப் பாதகமான அவற்றின் செய்யுட்களை
யெல்லா மறிவித்து வாதிட்டுக் கண்டித்தேம். இவர்க்குத் திருக் குறள் திரு
மந்திரம் தேவாரம் திரு வாசகம் முதலிய நூல்களிலும்,சிவ ஞான பாஷ்யத்
திலும், சிவ ஞான வள்ளலார் சாஸ்திரம், தாயுமான சுவாமிகள் பாடல் முத
லியவற்றிலும், ஞான வாசிட்டம் முதலிய வேதாந்த சாஸ்திரங்களிலும்,
'ஐயம்போ லரங்கதையுண்டோ' என்றுங் கைய முளதாமாயின், அதனை
நிவர்த்திப்பான், பெரியாரைச் சரணாகதியாக அடைந்து, கேட்குமாற்றாற்
கேட்டு, அவர் விளக்கு மாற்றால் விளக்கப் பெற்று, அவ்வழி ஒழுகி யடங்
காது, ஐயத்தோடு வெளி வந்து ஊரோ றன்ன மதர்ப்புற் றுவாரித்த லெற்
றிற்கு? இனியேனும் இக் கட்டாரி பெற்று அடங்குவாராக.

" சணப்பன் வீட்டுக்கோழி தானே விலங்கில் மாட்டிக் கொள்வது
போன்று, யோசனை யின்றித் தாமே மாட்டிக் கொண்டார்." என்கின்றார்.

பிறர்க்குப் போட்ட சூட்டுக் கோலின் மத்தியில் நுழைந்து மாட்டிக்
கொண்டு, தாமுஞ் சூடுண்டு, துள்ளித் துடித் தெழுந்து,கடாவிடுத்துக் கட்
டாரியால் ஈரிருபத் திடத்துக் குத்துண்டு விழிப்பவர் இவரா? யாமா? தாம்
சூட்டுக் கோலின் மாட்டிக்கொண்டதனை யுணராது,சூட்டுக் கோலான் மாட்
டிக் கொண்டா ரென்று, கூறுதல் அறிஞர் கூற்றோ? அறிவிலி கூற்றோ?

" அவற்றுட் சிலவற்றை யீண் டெடுத்துக் காட்டினும்" என்றார்.
முழுமையு மெடுத்துக் காட்டி யிருப்பாராயின், தமது கடா முழு வதுடங்
கட்டாரியாற் குத்தப்பட்டு அங்கத் தன்மை பெற்றிருப்பர். இக் கருத்தே
பற்றி முழுமையுங் காட்டவில்லை போலும்!

"எமது கேள்விக்கு எழுத்து மூலமாக விடை தரினுந் தருக" என்று
கூறினமையின் இவர் கடாவை யடக்கற் கேற்ற கட்டாரி விடப்பட்டிருக்
கின்ற தென் றுணர்வாராக.

“வாத சபை கூட்டி விடைதர எண்ணினும் நாம் சித்தமா யிருக்கின்றேம்.” என்று கூறிக் கடாவை முடித்தார்.

இவ ரன்ன பல்லோரது தொல்லையும் ஒருங்கே யொழிப்பான் கருதியே ‘அத்வைதி’ என்பார், “அத்வைதிகளை வாதத்திற்கு வர வழைத்த அசுத்த சைவ சித்தாந்திக் கோர் வாத வரை யறை” என்ற பெய ருள்ள பத்திரிகையைப் பல்லோரு மறியப் பகிரங்கப்படுத்தினர். அது கண்டு சைவ சித்தாந்திகள் வாதத்திற்கு வரும் வழி கூறாது, பல வெற் றுரை கூறிக் காலங் கழிக்கின்றனர். அச் சைவ சித்தாந்திக ளேற்படுத்துஞ் சபைக்கு, ‘அத்வைதி’ என்பார் கூறிய வாத வரை யறையின் பிரகாரமே, வேதாந்திகளை வாதத்திற் கழைப்பார்களாயின் அக்கா லச்சபைக் கிவர் வரின், இன்னோ ரன்ன பிற நிகழ்த்தினுங் கண்டநஞ் செய்யச் சித்தமா யிருக்கின்றே மென் றுணர்வாராக.

இவர் பிறர்க்கிட்ட சூட்டுக் கோலைப் பெற்று, அதனைச் செவ்வனே யுணராது, முன் பின் முர ணுற வுணர்ந்து, இருபது கடாக் கடாவினர். அதனால், “சூட்டுக் கோலாற் சூடுண்டு, துள்ளி யெழுந்த தூத்துக்குடி முத்தைய பிள்ளை கடா” என இவரைக் கடாவாகக் கொண்டு, அதனை யடக்கற் கேற்ற கட்டாரியாக, இப்புத்தக ரூபமான கட்டாரி விடப்பட்டமையின் இந்நூற்குச், “சூட்டுக் கோலாற் சூடுண்டு, துள்ளி யெழுந்த தூத்துக் குடி முத்தைய பிள்ளை கடாவை யடக்குங் கட்டாரி” எனப் பெய ரீந்தா மென்க.

இனியேனும், பெரியார் நிந்தை, வேதாந்த சாஸ்திர நிந்தை, ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் நிந்தை, குறட் புரட்டு, வியாக்கியானப் புரட்டு, பௌஷ்கராகம வுரைப் புரட்டு முதலியவற்றைச் செய்யாது, பெரியாரைச் சரணாகதியாக அடைந்து வேதாந்த சாஸ்திரங்களை முறையாகக் கேட்டு அவ்வழி யொழுகித் தோல்வியுற்றதற்கும், நிந்தித்ததற்கும் எம்மவரிடத்து மன்னிப்புக் கேட் டுய்வாராக.

இவர் போன்றே, ஆரியம் அற்பங் கற்ற அந்நிய தேயத்துறந்தார், வே றொருவரது பெயரைப் போர்த்துக் கொண்டு, கற்றோர் கண்டு கழித்தொதுக்கு மாறு இருபத் தைந்து விடயங்க ளெழுதிச் “சைவ சித்தாந்த வைபவம்” என்னும் முக்கியப் பெயரையும், “நியாய கட்கம்” என்னுங் கௌணப் பெயரையும் இட்டு எழுதிய ஆபாசப் புத்தகம் ஒன்று மறைவாய்ச் சிற்சில விடங்களிலு நிலவுதல் கண்டநம். அவ் வல்லலை யொழிக்கக் “கட் கம்கொண்ட காளியைச் செயிக்கும் காமாரி” என்ற பெயருடன் கண்டநம் வெளியிடுகின்றேம். அதனையும், இவரும் அவருங் கண் டடங்கி யிடர்ப்படா தின்புறுவாராக.

உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும். 474

வெண்மை யெனப்படுவ தியாதெனி னொண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு. 844

இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து. 856

கூற்றத்தைக் கையால் விளித்தற்றா லாற்றுவார்க்
காற்றாதா ரின்னா செயல். 894

எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். 896

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னாந்
தகைமாண்ட தக்கார் செறின். 897

சூட்டுக் கோலாற் சூடுண்டு
துள்ளி யெழுந்த தூத்துக்குடி முத்தைய பிள்ளை
கடாவை யடக்குங் கட்டாரி
முற்றுப் பெற்றது.

காள யுத்தி௵ ஐப்பசி௴

உ

கணபதி துணை.

சற்குருப்யோ நம:

குரு தோத்திரம்.

காருருவக் கமலமலர்க் கண்ணனிவர் வாகநமாங் கருடப் புள்ளின்
சீருருவைத் தியாநிப்போர் திகழுமரா விடநீக்கஞ் சேர்ந்தாங் கெண்ணெ
வாருருவக் கலைகடந்த காசிகா நந்தனெனும் வள்ளல் நாமத்
தோருருவைத் திநஞ்செபிப்போர் மடமையரா விடநீங்கி யுய்வா ரன்றே.

சீராருந் தென்மொழியும் வடமொழியும் பயின்றவற்றுட் சிறப்புற் றோங்
மேரோரு மிலக்கியமு மிலக்கணமுந் தருக்கமுமுற் றெளிதி னோர்ந்தே
பாராரும் வேதாந்தக் கேசரியாய்ப் பரசமயப் பகட்டை மாய்க்குங்
காராருந் தெருள்வள்ளல் காசிகா நந்தனடி கருதி வாழ்வாம்.

ஸ்வாமிநாத பிள்ளை.

அத்வைதவாரிநிதிசந்த்ரஜாதஸார—
வீசீஷு வாதஜநிதம் கிரு காசிகாயாம் |
ஸ்ரீநந்தவர்த்தநாஹ்வத்ருதநந்த்ருவுஷ்டி—
தஸ்மாத்த்வமிக்ஷத்ரும் நவநாத சேதந் ||

ஜெஜீயதாம் சிரம் காசி—
காநந்தாசார்ய ஸத்தம: |
பக்தாநுகார: ஸம்ஸார—
ஸிந்தௌ மக்நாந் ஸமுத்தர: ||

வி. ஆர். வேலப்ப பிள்ளை.

ஸ்ரீ காசிகாநந்த சுவாமிக ளவர்கள் இயற்றிய புத்தகங்கள்.

---

1. விஜய சக்தி (வெற்றி வேல்) – செந்திநாதையர் மஹா உக்ர வீரபத்திராஸ்திரத்திற்குக் கண்டனம்.
2. சூட்டுக் கோல் முதற் பாகம்.
3. ஷை இரண்டாம் பாகம். சொக்க லிங்கச் செட்டியார் தூர்வை யாசகப் படல மறுப்பு.
4. கடாவை யடக்குங் கட்டாரி. தூத்துக்குடி முத்தையா பிள்ளை கடாவிற்கு மறுப்பு.
5. கட்கங் கொண்ட காளியைச் செயிக்குங் காமாரி. சாமி யைய்யா தேசிகர் சைவ சித்தாந்த வைபவ மறுப்பு.
6. சிவ சங்கராவதாரம். சொக்க லிங்கச் செட்டியார் சோம சுந்தர மாலை மறுப்பு.
7 சந்நியாச விதி.
8. சமாதி விதி.
9. சந்நியாசப் பத்ததி மொழி பெயர்ப்பு.
10. பிரஹ்ம கீதை வசநம் மொழி பெயர்ப்பு. ரூ. 0—12—0
11. சாஸ்திர சித்தாந்த லேச தாத்பரிய சங்கிரகம். ஸ்ரீவாசுதேவப் பிரஹ்மேந்திர சரஸ்வதி ஸ்வாமிக ளவர்களியற்றி யதன் மொழி பெயர்ப்பு. 0—8—0
12. பிரஹ்ம சூத்திரமும் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் பாஷ்யமும். 3—0—0
13. பிரஹ்ம சூத்திரம். ஸ்ரீகண்டாசார்ய பாஷ்யம் 3—0—0
14. வேதாந்தப் பரிச்சேதம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. 0—4—0

[illegible]வ்வன் போத உரை. 0—8—0

[illegible]சார வுரை 0—6—0

[illegible]சிய நவநீத மூலமும், துறவு சுவாமிக ளென்னும் [illegible] ஞாந தேசிக ஸ்வாமிக ளவர்க ளியற்றிய [illegible]னமும் உரையும். 1—0—0

☞ "லோகோபகாரி" ஆபீசு,
கோமளீசுவரன் பேட்டை,
சென்னை.